# வெற்றிமணி

London
GERMANY

Vettimaniy

மணி 65

வைகாசி .May. 2015




Rathy
JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


# யாழ்ப்பாணத்துக் கிணற்றுப் பண்பாடு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

## “தந்தை செல்வா தமிழர்க்கு அச்சாணி“

லலீசன்





## உலகின் முதல் செல்பி

யார் தெரியுமா?



## தொழிலாளர் தினம் மே 1


ஆட்டம் – பாட்டம் – கொண்டாட்டம் வெற்றிமணி விழா



22.08.2015
Dortmund - Germany



Capture memories photography by
MITCHAM PHOTOCENTRE
PHONE: 020 8687 2284
PHONE:020 8687 2284
MOBILE: 079 5852 5412
Contact
ADDRESS
243 London Road
Mitcham



info@mitchamphotocentre.com

செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்
எம்மிடம் தாலிக்கொடிகள்
செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள்
பட்டுப்புடவைகள் அனைத்தும்
50% விலைக்கழிவில்
162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269





NEW IN STORES

U.K விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்
vai g 07788 195962




# பணத்துக்காக உழைத்தால் அவன் மனிதன்
# பணத்துக்காக பணம் உழைத்தால் அவன் பணக்காரன்!





**சிவஜெனனி அரவிந்தன்**

பலருக்கு வேலைக்கு போய் சம்பாதிப்பதென்பது விருப்பம் இல்லாத ஒன்று. வீட்டில் இருந்து கொண்டே பணத்தைப் பார்க்கலாம் என்றால் எவ்வளவு நல்லது என்று தான் பலர் நினைப்பார். ஆனால் ஒருவரும் இந்த நினைப்பை நிஜமாக்க முயல்வதில்லை.

பலர் அவர்கள் உழைத்த பணத்தை வங்கியில் கொண்டு போய் போட்டு விட்டு, வட்டி இவ்வளவு வரும் என்று எண்ணி பார்த்து விட்டு இருக்கிறார்கள். ஆனால் இதனால் வரும் வட்டி போதுமா?



## கடும் உழைப்பு இன்று கசந்துபோச்சு
## எடுத்த எடுப்பிலேயே காசு வந்தாப் போச்சு

இலண்டனை பொறுத்த வரை வங்கியில் பணத்தை போடாமல் இபபடி பணத்தை ஏதாவதில் invest பண்ணுவதால் அதிக லாபம் கிடைக்க வாய்ப்பிருக்கிறது. சிலர் பங்கு சந்தையில் share market ரில் போடுவார்கள். ஆனால் இதில் கொஞ்சம் கவனம் தேவை. இதைப்பற்றி அறியாதவர்கள் பெரும் நட்டத்திலும் போகலாம். ஏன் சில நேரங்களில் அதைப்பற்றி தெரிந்தவர்களுமே நட்டத்தில் போவதுண்டு.

ஆகையால் வீடுகளை வாங்கி அதற்கு பணத்தை செலவிடுவதன் மூலம் நீங்கள் செலவு பண்ணிய முதலைவிட இன்னும் அதிகமாக்குவதற்கு வாய்புகள் உண்டு.
பலர் வீடு என்றதுமே. இந்தளவிற்கு எம்மிடம் பணம் இல்லை என்று ஒரு நிமிடம் கூட சிந்திக்காமல் சொல்லிவிடுவார்கள். வீடு வாங்குவதற்கு ஒரு நிலையான வேலை மட்டும் இருந்தால் போதும் அதோடு நல்லதொரு credit score ரும் இருக்க வேண்டும்.

இலண்டனைப் பொறுத்த மட்டில் வீடுகள் என்பது எல்லோராலும் வாங்க முடியாது தான் ஏனென்றால் சாதாரண ஒரு சிறிய flat ரே £200.000 மேல் வரும்.

தமிழருக்கு UK என்றாலே London தான் நினைவிற்கு வரும். ஆனால் வேறு பல நல்ல இடங்கள் உள்ளது. அங்கெல்லாம் £50.000 இல் இருந்தே வீடுகள் வாங்கலாம். உதாரணத்திற்கு Cheshire, North West of England. இங்கு கிடைக்கும் வாடகை இலண்டனை விட அதிகம். ஒரு £12.500 (%25 deposit) முன் பணம் இருந்தாலே போதும். இந்தப் £12.500 சிலரிடம் இல்லை என்றால் உடனே சோர்ந்து விடக் கூடாது.

மனம் இருந்தால் இடமுண்டு என்பார்கள். நண்பர்களிடமோ சொந்தக்காரர்களிடமோ வாங்கலாம். அப்பாடி வாங்குவது விருப்பமில்லை என்றால். Credit card 0% வட்டியில் 24 மாதங்களுக்கு அப் பணத்தைப் பெற்றுக்கொள்ளணாம். அதை எப்படி கட்டுவது என்ற கவலை தேவையே இல்லை. அதற்கும் இப்படிப் பல வழிகள் உண்டு. உதாரணத்திற்கு 2 வருடங்களுக்குப் பின் நீங்கள் கடன் வாங்கிய வீட்டின் விலை அதிகரித்து இருக்கும். ஆகையால் வீட்டை நீங்கள் re mortgage பண்ணி பணத்தை எடுத்தக் கட்டிவிடலாம்.

இலங்கையில் ஓட்டுமடத்தடி கந்தர்மடம் என கட்டிடங்கள் அந்த இடத்தின் Land MarK அடையாளமாக ஆக மாக்கா உள்ளது. நல்லூரின் லாண்மாக்காக சங்கிலியன் மனையைச் சொல்ல முடியும்.
பணத்துக்காக உழைப்பவன் மனிதன்
பணத்துக்காக பணம் உழைத்தால் பணக்காரன்!

இப்படி ஒவ்வொரு நாடுகளிலும் அதன் நகரங்களில் லான்மாக்காக பல கட்டிடங்கள் உண்டு. நீங்கள் நினைத்தால் ஒரு நேரம் இந்த லான் மாக்கைக்கூட வாங்கலாம். ஒரு நேரம் நம்மவர்களே இங்கிலாந்தின் அடையாளமாகவும் மாறலாம். உழைப்பு உடலில் மட்டுமல்ல விவேகத்திலும் அது சேரவேண்டும்.

உழையுங்கள் விவேகமாக உழையுங்கள். வருவதில் ஒரு பகுதியை வறியவர்களுக்கும் வாரி வழங்குங்கள். இறைக்கிற கிணறு ஊறும் என்று ஊர்ப் பழமொழியும் உண்டு.







வெற்றிமணி

**தமிழ் எங்கள் உயிருக்கு மேல்**
—கவிஞர்.வி.க

ஓசை 224



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் **மு.க.சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் வித்தியாலயம்)

**பிரதம ஆசிரியர்**
“ஓவியக்கலைவேள்”
**கலாநிதி**
**மு.க.சு.சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

**“வெற்றிமணிமொழி”**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
**Vettimaniy Ltd**
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

Vettimaniy has no responsibility of the contents of the articles and advertisements

# தேசிய பாதுகாப்பு என்ற விடயம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமே?

## தேசிய பாதுகாப்பும் 19 ஆவது திருத்தச்சட்டமும்

**-அ.நிக்ஸன்-**

தேசிய பாதுகாப்பும் 19 ஆவது திருத்தச்சட்டமும்.
சுயாதீன ஆணைக்குழுக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சுயமாக செயற்பட இராணுவ தலையீ டுகள் அனுமதிக்குமா? பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமிக்க தேசிய பாதுகாப்பு இடமளிக்குமா?
-அ.நிக்ஸன்-



புதிய அரசாங்கத்தின் நூறுநாள் வேலைத் திட்டத்தில் 19 ஆவது திருத்தச்சட்டம் முக்கியமானது. குறிப்பாக நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து நாடாளுமன்றத்திற்கும் பிரதமருக்கும் அதிகாரங்கள் பகிரப்படும் என்பது குறித்து மக்களுக்கும் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது. ஆனால் வர்தமானி அறிவித்தலின் மூலப் பிரதியில் கூறப்பட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பது குறித்த விடயங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அரசியல் கட்சிகளும் தொழிற் சங்க அமைப்புகளும் குற்றம் சுமத்தியிருந்தன.

### ஆதரிக்க வேண்டிய தேவை

வர்தமானி அறிவித்தலின் மூலப்பிரதியில் கூறப்பட்டிருந்த நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுதல் என்பதும் ஜனாதிபதி மீண்டும் நாட்டின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் இருப்பதால் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள், பொறுப்புகள் கேள்விக்கு உட்படுவதாகவும் சில பொது அமைப்புகள் கூறியிருந்தன. முன்னாள் அமைச்சர் பீரிஸூம் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். ஆனால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பிரதமரின் அதிகாரங்கள் தொடர்பாகவே மக்கள் கருத்து கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் ஏனைய பகுதிகள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றும் கூறுகின்றது.
உயர் நீதிமன்றத்தில் இந்த தீர்ப்பை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்தபோது அதனை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர். அவ்வப்போது சில வாதங்களையும் முன்வைத்திருந்தாலும் சட்டமூலம் குறித்து முன்னர் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்து எதுவும் பேசப்படவில்லை. ஜாதிக ஹெல உறுமயவைப் பொறுத்தவரை பிரதமரின் அதிகாரங்கள் தொடர்பாகவே கேள்வி எழுப்பிருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஏற்றமுறையில் உயர் நீதிமன்ற தீர்ப்பு அமைந்து விட்டது. குறிப்பாக அமைச்சரவையின் தலைவராக பிரதமரை நியமித்தல், அமைச்சர்களின் எண்ணிக்கை, அமைச்சர் களுக்கான பணிகளை தீர்மானித்தல் உள்ளிட்ட 7 உப பிரிவுகளுக்கு மக்கள் கருத்து கணிப்பு நடத்தப்பட வேண்டும் என தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### ஹெல உறுமயவுக்கு ஆறுதல்

மக்கள் கருத்து கணிப்பு நடத்தப்பட வேண்டும் என நீதிமன்றம் கூறிய மேற்படி பகுதிகளை தவித்து விட்டு ஏனையவற்றை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என பிரதமரும் கூறியுள்ளார். ஆகவே ஜாதிக ஹெல உறுமயவுக்கு சட்ட மூலத்தை நிறைவேற்றுவதில் பிரச்சினை இருக்காது. 19 ஆவது திருத்தச்சட்டத்தை விரும்பியோ விரும்பாமலே புதிய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய தேவையும் உள்ளது. ஏனெனில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் 19 ஆவது திருத்த சட்டமூலத்தை வலியுறுத்தியிருந்தன.

குறிப்பாக தேர்தல், பொலிஸ், பகிரங்க சேவை போன்ற அரச திணைக்களங்களை சுயாதீனமாக செயற்பட வைப்பதற்கு ஏற் முறையிலும் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து நாடாளுமன்றத்திற்கும் பிரதமருக்கும் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் விடாப்பிடியாக நின்றது.
வடக்கு கிழக்கின் நிலைமை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பு வெளியிட்டாலும் இறுதியில் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்ப்பதன் மூலமாக சட்டமூலத்தை நிறைவேற்ற மறைமுகமான ஆதரவை அவர்கள் கொடுக்கலாம். ஆனால் சட்டமூலம் நிறைவேறினாலும் அது நடைமுறைப்படுத்தப்படுமா என்பது சந்தேகமே. ஏனெனில் குறைந்த பட்சமேனும் ஜனநாயக உரிமைகளை வலியுறுத்தும் சட்டமூலங்களை ஐக்கியதேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளும் விரும்புவதில்லை- உதாரணமாக 17 ஆவது திருத்தச்சட்டம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அமூல்படுத்தப்படவில்லை. இறுதியில் 2010ஆம் ஆண்டு முன்னாள் மஹிந்த ராஜபக்ச அந்த சட்டமூலத்தை ரத்துச் செய்து 18 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை அதிகரித்தார்.

அதேவேளை 19 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள சுயாதீன ஆணைக்குழு முறை உரிய முறையில் நடைமுறைக்கு வருமா என்பதும் சந்தேகம்தான். சிங்கள பிரதேசங்களில் நடைமுறைக்கு வந்தாலும் குறைந்த பட்சம் வடக்கு கிழக்கில் உள்ள அரச நிறுவனங்களை அரசியல் தலையீடுகள் இன்றி செயற்பட அரசாங்கம் அனுமதிக்கும் என்று கூற முடியாது. ஏனெனில் வடக்கு கிழக்கில் இராணுவ கட்டமைப்பு முறையிலான நிர்வாகம்

**தொடர்ச்சி 04 ம் பக்கம்**












# வானில் மீன் மழை அல்ல! கோழி மழை!!!

## KFC இன் இன்ப அதிர்ச்சி!!!

கடந்த 17ம் திகதி துபாயில் Kite Beach (அதாவது காற்றாடிகளைப் பறக்கிவிடும் கடற்கரை என்பதனால் இப்பெயர் வந்தது.) அங்கு மீன் மழை போல் சுடச்சுட கோழி மழை பொழிந்தது. அதுவும் சாதாரண கோழியல்ல கென்டக்கி சிக்கின் ஒன்றல்ல இரண்டு அல்ல மூவாயிரம்.

கடற்கரையில் பிற்பகல் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடிநின்றவேளை வானத்தில் ஒரு (helicopter) கெலி வட்டமிட்டது. அது தன் அடியில் இராட்சத அளவு பக்கெட்டை சுமந்து பறந்தது. அந்த பக்கெட்டில் KFC என்ற 3 எழுத்து பொறிக்கப்பட்டு இருந்தது. சிறிது நேரம் மேலே வட்டமடித்த பின்னர் கெலி மெதுவாகத் தரையிறங்கியது.

கெலிகாப்படரில் இருந்து கீழே இறங்கி வந்த கே.எப்.சி ஊழியர்கள், அந்த பெரிய பக்கட்டை திறந்தனர். ஆவி பறக்கும் சூட்டுடன் பக்கட்டில் வைத்திருந்த சுமார் 3000 சிக்கின் சான்விச்சுக்களை (3,000 chicken sandwiches) அங்கு கூடியிருந்தவர்களுக்கு இலவசமாக வழங்கினர்.

இதன் மூலம் நீங்கள் எந்த இடத்தில் இருந்து அழைத்தாலும், உங்களுக்கு சுடச்சுட பரிமாற நாங்கள் தயார். அது எவ்வளவு பெரிய ஆடராக இருந்தாலும் குறிப்பிட்ட நேரத்திற்குள் அதை விநியோகிப்போம் என்பதனை துபாய் மக்களுக்கு இந்த இலவச சேவை மூலம் கே.எவ்.சி உணர்த்தியுள்ளது. ஐக்கிய அரபு எமிரேடில் கடந்த 25 ஆண்டுகளாக இந்நிறுவனம் கால்பதித்துள்ளது.

## தேசிய பாதுகாப்பு...3ம் பக்கத் தொடர்ச்சி...

### இராணுவ நிர்வாகம் அனுமதிக்காது

உதாரணமாக இரணுவ எண்ணிக்கைகளை குறைக்க வேண்டும் என தென்பகுதி அரசியல்வாதிகள் விரும்பினாலும் இராணுவம் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. தேசிய பாதுகாப்பு என்ற விடயம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மாத்திரமே உரியதாக இருக்கின்றது. ஆகவே தேசிய பாதுகாப்பு என்ற எழுதப்படாத சட்ட ஏற்பாடுகளுக்கு முன்னால்19 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள சில நல்ல விடயங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரை செல்லுபடியற்றதாகி விடும்.

சட்டமூலத்தின் படி பொலிஸ் சேவைக்கும் சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு நியமித்தால் மாகாணங்களுக்கும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு முறை வரும்.

ஆனால் மாகாணங்களுக்கான சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படுமா என்பதும் சந்தேகமே. அவ்வாறு நியமிக்கப்பட்டாலும் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு பொலிஸ் ஆணைக்குழு நியமிக்கப்படமாட்ட வாய்ப்பில்லை.

ஏற்கனவே மாகாணங்களுக்கான 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள காணி பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்த கடந்த 28 ஆண்டுகளாக பதவியில் இருந்த ஜனாதிபதிகள் விரும்பவில்லை.

### இனப்பிரச்சினை தீர்வுக்கானது அல்ல

இந்த நிலையில் 19 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பொலிஸ் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டாலும் மாகாணங்களுக்கான சுயாதீன குழு முறை நடைமுறைக்கு வரக்கூடிய வாய்ப்புகள் இல்லையெனலாம். அதற்கான ஏற்பாடுகள் சட்டமூலத்தில் தெளிவாக இருக்கின்றதா என்பதும் சந்தேகமே. இந்த சட்டமூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கானது அல்ல. ஆனாலும் சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமனம் செய்யப்பட்டு அரச திணைக்களங்கள் சுயாதீனமாக செயற்பட இடமளிக்கின்றது.

அத்துடன் வடமாகாண சபையும் இராணுவ கெடுபிடிகளுக்குள் இருந்து விடுபட முடியும் ஆனால் அதற்கான ஏற்பாடுகளை புதிய அரசாங்கம் செய்யக் கூடிய வாய்புகள் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே இந்த சட்டமூலம் எந்த வகையிலும் தமிழர்களுக்கு நன்மைதராது. இலங்கையின் ஒட்டுமொத்த அரசியலமைப்பும் சட்ட ஏற்பாடுகளும் கடந்த 60 ஆண்டுகளாக தமிழர்களின் ஜனநாயத்தை உறுதிப்படுத்தாத நிலையில் 19 எம்மாத்திரம்?


100%
Satisfaction
Guarantee




Specialised
in Astro Palmist
(Tamil)



ஸ்ரீ மலையாளம் பகவதி ஜோதிட நிலையம்
உலகப்புகழ் பெற்ற இந்திய ஜோதிடர்
பண்டித் பி.கே.குருஜி
உறவுச்சிக்கல் குடும்பச்சிக்கல் நிதிச்சிக்கல் காதல் மோதல் குழந்தையில்லாப்பிரச்சினை வேலையில்லாப்பிரச்சினை திருமணப்பிரச்சினை வியாபாரம் கண்திருஷ்டி மாந்திரீகம் அனைத்துப்பிரச்சினைகளுக்கும். மைபோட்டுப்பார்த்து கண்டறிந்து பரிகாரம் செய்து 100 வீதம் நம்பிக்கையுடன் பிரச்சினைக்க தீர்வுகாண எங்கள் இல்லம் நாடிவாருங்கள்.
7 நாட்களும் காலை 9.00 மணி முதல் 2.00 மாலை வரை
பேசும்மொழி தமிழ் ஆங்கிலம் கிந்தி
Tel:
0049 152 1675 8175
0049 152 1025 7807
Wilhelm Str.27
59067 Hamm






Lakshmi Jewellery &Silks

பசுமையான மரக்கறிவகைகளும்
கடலுணவுப்பொருட்களும்
இவற்றுடன் பலசரக்குப் பொருட்களையும்
எம்மிடம்
மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

அனைத்து ஆடைகளும்
சிறப்புக் கழிவு விலையில்....

Asia super markt



Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729







# தலை மாற்றுச் சிகிச்சை!

## புராணங்களையும் இதிகாசங்களையும் இப்போ சாத்தியமாக்கும் மருத்துவம்!

சுவிகா பிரதாப்

நமது புராணங்களிலும் இதிகாசங்களிலும் உள்ள பல நிகழ்வுகளும் அங்கு இருந்த வாகனங்களும் ஏன் கடவுள்களும் கூட அறிவியலின் பார்வையில் கேள்விகளுக்கும் கேலிகட்கும் சந்தேகங்களுக்கும் உட்படுத்தப்பட்டது. அப்படி அறிவியலின் பார்வையில் பகுத்தறிந்து பார்த்தால் சிவனால் தலை துண்டிக்கப்பட்ட கடவுள் கணேசனுக்கு யானைத் தலையை பொருத்தி உயிர்தெழச் செய்தார் என்பது சாத்தியமா? சாத்தியமே என்று 21 ஆம் நூற்றாண்டு நரம்பியல் மருத்துவர் Dr.Serigo Canavoro கூறியுள்ளார்.

Dr.Serigo Canavoro, Turin Advanced Neuromodulation Group என்னும் அமைப்பின் உறுப்பினர். இவரது கோட்பாடு என்னவென்றால் மருத்துவம் இன்று அடைந்துள்ள வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பங்களைக் கொண்டு அறுவை சிகிச்சைவாயிலாக ஒருவரது தலையை வேறு ஒருவரின் உடல் மேல் பொருத்தி உயிர்பெறச் செய்யமுடியும் என்பதே. கேட்பதற்குச் சுலபமாகவும் அதிர்ச்சியாகவும், தோன்றினாலும் இந்தக்கோட்பாட்டின் பலன்கள் மற்றும் விளைவுகள் பற்றிய விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

இந்த அறுவை சிகிச்சை புற்றுநோய் மற்றும் தசை நரம்பியல் மண்டலப் பாதிப்பால் அவதிப்படும் நோயாளிக்கு தீர்வாக இருக்கும் என்று எதிர்பாக் கப்படுகின்றது.
விவாதங்கள் இக்கோட்பாட்டுக்கு சார்பாக இருந்தால் இந்த தலைமாற்றச் சிகிச்சை 2017 இல் சாத்தியமாக வாய்ப்புக்கள் உண்டு.

சிறுநீரக நோய்க்கு சிறுநீரக மாற்று சிகிச்சைபோல் தலைமாற்று சிகிச்சையும் இடம்பெறும் நேரம், பல தலைகள் களவு போக வாய்ப்புள்ளது. ஆனால் இந்தத் தலைகள் களவுபோனாலும் காட்டிக்கொடுத்துவிடுமே. காணமல் போனவர்கள் என்று பின் எவரும் இருக்கவும் வாய்ப்பில்லை. அப்படி தலை மாற்றினால் பின்பு என்னபெயர் வைக்கலாம் எப்படி அழைக்கலாம்.

இந்த ஆராய்ச்சி வெற்றிபெறவும், அதனால் மக்கள் பயனடையவும் தலை மாற்றும் முன்னோடிகளான நமது சிவனையும் கணேசனையும் வேண்டிக் கொள்வோம்.



பி-குறிப்பு. சந்திரனுக்கு போவது என்றால் என்ன? தலையே போவது என்றால் என்ன? தலை கொடுக்க நன்றியுடன் முன்வருவது நாயும் குரங்கும்தான்.
இதோ அன்று யேர்மனி கிழக்கு மேற்காக பிரிந்திருந்தபோது ஒரு நாய்க்கு ஒருதலை பொருத்தும் முயற்சிமேற்கொள்ளப்பட்டது.

இம்முயற்சி 13..01.1959 இடம்பெற்றது. 14.1.1959 Berlin-DDR, ஆனால் இதற்கான முதல் முயற்சி 1908 ஆண்டு மேமாதம் 21ம்தகதி இடம்பெற்றதாக தகவல்களும் உண்டு.

## இங்கிலாந்தில் சிறுவர்களின் விமானப் பயணத்திற்கு வரி நீக்கம்!

12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு விமானத்தில் போவதற்கு வரி கட்டத்தேவையில்லை. இது இங்கிலாந்தில் வந்திருக்கும் ஒரு சட்டம்!

மே மாதத்திற்கு முன்பாக நீங்கள் flight book பண்ணியிருந் தாலும் ஆனால் நீங்கள் பயணம் போகும் நாள் மே 1ம் திகதிக்கு பிறகாக இருந்தால் நீங்கள் air fare வரி கட்டத் தேவையில்லை. ஆனால் இந்த வரி கழிவு economy seats புக் பண்ணு பவர்களுக்கு மட்டுமே! Business class அல்லது first class சில் போகும் குழந்தைகளுக்கு அல்ல!

அடுத்த வருடம் 2016 பங்குனிக்குப் பின் 12 வயது என்பது 16 வயதிற்கு உட்பட்டோர் என்று மாறவிருக்கிறது. அத்தோடு மட்டுமல்லாது எந்த சீட் புக் பண்ணினாலும் அவர்களுக்கு இந்த airfare tax கழிவு இருக்கிறது.

உதாரணத்திற்கு 3 குழந்தைகள் உள்ள ஒரு குடும்பம் இந்த சலுகையால் கிட்டத்தட்ட £213 குறைவாக விமானச் செலவு வரும்.





வல்லைவெளி முனீசுவரர் முகப்பு 05.04.2015


வல்லைவெளி முனீசுவரர் பிற்புறம் (வீதியில் இருந்து பார்க்கும் போது தோற்றம்...) 05.04.2015

# வல்லைவெளியும் முனீஸ்வரரும்


வல்லைவெளி ஆஞ்சநேயர் 05.04.2015


வல்லைவெளிப் பிள்ளையார் 05.04.2015

**காலமாற்றத்திற்கேற்ப வழிபாட்டு முறையும் மாற்றங்காணத் தொடங்கிவிட்டது.**

**லலீசன்**

வல்லை முனீசுவரரின் செல்வாக்குக் குறைந்து விட்டதா? வல்லை வெளியால் பயணிக்கும் வேளையில் என் நெஞ்சைக் குடையும் கேள்வி இது.
1902 ஆம் ஆண்டில் வல்லைப் பாலம் கட்டப்பட்ட பின்னர் வடமராட்சிக்கும் வலிகாமத்திற்குமான இணைப்புப் பாதையாக வல்லைப் பாதையே விளங்குகின்றது. அதற்கு முன்னர் வடமராட்சி வலிகாமம் இணைப்புப் பாதையாக வாதரவத்தையே விளங்கியது. இதனால் ஒருகாலத்தில் வீரவாணி (வாதரவத்தை) செழிப்புப் பெற்ற ஊராகத் திகழ்ந்திருக்கிறது.

வல்லையினூடாக மக்கள் போக்குவரத்துச் செய்யப் பயந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. அது பாலைநிலச் சாயலைக் கொண்டிருந்தது என்பதற்கு அப்பால் அம்மையன், கந்தன், ஆட்குத்தி நாகன் எனப் பெருந்திருடர்களின் ஆட்சியும் அப்பிரதேசத்தில் ஒரு காலத்தில் நிலவியதாம்.
புறாப்பொறுக்கியை மையப்படுத்தி வல்லை முனியின் (முனீசுவரன்) ஆதிக்கம் நிலவியது. இவற்றிற்கெல்லாம் பயந்த மக்கள் வல்லை வெளியூடான பயணத்தைத் தவிர்த்தனர். கப்புது வாதரவத்தை - நீர்வேலி ஊடாகவே பயணம் மேற்கொண்டனர்.

காதலியாற்றுப்படை பாடிய வடமராட்சியைச் சேர்ந்த பேராசிரியர் கணபதிப்பிள்ளை வல்லை முனியைப் பற்றியும் திருடர்களைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“புறாப் பொறுக்கி ஆலென் பெருமரம்
தன்னைத் தன்வாழ் பதியெனக் கொண்ட
வல்லை முனியும் வாரிரு சங்கிலி
கலகல வென்னப் பலபல ஒலியொடு
தன்பரி வாரம் சார்ந்து சூழப்
பாதி யாம வேளை தன்னில்
கூகூ என்று குமுறிக் குமுறிப்
பற்பல உருவோடு எழுந்து இருந்தும்
இராவழி போந்திடு மாந்தரை அடித்துந்
தொல்லை செய்யும் பொல்லாத் தனியிடம்”

புறாப்பொறுக்கியை மையப்படுத்தி இருந்த முனீசுவரர் வல்லைக் கடல் நீரேரிக்கு அண்மையில் மையங்கொண்டார். அதற்குப் பின்னர் போவோர் வருவோர் உண்டியலில் காணிக்கை செலுத்தி வணங்கி தம்மைப் பாதுகாக்குமாறு வழுத்திப் பின் பயணந் தொடர்வதை வழக்கமாக்கினர்.
காலவோட்டத்தில் முனிசுவரருக்குப் பக்கத்தில் பிள்ளையாரும் சேர்ந்து கொண்டார். (பிள்ளையார் கோவில் வந்த காலம் பற்றி எனக்குச் சரியாக ஞாபகமில்லை. ஆனால் ஆமியின் வரவுக்குப் பின்னர்தான் இந்தக் கோவில் வந்தது என்கின்றனர்.)

போர்க்காலத்தில் வல்லை வெளிப் பயணம் உயிராபத்து மிக்கதாக விளங்கியமையால் பிள்ளையாரை நேர்ந்து வணங்கிப் பயணம் செய்வோருடைய எண்ணிக்கையும் பெருகியது. இதனால் முனீசுவரரை வணங்குகின்றார்களோ இல்லையோ பிள்ளையாரை வணங்கத் தவறுவார் இலர் எனக் கூறும் அளவிற்கு விநாயகரின் செல்வாக்கு மேலோங்கியது.
அண்மைக் காலமாக எதிரே ஓர் ஆஞ்சநேயரும் இங்கு தோற்றம் பெற்று விட்டார். (ஆண்டு சரியாக ஞாபகமில்லை. ஓர் ஐந்தாண்டுக்குள் இருக்கலாம்)
ஆக, வல்லை முனீசுவரர், அம்மையன், கந்தன், ஆட்குத்தி நாகன் என இவர்களை எல்லாம் இக்காலத்தவர்கள் மறந்து விட்டனர். விநாயகரும் ஆஞ்சநேயரும் செல்வாக்குப் பெற்று விட்டனர். காலமாற்றத்திற்கேற்ப வழிபாட்டு முறையும் மாற்றங்காணத் தொடங்கிவிட்டது.

இன்று 05.04.2015 வடமராட்சிக்குச் செல்லும் தேவை ஏற்பட்ட போது மூன்று கோவில்களுக்கும் மத்தியில் ஒரு பதினைந்து நிமிடங்கள் நின்று மக்கள் வழிபாட்டைத் தரிசித்தேன். ஒரு சில வாகனங்களைத் தவிர ஏனையவை யாவும் கோவிலடியில் தரித்தன. அதில் எல்லோரும் பிள்ளையாரைக் கைகூப்பித் தொழுதனர். சிலர் திருநீறு பூசினர். சிலர், அருகில் இருந்த இரப்போர்க்கு இரங்கி வழங்கினர். சிலர் ஆஞ்சநேயரையும் வணங்கினர். ஓர் ஐம்பது பேரை அவதானித்திருப்பேன். ஐந்துபேருக்குள்ளாகத்தான் வல்லை முனீசுவரரை வழிபாடு செய்தனர். இது ஏன் என்றுதான் என்னுள் விடை கிடைக்கவில்லை.
இதனைத்தான் முந்தி வந்த செவியை பிந்த வந்த கொம்பு மறைத்தது என்று சொல்லி வைத்தார்களோ?






# தமிழர் மரபுத் திங்கள் - வைகாசி

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்



தமிழர் வாழ்வியலில் காலத்தின் கடப்பு என்பது தெளிவாகவே உணரப்பட்டிருந்தது. இயற்கையின் தோற்றம் கண்டு நாளும் திங்களும் கடந்து செல்வதைத் தமிழர் கண்டனர். வெப்பமும் தண்மையும் அதனை மேலும் வேறுபடுத்திக் காட்டின. ஓராண்டுக் காலத்தில் ஏற்படும் இயற்கையின் மாற்றமான தோற்றப்பாடுகளைக் கூர்மையாகக் கண்காணித்துக் காலத்தை வகுத்துக் கொண்டனர். 12 திங்கள் ஓர் ஆண்டு என்ற பிற்காலக் கணிப்புக்கு முன்னர் தமிழர் வாழ்வியலில் 6 பருவங்க ளாகவே அடையாளம் காட்டப்பட்டிருந்தது. அதனைப் பண்டைய தமிழிலக்கியப் பாடல்கள் பதிவு செய்துள்ளன. அப்பதிவுகளைப் பண்டைய தமிழ்இலக்கணமான தொல்காப்பியம் சிறப்பாக வகுத்துக் காட்டியுள்ளது. தொல்காப்பியம் நூற்பாக்களிலே பதிவுசெய்துள்ள செய்திகளைப் பிற்காலத்தில் வந்த உரையாசிரியர்கள் உரைநடையிலே விளக்கி எழுதும்போது தமது காலத்து வழக்கையும் பதிவு செய்துள்ளனர். அவர்கள் ஆறு பருவங்களின் கால அளவை அக்காலத்தில் வழங்கப்பட்ட மாதங்களின் பெயர்களைக் கொண்டு வரையறை செய்துள்ளனர். அது வருமாறு:

கார் காலம்- ஆவணி, புரட்டாதி மாதங்கள்
உதிர் காலம் - ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்
முன்பனிக் காலம் - மார்கழி, தை மாதங்கள்
பின்பனிக் காலம் - மாசி, பங்குனி மாதங்கள்
இளவேனிற் காலம் - சித்திரை, வைகாசி மாதங்கள்
முதுவேனிற் காலம் - ஆனி, ஆடி மாதங்கள்

இக் கால வரையறையின்படி வைகாசித் திங்கள் பண்டைய இளவேனிற் காலமாகும்.

வைகாசித் திங்கள் வெப்பம் குறைந்த காலமாகும். விளைபொருள் வளம் பெறும் காலம். முக்கனிகள் மலிந்த காலம். வாழை, மா, பலா என்னும் முக்கனிகளின் பயன்பாடு தமிழரது வழி பாட்டு நடைமுறைகளில் சிறப்பாக இணைந்துள்ளது. வைகாசித் திங்கள் முருக வழிபாட்டில் பெரிதும் சிறப்புப்பெற்றுள்ளது. பூக்கள் மலரும் காலம். இளவேனிற் காலத்தில் வெப்பம் மிதமாக இருக்கும். மேலும் வைகாசித் திங்கள் விசாக நட்சத்திரம் முருக வழிபாடு சிறப்பாக நடைபெறும் நாளாகும்.

புத்த சமயம் தமிழர் பண்பாட்டில் செல்வாக்குப் பெற்றபோது மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியம் தோன்றியது. இதனை இயற்றியவர் சீத்தலைச் சாத்தனார். அதில் மணிமேகலை துறவு பூண்ட வரலாறு கூறப்பட்டுள்ளது. புத்த சமயக் கருத்துகள் விளக்கப்பட்டுள்ளன. அக்கருத்துகள் மூலம் புத்தரை வழிபடும் நடைமுறையும் தோன்ற வைகாசித் திங்களின் நிறைமதி நாள் சிறப்பான வழிபாட்டு நாளாக அச்சமயம் பேணுவோரிடையே நிலவியது. மேலை நாடுகளில் காலக் கணிப்பானது நான்கு பருவங்களாக வகுக்கப்பட்டுள்ளது. அவை வருமாறு:

பனிக் காலம்- Winter
-மார்கழி, தை, மாசி மாதங்கள்

இலைதளிர் காலம்- Spring-
பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்கள்

கோடை காலம் - Summer -
ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள்

இலையுதிர் காலம் - Autumn -
புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்

எனப் பெயர்பெற்றுள்ளன. இதில் வைகாசித் திங்கள் இலைதளிர் காலமாக உள்ளது. இக் காலத்தில் இலைகள் தளிர்க்கும். எங்கும் பசுமைக் கோலம் பரவும். வெண்பனியால் மூடப் பட்டிருந்த நிலம் மீண்டும் பசும்புற்றரையாக எழிற் கோலம் கொள்ளும். இலைதளிர் காலம் மேலை நாடுகளில் இயற்கையின் எழில் பரவும் காலமாக வெம்மையின் மென்மை பரவும் காலமாக மகிழ்வோடு எல்லோரும் எதிர்பார்க்கும் காலமாக உள்ளது.

மக்களுடைய வாழ்வியலில் உணவு, உடை என்பன இயற்கையால் நெறிப்படுத்தப்படுவதை இப்போது யாரும் உணர்வதில்லை. வைகாசித் திங்களில் மிதமான வெப்பநிலை காரணமாக சில இன மீன்கள் பெருகும். அந்த வகையில் 'விளை மீன்' என்னும் மீன் அதிகமாக இக்காலத்தில் கிடைக்கும். விளைமீன் காலம் எனவும் இக்காலத்தை உணவுப் பிரியர் அழைப்பதுண்டு. பனம் பொருளில் ஒன்றான ஒடியலும் இம்மாதம் வீட்டில் நிறைந்திருக்கும். ஒடியல் மாவையும் விளைமீன், காய்கள், பலாக்கொட்டை, பழப்புளி, செத்தல் மிளகாய் என்பன சேர்த்து ஒடியற் கூழ் காய்ச்சிக் குடிப்பர். ஆனால் இப்போது ஒடியற் கூழ் ஆண்டு முழுவதுமே காய்ச்சிக் குடிக்கும் வழக்கம் தோன்றிவிட்டது. விளைமீன் அல்லாத வேறு மீன் வகைகளையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் முன்னோர் பருவ காலத்திலே விளையும் பொருட்களையே உணவுக்குப் பயன்படுத்தினர். குறிப்பாக புலம்பெயர் தமிழர் வாழும் நாடுகளில் உணவு விடுதிகளில் ஒடியற் கூழ் ஆண்டு முழுவதும் அருந்தக்கூடிய விற்பனைப் பண்டமாக விளங்குகின்றது. விளைமீனின் வருகைக்காக வைகாசித் திங்களில் காத்திருக்கும் நிலையும் மாறிவிட்டது.

மேலைநாட்டில் வைகாசித் திங்கள் முதலாம்நாள் தொழிலாளர் நாளாக நினைவுகூரப்படுகிறது. 1889ஆம் ஆண்டு ஆங்கில மே மாதம் முதலாம் நாள் தொடக்கம் ஒவ்வோராண்டும் தொழிலாளர் நாளாக உலகெங்கும் விடுமுறை நாளாக அமைந்துள்ளது. பயிர்த்தொழிலில் தொழில் நேரம் இரவு, பகல் என்ற வேறுபாட்டையே அடிப்படையாகக் கொண்டு இருந்தது. ஆனால் கைத்தொழில் மனித னுடைய தொழில் நேரத்தை 8 மணியாக மாற்றவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியது. கைத் தொழில் புரட்சியால் இந்த நடைமுறை தோன்றியது.

வைகாசித் திங்களின் தமிழ்ப்பெயர் 'விடை' என்பதாகும். இத்திங்களில் நீராடல் செய்யும் நடைமுறை இருந்ததை புராணங்கள் பதிவுசெய்துள்ளன. 'விஷ்ணு ஸ்மிருதி' என்னும் நூல் இது பற்றிய பல விளக்கமான தகவல்களைத் தந்துள்ளது. வைகாசித் திங்கள் 'மாதவ மாதம்' என்றும் வழங்கப்படுகின்றது. இத்தகைய சிறப்புப் பெயர் ஏனைய திங்கள்கட்கு இல்லையென்பது குறிப்பிடத் தக்கது. வைகாசித் திங்கள் நம்மாழ்வார் என்னும் வை‘ணவ ஆழ்வார் பிறந்த திங்களாகவும் அமைந்துள்ளது. முருகன் அவதார நாளாகவும் புத்தர் பிறந்த நாளாகவும் வைகாசித் திங்களின் விசாகம் நட்சத்திரம் பெருமை பெற்றுள்ளது. திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் பிறந்த மாத மாகவும் வைகாசித் திங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்ட நாளாகவும் வைகாசி விசாக நாள் அமைந்துள்ளது. இத்தனை சிறப்புகளைப் பெற்ற இத்திங்களில் காஞ்சி வரதராஜப்பெருமாளை வழிபாடு செய்தால் நீண்ட வாழ்நாள், செல்வம், மக்கட்பேறு என்பன கிடைக்குமென்ற நம்பிக்கை தமிழரிடையே இன்றும் நிலவுகிறது.

எனவே இன்று நமது இளைய தலைமுறையினர் வைகாசித் திங்களைப் பற்றிய சிறப்புகளை அறிய வாய்ப்பளிக்க வேண்டும். நவீன விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் வளர்ச்சியை மட்டும் மனிதவாழ்வியலின் வழிகாட்டியாகக் கொள்ளாது பண்டைய தமிழர் வாழ்வியல் நடைமுறைகளையும் அறியவேண்டும். அவை எவ்வாறு காலத்தைப் பதிவுசெய்துள்ளன என்பதை நோக்கி நாம் வாழும் காலத்தையும் பதிவுசெய்ய வெண்டும். நமது காலத்து வரலாற்று நிகழ்வுகளையும் வைகாசித் திங்கள் பற்றிய எதிர்காலப் பதிவுகளில் நமது தலைமுறையினர் இணைத்து விடவேண்டும்.

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளனர்.
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de






# "தந்தை செல்வா தமிழர்க்கு அச்சாணி"

தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் 38 ஆவது ஆண்டு நினைவுநாட்பேருரை(யாழ்ப்பாணம்) 'தந்தை செல்வா தமிழர்க்கு அச்சாணி' ஆற்றியவர் :

**செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன்**

தமிழகக் கவிஞர் அப்துல் காதர் கவியரங் கொன்றிலே கல்லறை வாசகம் என்ற பொருளில் கூறிய கவிதைதான் எனக்கு முதலில் ஞாப கத்திற்கு வருகின்றது.

**மனிதா உன்னுடைய கல்லறை வாசகத்தைப் பார்த்தேன்**
**தோற்றம் என்று ஒரு திகதியிட்டிருக்கின்றார்கள்.**
**மறைவு என்று இன்னோர் திகதியிட்டிருக் கின்றார்கள்**
**இடையில் என்ன கீறு (....)**
**நீ பிறந்து எதையுமே சாதிக்கவில்லை என்பதைத் தான்அந்த வெற்றிடம் சுட்டுகின்றது.**

அன்பிற்குரியவர்களே! தன்னை அர்ப்பணித்து எம்மை வாழவைத்தமையால் 'தந்தை' என்ற பெயரால் அந்த வெற்றிடத்தை நிரப்பியவர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள். இன்று அவரது 38 ஆவது ஆண்டு நினைவுகளோடு நாமெல்லோரும் தந்தையின் சதுக்கத்தில் கூடியிருக்கின்றோம்.

தமிழ் மக்கள், தலைவர்கள் மீது வைத்துள்ள அன்பினால் உறவுமுறைப் பெயர்களை மரியாதை யாகக் கையாளும் வழக்கத்தைக் கொண் டுள்ளனர். தந்தை என்னும் போதும் தம்பி என்னும் போதும் உலகம் எங்கள் மண்ணைப் பார்க்கின்றது. அம்மா என்னும் போதும் அண்ணா என்னும் போதும் உலகம் தமிழகத்தைப் பார்க்கின்றது.

தந்தை என்பதை ஆகுபெயராகக் கொண்டு பெருமை பெற்ற பெருந்தகையின் நினைவுப் பேருரையை தந்தை செல்வா தமிழர்க்கு அச்சாணி என்ற பொருளில் ஆற்றுவதையிட்டுப் பெருமைய டைகின்றேன்.

இந்த உலகம் ஏன் வாழ்கின்றது என புறநானூற் றுப் புலவர்களுள் ஒருவரான கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி சிந்தித்தான். இந்திரருக்குரிய அமிர்தம் கிடைத்தாற்கூடத் தாம் தனித்து உண்ணாது பிறருடன் பகிர்ந்து உண்ணும் தன்மை கொண்டவர்களாலும், பிறர் அஞ்சுகின்ற காரியங்களைக் கண்டு தாமும் அஞ்சிச் சோம்பி இருக்காதவர்களாலும் பிறர்வாழ ஒரு காரியத்தைச் செய்வதனால் புகழ் கிடைக்குமெனின் அதற்காக உயிரை விடக்கூடியவர்களாலும் என்னதான் கோடி கோடியாக இலஞ்சம் கொடுத்தாலும் பழி வரக் கூடிய காரியமெனின் அதனைத் தவிர்ப் பவர்களாலும் - தமக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்கின்ற பெருந்தகைகளாலும்தான் இந்த உலகம் வாழ்கின்றது என்றான் இளம்பெருவழுதி.

"உண்டால் அம்ம இவ்வுலகம்... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் இக்கருத்தைப் பதிவு செய்தான்.
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்பது அவனது பாடலின் உச்சம் தொட்ட இடம்.
எங்கள் மண்ணில் இடம்பெற்ற இத்துணை கயமைத் தனங்களுக்குப் பிறகும் இத்துணை அழிவுகளுக்குப் பிறகும் இந்த மண் வாழ்கின்றது என்றால் மேற்சொன்ன பாடலின் கருத்தைத்தான் பொருத்திப் பார்க்கவேண்டியிருக்கிறது. தந்தை செல்வா போன்ற மாமனிதர்களின் தியாகத் தாலேதான் எங்கள் மண் வாழ்கின்றது.

தந்தை செல்வாவை வருடத்தில் இருமுறை நினைவு கூர்வதை இந்த மண் வழக்கமாக்கிக் கொண்டுள்ளது. அவரது பிறந்த தினமாகிய 31 மார்ச் 1898 இனையும் இறந்த தினமாகிய 26 ஏப்பிரல் 1977 இனையும் நினைவு கூரும் கடப்பாட்டில் நாம் உள்ளோம். எமது மரபிற்கு அமைய இறந்தவர் ஒருவரை மறைவு நாளில் நினைவு கூருவதே மிகவும் பொருத்தமானது என்பதற்கு அமைய இன்றைய நினைவஞ்சலி மற்றும் நினைவுப் பேருரை நிகழ்வில் பல நூற்றுக் கணக்கில் கூடியிருக்கின்றோம்.

தந்தை செல்வாவின் வாழ்க்கையில் மூன்று முக்கிய அம்சங்களை என்னால் இனங்காண முடிகின்றது. அவற்றுள் முதலாவது அவரது எளிமையான வாழ்க்கை மற்றையது தமிழர் இஸ்லாமியர் என அனைவரையும் ஒரு குடைக்கீழ் அரவணைக்கும் திறன் அடுத்தது கொண்ட கொள்கையில் உறுதித்தன்மை இம்மூன்றையும் எச்சந்தர்ப்பத்திலும் பேணியவராகவே தந்தை விளங்கினார்.

தந்தை செல்வாவின் மூன்றாவது சந்ததிக்குரிய வனாகவே நான் இருக்கிறேன். அவரைக் காணும் பாக்கியம் எங்களுக்கு இல்லை. ஆனால் அவரது ஆளுமைத் திறனை கற்கும் - கேட்கும் பேறு கிடைத்திருக்கிறது. இந்த வகையில் இளைய தலைமுறையைச் சார்ந்த ஒருவரது பார்வையா கக்கூட இந்த உரையை நீங்கள் கொள்ளலாம்.

அவரது ஆளுமை உருவாக்கத்தில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி கணிசமான பங்கை வகித்திருக்கின்றது. இரும்பு மனிதன் நாகநாதன், செல்வாவின் பிற்கால மைத்துனர் பார் குமாரகுலசிங்கம், சாம் ஏ.சபாபதி, பேராயர் குலேந்திரன் என எல்லோரும் சம காலத்தில் கல்லூரியில் கற்றவர்கள். அப்போதைய அதிபராக விளங்கிய ஜே.தொம்சன் காட்டிய மனவுறுதிச் செயற்பாடு ஒன்று அக்கால மாணவர்களிடத்தில் பாரிய செல்வாக்கைச் செலுத்தியதாக பேராயர் குலேந்திரன் எங்கள் பேராயர் எஸ்ஜெப நேசனுக்குத் தெரிவித்ததாக நூல் ஒன்றில் பதிவு இருக்கிறது.

அதிபர் தொம்சனின் பிள்ளைகள் இருவர் இரண்டாம் உலகப் போரில் இறந்தமைக்கு மதிப்பளிப்பதற்காக அக்கால ஆளுநர் பதக்கங் களுடன் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு வந்து பொதுக்கூட்டம் நடத்தி தந்தையாகிய அதிபருக்கு அப்பதக்கங்களைச் சூட்டினாராம். அதிபர் தொம்சன் கவலை கொள்வார் கதறி அழுவார் என்று எதிர்பார்த்த மாணவர்களுக்கு ஏமாற்றமே எஞ்சியதாம்.

அதிபர் தொம்சனின் மனவுறுதியை அன்று அந்த மாணவர்கள் கற்றுக் கொண்டார்கள்.
தந்தை செல்வாவின் ஆளுமைப் பண்பு உருவாக்கத்தில் இன்னோர் நிகழ்வு அவர் சென். தோமஸ் கல்லூரியில் ஆசிரியராகக் கற்பிக்கும் போது நேர்ந்தது. பி.எஸ்.சி. பட்டதாரியாகத் தேர்ந்த அவர் சட்டத்தரணியாவதற்கு முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். கனன் டிசேரன் என்ற அங்கிலிக்கன் மதகுரு பாடசாலையின் அதிபராக இருந்தார். அதிபர் மிகவும் கண்டிப்பானர். லீவை அனுமதிக்காதவர். தந்தை செல்வாவின் சகோதரர் நோயுற்ற வேளையில் அவரைப் பராமரிக்க விரும்பிய செல்வாவிற்கு அதிபரிடமிருந்து லீவு கிடைக்க வில்லை. அன்று செல்வா எடுத்த முடிவு வேலையை ராஜினாமாச் செய்வதாகவே அமைந்தது. இது அவரது உறுதியான முடிவு எடுக்கும் திறனுக்குச் சான்றாக அமைகின்றது.

வழக்கறிஞராகத் தொழிலாற்றிய தந்தை செல்வா நினைத்திருந்தால் பிரதம நீதியரசராகக் கூட உயர்ந்திருக்கலாம். சிவில் வழக்குகளில் மிகப்பிரபலம் பெற்றுத் திகழ்ந்த தனது செல்வாக்கைக் கையாண்டு கோடீசுவரராக வலம் வந்திருக்கலாம்.

ஆனால் தமிழ் இனத்திற்காக உழைப்பதையே தனது முதற்பணியாக எண்ணினார். இனத்திற்காக உழைத்து பிச்சாண்டியானார். ஊருக்காக உழைத்து ஒட்டாண்டியானார். இதனால் தமிழர்களை ஆற்றுப்படுத்தும் தந்தை ஆனார்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...



**நோய் ஆற்றுப்படுத்தலில் உங்கள் பங்கு – அறிவின் திறன்**





# ஒரு நோயாளிக்கு அவரது நோய் பற்றிய உண்மையைச் சொல்லவேண்டுமா?

**Dr. புஷ்பா கனகரட்டணம்** Ph.D., C. Psych.

நோயாளிக்கு அவரது நோய் பற்றிய உண்மை விளக்கம் கொடுப்பது அவசியமா? இல்லை அது அவரது நோயை மேலும் அதிகரிக்கமா?

”வாறவைக்கு இதுதான் உங்கட வருத்தம் எண்டு பேரெல்லாம் சொல்லி விளங்கப்படுத்தினால், பயந்திடுவினம். அதாலை நான் அதுகளை விளங்கப்படுத்திறதில்லை” ஒரு நேர்காணலின்போது இப்படி என்னிடம் கூறினார் ஒரு உளநல மருத்துவர். பொதுவாக நாங்கள் இப்படியான ஒரு சுகாதார-கலாச்சாரத்துக்கு பழக்கப்பட்டவர்களே. பிரச்சனையான ஒரு நோய் பற்றியோ ஆபத்தான ஒரு நிலை பற்றியோ நோயாளியிடம் சொல்வதால், அவர் அதிகம் யோசித்து இன்னமும் நோய்வாய்ப்பட்டுவிடுவார் என்ற நல்ல எண்ணத்தில், இப்படியான தகவல்களை அவர்களுக்கு தெரிவிக்காமல் விடுவது எம் போன்ற நாடுகளில் வழக்கம் தான். அத்தோடு, சொன்னால் அவர்களுக்கு எங்கே புரியப்போகிறது என்ற ஒரு எதேச்சையான ஆதிக்கப்போக்கும் சேவை வழங்குனர்களிடம் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அடிப்படையில் சேவை வழங்குபவர்களுக்கும் பெறுபவர்களுக்கும் இடையில் உள்ள ஆதிக்க இடைவெளியையே இது காட்டுகிறது.

அறிவுநிலை வேறுபாடுகள் கருதியோ, அல்லது மனத்தாக்கத்தை தவிர்க்கும் எண்ணம் கொண்டோ, தொழில் நிபுணர்கள் வெளிப்படையான தகவல் பரிமாற்றத்தை புறக்கணிப்பது, நன்மைகளை விடவும் தீமைகளையே கொண்டுவருகிறது எனலாம். அதுவும், புலம்பெயர் சூழலில், ஏன், உலகலளாவிய மட்டத்தில் கூட, இணையத்தளங்களும், பொதுவான தகவல் பரிமாற்றங்களும், நடைமுறையாகிவிட்ட காலம் இது எனும் போது, சேவை பெறும் நிலையில் இருக்கும் சாதாரண குடிமக்களுக்கும் தம் ஆரோக்கியம் சார்ந்த அறிவு இருக்கவேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும், தம்மைப்பற்றி, தம் நோயைப்பற்றி, விளக்கம் அளிக்கவேண்டிய ஒரு தேவை இந்த நாட்டில் இருக்கிறது. எம் தொடர்பாடல் தன்மையும், வழக்கமும், எம் நாட்டில் பலவருடங்களுக்கு முன் இருந்தது போல் அல்லாது, புலம்பெயர்ந்திருக்கும் சூழலுக்கு தக்கதாக இசைவாக்கமடைய வேண்டி இருக்கிறது. எம்மில் பலர், நெருக்கமான சமூகங்களில் வாழ்ந்தவர்கள். நாம் அன்றாடம் சந்தித்த மனிதர்கள் அனேகமாக எமக்கும் பரிச்சயப்பட்டவர்களாக இருந்தார்கள். ஒரே மொழியை, ஒரே கலாச்சாரத்தை நாம் பகிர்ந்து கொண்டோம். நம் உடல் உபாதைகளையோ, மனத்துன்பத்தையோ எளிதாக மற்றவர்கள் விளங்கிக்கொண்டார்கள். அதற்காக நாம் அதிக பிரயத்தனம் எடுக்கவேண்டிய தேவை இருக்கவில்லை. ஆனால், இங்கோ நிலைமை வேறு. பல கலாச்சார மக்களோடு தொடர்பாடல் செய்கிறோம். ஆங்கில மொழியில் நல்ல பரிச்சயம் தேவைப்படுகிறது. தமிழில் யோசித்து, ஆங்கிலத்தில் அதை வெளிப்படுத்த முனையும் போது, நாம் சொல்லவந்த விடயங்கள் திரிபு பட்டு போய்விடுகின்றன. ஆனால், அவ்வளவுக்கு அவ்வளவு, நம்மைப்பற்றிய சுருக்கமான, சரியான, தெளிவான சுகாதார தகவலை கொடுக்கவேண்டிய தேவையும் இங்கு அதிகமாகவே இருக்கிறது. இதுவெல்லாம் போதாதென்று, இன்னொரு வரவேற்கப்பட வேண்டிய சவால் என்னவென்றால், நாம் புதிதாக அறிமுகப்படுத்தும் தமிழ் சொற்கள். எந்த நோய்நிலைக்கு, எந்த தமிழ் சொல்லை பாவிப்பது? அதுவும், உளநல துறையில் இதுபற்றிய இணக்கம் துறைசார் நிபுணர்களிடமே இல்லை. இப்படியான ஒரு சூழலில், எம் ஆரோக்கிய நிலை சார்ந்த அறிவு எமக்கு ஒரு பலமாக அமைகிறது. ஏனென்றால், கலாச்சார மற்றும் மொழி, தொடர்பாடல் சார்ந்த சவால்கள் மலிந்திருக்கும் புலம்பெயர் சூழலில், தவறுகள் நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் அதன் விளைவுகள் கூட இன்னும் பாரதூரமாக மாறும் சந்தர்ப்பம் இங்கு இருக்கிறது.

உதாரணமாக, உளநல துறை சார்ந்து பார்த்தால், Depression என்ற பதத்தை, அதாவது தமிழில் மனச்சோர்வு அல்லது மன அழுத்தம் என்கிற பதத்தை, யதார்த்த பிறழ்வுடன் (psychosis) கூடிய நோய்நிலைகளுக்கு பலரும் தவறாக பாவிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இது ஒரு ஆபத்தான விடயமாகும். பொதுவாக, மனச்சோர்வு எனும் போது, சம்பந்தப்பட்டவர் மற்றவருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சந்தர்ப்பம் குறைவு. யதார்த்த பிறழ்வு நிகழும்போது இந்த சாத்தியக்கூறு ஒப்பீட்டளவில் மிக அதிகம். தவறான சொற்பதத்தால் விரும்பத்தகாத விளைவுகள் உருவாகலாம். மேலும் பலர், உளநல தாக்கத்தை விபரிக்க, ”ஏதோ ஒரு ளலஉாழ மாதிரி” என்பார்கள். உளநோய் பலவகையாக நம்மை தாக்கலாம். ளலஉாழ என்றால் எப்படி புரிந்துகொள்வது? ஆக, சிகிச்சை அளிக்கும் நிபுணர் சம்பந்தப்பட்டவர் நோய்நிலை (diagnosis) பற்றி விளக்கவேண்டியது மிக முக்கியம் அது அவர் கடமையும் பொறுப்புமாகும். தம் கேள்விகளை தெளிவாக கேட்டு, அதற்குரிய விளக்கங்களை பெறுவது சேவை பெறுபவர்கள் உரிமையாகும். இது பலமுறை நடப்பதில்லை. ”நான் வைத்தியரிடம் சொன்னேன்...அவர் ஒன்றும் சொல்லவில்லை” என்பார்கள். அல்லது, ”மஞ்சள் நிற குளிசை ஒண்டு தந்தவர் இரவுக்கு பச்சையிலை ஒண்டும் மஞ்சளிலை ஒண்டும் போடச்சொன்னவர்” என்பார்கள். ஆனால், எதற்கு மருந்து தந்தார் என்றால் சொல்ல தெரிவதில்லை. ”இதை போட்டால், தலையிடி குறையும் எண்டு சொன்னவர்” என்பார்கள். மருந்தின் பெயரை பார்த்தால், மனச்சோர்வுக்கான மருந்து என்பது புரியும். ஆக, தலைவலிக்கு மனச்சோர்வு தான் காரணம் என்று வைத்தியர் சொல்லவில்லை. ஏதோ, மாயமாக தலைவலி வருகிறது, அது பச்சை குளிசையை போட மாயமாக மறைந்துவிடுகிறது என்பது சேவை பெறுபவர், அதாவது மனச்சோர்வால் துன்பப்படுபவர் விளக்கம்.

எம் தாய்நாட்டு கலாச்சாரத்தின் இன்னொரு பிரச்சனை...தெரியாது என்பதை ஒப்புக்கொள்வது. அதிகார நிலையில் இருக்கும் துறைசார் நிபுணர்கள், ஒரு விடயம் தமக்கு தெரியாது என்றால் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். எம் பள்ளிக்காலத்தை மீட்டுப்பார்த்தால் புரியும். நமக்கு கற்பித்த ஆசிரியர்களில் யாராவது, ஒரு விடயம் தமக்கு தெரியாது என்பதை ஒப்புக்கொண்டிருக் கிறார்களா? அப்படியான அடக்கம், பணிவு கொண்ட ஆசிரியர்கள் மிக சிலரே. வைத்தியர்களோ, உளநல நிபுணர்களோ,

தொடர்ச்சி 12ம் பக்கம்...




**T.T.S.Brothers GmbH&Co.KG**

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

கதை சொல்ல ஓர் கதை...



## சிறுவர் அரங்கம்

மீரா. குகன்

# எமது தாய் மொழி தமிழ் மொழி

கோடை விடுமுறை வந்து விட்டாலே ரிதேஷ்க்கு குதூகலம் தான். அதுவும் இவ் ஆண்டு அப்பாவும் அம்மாவும் அவனை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதாக கூறியிருந்தனர். கடந்த முறை அதாவது மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது விடுமுறையை பாட்டா அம்மம்மாவுடன் கழித்த அந்த அழகான நினைவுகள் அவன் நினைவில் பசுமையாக இருந்தது. இம் முறை அமெரிக்காவிலிருந்து அவனது மாமாவின் குடும்பமும் கோடை விடுமுறையை கழிக்க அங்கே வருவதாக அம்மா கூறியிருந்தார். மாமாவுக்கும் ரிதேஷின் வயதை ஒத்ததாக ஒரு மகன் இருப்பதனால் இருவரும் சேர்ந்து விளையாடலாமென மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தான்.
ரிதேஷ் எதிர்பார்த்த நாளும் வந்தது.



ஜேர்மன் நாட்டில் வசிக்கும் ரிதேஷின் குடும்பம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். அம்மம்மா பாட்டாவின் வீடு மிக பெரிய அரண்மனை போல காட்சியளித்தது அவனுக்கு. பெரிய பெரிய அழகிய பூமரங்கள் வீட்டைச் சுற்றி காணப்படுவதனால் அவ்வீடு பூஞ்சோலை போன்று காட்சியளித்தாலும் ரிதேஷின் கண்களோ தன்னுடன் சேர்ந்து விளையாடப்போகும் மாமாவின் மகன் வினோத்தை தேடியது.

கதவருகிலிருந்து மெல்ல எட்டிப் பார்த்த அவனைக் கண்டதும் ரிதேஷின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ரிதேஷின் குடும்பம் மிக நீண்ட நாட்களுக்கு பின்னர் தமது உறவுகளை சந்திப்பதனால் ஒருவருக்கொருவர் தமது அன்பை பரிமாறிக்கொண்டனர்.
தாங்கள் கொண்டு வந்த பரிசு பொருட்களை பரிமாறிக்கொண்டு மாமா ரிதேஷ்யையும் வினோத்யையும் அறிமுகப்படுத்தி வைத்தார். அப்படியே „நீங்கள் இருவரும் சென்று விளையாடுங்கள் . வெளியில் விளையாடுவதற்கு உங்களுக்கு விருப்பம் இருக்கும்“ என்று உற்சாகப்படுத்தி அவர்களை பூந்தோட்டத்துக்கு அனுப்பியும் வைத்தார் .

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டே கொஞ்சம் வெட்கத்துடன் வெளியில் சென்றனர். ரிதேஷ் மெல்ல தயங்கியபடியே வினோத்தை நோக்கி தன் கையை நீட்டியவாறே ஹலோ வினோத், வி கேஹ்த்ஸ் டிர்? *(wie gehtes dir?)* என்று நலம் விசாரித்தான்? வினோத்துக்கு ஒன்றுமே விளங்கவில்லை.
பதிலுக்கு ஆங்கில மொழியில் ஐ அம் சொறி இ ஐ டிட்ன்ட் அன்டேர்சடாந்து A *(I am sorry, I didn't understand you)* என்று பதில் உரைத்தான்.

இருவருமே திகைத்து நின்றனர். ஒருவரை ஒருவர் விளங்கிக்கொள்ளாது எப்படி சேர்ந்து விளையாடுவது? எப்படி மற்றவரை புரிந்துக் கொள்ளுவது ? இருவருக்குமே புரியவில்லை. சைகையால் ஒருவருக்கொருவர் புரிய வைக்க முயன்றும் இருவருக்கும் பெரிதாக ஒன்றும் விளங்கவில்லை. ரிதேஷ் உடனே தான் கொண்டு வந்திருந்த கால்பந்தை காட்டினான். இருவருமே புன்னகைத்தபடி கால்பந்தாட்டம் விளையாடினார்கள்.
இருந்தாலும் தான் பேசுவது தன் தோழனுக்கு புரியவில்லை என்பது இருவருக்குமே கவலையை அளித்தது.

அடுத்த நாள் ரிதேஷ்யின் தந்தை, ரிதேஷ், மாமா வினோத்துடன் தனது நண்பர்களை சந்திக்க சென்றார். அவரது பால்ய நண்பர்களான அவர்கள் தமது பாடசாலை கால நினைவுகள் நிமித்தம் நண்பனை வரவேற்க ஒரு கால்பந்தாட்ட போட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.
ரிதேஷ்யும் வினோத்யும் ஒரே அணியில் தெரிவு செய்யபட்டார்கள். போட்டியும் மிக தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தது.
இரு அணியினரும் தலா ஒரு இலக்கை ஈட்டியிருந்தனர். ரிதேஷ்க்கு தமது அணி எவ்வாறாயினும் வெற்றி ஈட்ட வேண்டுமென்று ஆசையாக இருந்தது.

போட்டி மிகவும் தீவரமாக நடைபெற்று முடிவதற்கு இன்னும் 7 நிமிடங்களே இருந்தன. அவ்வேளை பந்து வினோத்தின் கால்களுக் அருகில் வந்ததை ரிதேஷ் கவனித்தான்.
எப்படி அவனிடம் பந்தை கேட்பது என்று சற்று யோசித்தான்.

உடனே அம்மா அவனிடம் எதுவும் வேண்டி கேட்கையில் ”தாங்கோ” என்று கூறுவது உடனே நினைவில் வந்தது. ரிதேஷ் சற்றும் தாமதியாமல் வினோத்யிடம் ”போல் தாங்கோ” என்று பலத்த குரலில் கேட்டான். வினோத்யும் உடனே அதை புரிந்துக் கொண்டு ரிதேஷ்க்கு பந்தை அடிக்க அவனும் பந்தை மிக லாவகமாக கொண்டு சென்று வலைக்குள் அடித்து தமது அணிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தான்.

ரிதேஷ்க்கும் வினோத்துக்கும் மட்டற்ற மகிழ்ச்சியாக இருந்தது. தம் இருவரினால் தமது அணி வெற்றியை தழுவியது குறித்து மிக பெருமையாகவும் இருந்தது. வீட்டில் அம்மா தம்முடன் தமிழ் கதைக்கும்போது கேட்ட சொற்களினாலேயே தாம் வெற்றியை ஈட்ட முடிந்ததையும் உணர்ந்தார்கள் . அவர்கள் இருவருக்கும் பொதுவான தாய் மொழி, தமிழ் மொழி என்ற பெருமையை அன்று இருவருமே உணர்ந்துக் கொண்டனர். விடுமுறை முடியும் முன்னர் அம்மம்மா பாட்டாவிடமிருந்து தங்கள் தாய் மொழியாம் தமிழ் மொழியை எப்படியும் கற்று விட வேண்டும் என்று இருவருமே திட சங்கற்பம் கொண்டார்கள்.

## யார் பின்னால் நாம் செல்லலாம்

யார் பின்னால் போக வேண்டும், யாருக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கவேண்டும் என்று சாஸ்திரம் சில விதிகளைச் சொல்லியிருக்கிறது.

பஞ்சமகா யக்ஞம் எனப்படும் ஐந்து வகை யாகங்களை தவறாமல் செய்யும்ஒரு வேதியர் வந்தால் அவருக்கு வழிவிட்டு பின்னால் செல்ல வேண்டும்.

கர்ப்பவதி வந்தால் அவளுக்கு வழிவிட்டு பின்னால் போ.

பசுக்கள் பின்னால் வந்தால், அதற்கு வழிவிட்டு பின்னால் போ.

யானை பின்னால் வந்தால், அதை முதலில் விட்டு பின்னால் நட.

தலையில் கனமான பொருளை எடுத்துக் கொண்டு ஒருவர் பின்னால்வந்தால், அவருக்கு வழிவிட்டு தொடர்ந்து செல்.




உங்கள் தாய் மொழியில்....
HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

8ம் பக்கத்தொடர்ச்சி....

## “தந்தை செல்வா தமிழர்க்கு அச்சாணி”





தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்
தந்தை செல்வா 1970

1970 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுற்றதும் தந்தை செல்வா வெளியிட்ட வாசகம் இன்று வரை பிரபலமானது. தமிழினத்தைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்பதே அந்த வாசகம் ஆகும்.

இதற்கான பின்புலம் என்ன? காலத்திற்குக் காலம் இனத்திற்குள் நிகழ்ந்த கழுத்தறுப்புக் களும் காட்டிக்கொடுப்புக்களும்தான் இதற்கான காரணம் என்பதைப் புரிந்திருப்பீர்கள். இதனால் ஆட்சியாளர்கள் எம்மை ஏமாற்றுவதையே வாடிக்கையாக்கிக் கொண்டிருந்தார்கள்.

ஜி.ஜி.பொன்னம்பலத்தால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்ட செல்வா 1947 இல் இடம்பெற்ற முதலாவது தேர்தலில் காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால் 1948 இல் பாராளுமன்றில் டி.எஸ். சேனநாயக்கா தலைமையிலான அன்றைய ஆட்சியாளர்கள் சிறுபான்மையினருக்கு எதிராகச் சதிகளை முன்னெடுத்தனர். இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமை பறிக்கபட்டது, கிழக்கு மாகாணத்தை கந்தளாய், கல்லோயா, அல்லை என மூன்று துண்டுகளாக திட்டங்கள் என்ற பெயரில் பிரித்து சிங்களக் குடியேற்றங்களை மேற் கொண்டனர். 1948 இல் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றினர்.

இத்திட்டங்களை அன்று இடதுசாரிகள் கடுமையாக எதிர்த்தனர். அரசுடன் சேர்ந்திருந்தவரும் டி.எஸ். மீது அபிமானம் கொண்டிருந்தவருமாகிய ஜி.ஜி.பொன்னம்பலம் அரசுடன் இணங்கி இத்தீர்மானங்களுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். தமிழர் தரப்பில் தந்தை செல்வா, கோப்பாய் கோமான் வன்னியசிங்கம், இரும்பு மனிதன் ஈ.எம்.வி. நாகநாதன் மற்றும் சிலரும் இக் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்தனர். இதனால் தமிழ் காங்கிரஸில் இருந்து வெளியேறினர். இந்தப் பின்புலத்திலேயே 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சி உதயமாகியது.
1947 தொடக்கம் 1977 வரை முப்பது ஆண்டுகள் தந்தை செல்வா கண்ட அரசியலில் அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் தீர்க்கதரிசனமானவை. இதற்கு 31.03.1963 இல் அவர் ஆற்றிய உரை சிறந்த சான்றாக அமைகின்றது.
“அரசாங்கத்தை அது போகிற போக்கிலேயே அழித்துவிடுவதில் அது வெற்றியீட்டிவிடும். இந்த நிலைமையை எதிர்நோக்க வடக்கு கிழக்கின் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற அரசியல் கட்சி மாத்திரமில்லாமல் சுதந்திர இயக்கமாகவும் விளங்குகின்ற தமிழரசுக் கட்சிக்கு மூன்று வழிகள் உண்டு. ஒன்று சரணாகதி, இரண்டு ஆயுதப் புரட்சி, மூன்று காந்திய வழி முறையிலான அகிம்சைப் போரும் சட்டமறுப்பும். முதலாவது வழியான சரணாகதி எமது மக்களுக்கு இழிவைத் தேடித்தருவதோடு நில்லாது அரசாங்கத்தின் இனஒழிப்புக் கொள்கைக்கு உதவியாகவும் இருக்கும். இரண்டாவது வழியான ஆயுதப் புரட்சி நடைமுறைக்கு ஒவ்வாததும் அறவழிக்கு முரண்பட்டதுமாகும்.
எனவே எமக்கு எஞ்சியிருப்பது மூன்றாவது வழிதான். அதாவது காந்தி முறையே”
இதனால்தான் தந்தை செல்வா ஈழத்துக் காந்தி எனப் போற்றப்பட்டார். தந்தையின் தீர்க்கதரிசனம் மிக்க உரையை இன்று யதார்த்தமாகக் காண்கின்றோம். தந்தைசெல்வாவின் தலைமைத்துவத்தை கவர்ச்சித் தலைமைத்துவம் அதாவது கறிஸ் மற்றிக் தலைமைத்துவம் என அடையாளப் படுத்தலாம். எந்த ஒரு தமிழ்த்தலைவரும் மேற்கொள்ளாத மேற்கொள்ள முடியாத செயலை தந்தை மேற்கொண்டார்.
தமிழரிடம் இருக்கக்கூடிய சாபக்கேடு பிரதேச வாதம் பேசிப் பிரிந்து நிற்பதும் சாதிய அடிப்படையில் சிறுமை கொள்வதும் ஆகும். ஆனால் தந்தையால் இதற்குப் பரிகாரம் காணமுடிந்தது. வடக்கையும் கிழக்கையும் தமிழர்களையும் இஸ்லாமியரையும் இணைக்கக் கூடிய சக்தியாக செல்வா திகழ்ந்தார். கிழக்கில் இருந்து இராசதுரை, காரியப்பர், முகமட் அலி, மசூர் மௌலான முதலிய தமிழர்கள் தந்தையின் தலைமையை ஏற்றுத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தனர்.
அத்துடன் இடர் கொண்ட சூழலிலும் நேர்மையாக அரசியல் செய்யலாம் என செல்வா நிரூபித்துக் காட்டினார். சிங்களத் தலைவர்கள் வாக்கு வங்கியை நிரப்புவதற்காக தமது சமயத்தை மாற்றிக் கொண்டார்கள், பெயர்களை மாற்றிக் கொண்டார்கள், தமது கொள்கைகளை மாற்றிக் கொண்டார்கள். ஆனால் தமிழ் மக்கள் அவ்வாறு எதிர்பார்க்கவில்லை. தமிழர்களுள் சிறுபான்மையினக் கிறிஸ்வராக விளங்கிய தந்தையை அவரது திறமைக்காக ஏற்றுக் கொண்டார்கள். அவர் வழி நடந்தார்கள். இது தமிழர்களின் உயர்குணத்தை எடுத்துக்காட்டக்கூடிய சான்றாகக் கொள்ளத்தக்கது.
இன்றைய சமூக நிலையில் இனம் புரியாத ஒரு அமைதி நிலவுகின்றது. பொதுவாக எல்லாரும் எதிர்கொள்ளக் கூடிய கொழுந்துவிடக்கூடிய பிரச்சினைகளின் தாக்கம் தணிக்கப்பட்டிருக் கின்றது. இதுகூட ஒரு வகையில் ஆபத்தானது தான். பொதுநிலையில் கருத்தொருமித்த சிறுபான்மையினர் ஒருமித்தமையால் அரசியல் மாற்றம் நேர்ந்தது. ஆனால் இந்த ஒற்றுமை சிறுபான்மையினரிடையே நின்று நிலைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.
தனிப்பட்ட அபிலாஷைகளை விருப்பு வெறுப்புக்களை முன்னிறுத்தி ஒவ்வொருவரும் வாய்க்கு வந்தபடி அறிக்கைகளை முன்னிறுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இது கனவுகளைச் சுமந்துகொண்டிருக்கின்ற ஓர் இனத்தினுடைய எதிர்பார்க்கைகளுக்கு உகந்தது அல்ல. இந்நிலையில் தந்தை செல்வா என்ற நாமமே அச்சாணியாக அமைந்து எல்லோரையும் ஒற்றுமைப்படுத்தக் கூடியதாக விளங்குகின்றது. செல்வாவுடைய நாமத்தால் சிறுபான்மையினர் எல்லோரும் ஒன்றிணைய வேண்டும். அவரது விழாக்களை நாயன்மாரது குருபூசைகளைப் போல நாடு முழுவதும் முன்னெடுப்பது இனங்களுக் கிடையில் மற்றும் பிரதேசங்களுக்கு இடையில் புரிந்துணர்வை விதைக்க வழிசமைக்கும். சிறுபான்மையினரது உரிமைகள் வென்றெடுக் கப்பட வேண்டுமாயின் சிறுபான்மையினரிடையேயான ஒற்றுமை அவசியமானதாகும்.
பிரித்தாளும் சூழ்ச்சிக்குள் சிறுபான்மையினர் அகப்படாதிருக்க வேண்டும். இதற்கு தந்தை செல்வா என்ற நாமம் உதவிபுரியும்.
தந்தை செல்வா பற்றிய உணர்வுத் தொற்றுகை இளையோரிடத்திலும் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய மார்க்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.
ஔவையாருடைய புறநானூற்றுப் பாடல் ஒன்றுடன் இவ்வுரையை நிறைவு செய்ய விழைகின்றேன். ஒரு நாட்டினது வாழ்வும் தாழ்வும் அந்த நாட்டுப் பௌதிக வளங்களில் தங்கியிருப்பதில்லை. நாடானால் என்ன? காடானால் என்ன? மேடானால் என்ன? பள்ளமானால் என்ன? எவ்விடத்திலே மக்கள் நல்லவர்களாக விளங்குகின்றார்களோ அவ்விடத் தில் நிலமும் அதாவது நாடும் நன்மை பெற்று வாழும்.

**நாடாகொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே**
**என்கிறார் ஔவையார்.**

எனவே ஒரு நாட்டினுடைய மக்களில்தான் நாட்டின் வாழ்வும் தாழ்வும் தங்கியிருக்கிறது. எங்களிடம் இருக்கக்கூடிய ஒற்றுமையே எங்கள் வாழ்வாக அமையும். தந்தை செல்வா என்ற நாமமே எங்கள் எல்லோரையும் இணைத்து வைத்திருக்கக்கூடிய தாரக மந்திரமாக அமையட்டும்.



உங்கள் அனைத்து
இல்லக் கொண்டாட்டங்களுக்கும்
100 இருக்கைகளுடன்
நீங்கள் விரும்பும்
சோடனைகளுடன்
every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €
Om Namaste
Indisches Restaurant
உங்கள் விருப்பம்போல் இலங்கை
இந்திய உணவுகளை சுவையாக
தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு
மக்களுக்கும் ஏற்ற வகையில்
பரிமாறக் காத்திருக்கின்றோம்.
Offnungszeit: 11.00 -24.00
all you can eat Buffet
daily from 11.00-22.00
only 6,-€
www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste
-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றூண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்!
உடன் தொடர்பு
கொள்ளங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82

9ம் பக்கத் தொடர்ச்சி....

## ஒரு நோயாளிக்கு...

தம் தகமைக்கு மீறிய விடயங்களை அந்தந்த துறைசார் வல்லுனர்களிடம் (specialists) விட்டுவிட வேண்டும். அவற்றை ஏற்றுக்கொண்டு, சேவை வழங்குபவர்களுக்கும் அதனை விளக்கவேண்டும்.

அதேபோல் தான் நாமும். ஒரு விடயம் புரியவில்லை என்றால், அதை அலட்சியமாக விட்டுவிடுவோம். எம்மில் பலருக்கும் நாளாந்த பாவனைக்கான ஆங்கில புலமை சாதாரணமாக இருந்தாலும், துறைசார் மொழி சிலநேரங்களில் ஒரு சவாலாக இருக்கும். இந்த சந்தர்ப்பங்களில், மொழி புரியவில்லை என்பதை ஒப்புக்கொள்வதில் வெட்கம், அல்லது அலட்சியம். ஒரு appointment க்கு போகும்போது, மொழிபெயர்ப்பாளர் அல்லது ஒரு மொழி தெரிந்தவரை கொண்டுசெல்ல தவறிவிடுகிறோம். இதனால் முக்கியமான தகவல்களை முழுமையாக அறிந்துகொள்ள முடியாமல் போகிறது.

மிக வேகமாக கணனி மயமாகிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கிறோம். வைத்தியசாலை பதிவேடுகளும் தற்போது கனணி மயமாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் காலம். இம்மாத NewYork Times ,y;> Steve Lohr> "The Healing Power of Your Own Medical Records" என்ற கட்டுரையில் நோய்விபரங்கள் எப்படி சேவை பெறுபவர்களின் நோய் ஆற்றுப்படுத்தலில் ஒரு பெரும் பங்கை வகிக்கிறது என்பது பற்றி விளக்குகிறார். தம் வைத்தியசாலை நோய் பதிவேடுகளை இப்போது நோயாளிகள் உடனுக்குடன் கணனி தகவல் பரிமாற்றம் மூலம் பார்க்கக்கூடிய வாய்ப்பை USA இன் சில வைத்திய குழுக்கள் இணைந்து அறிமுகப்படுத்தி வருகிறது. இந்த முயற்சி பல வரவேற்கத்தக்க மாற்றங்களை கொண்டுவந்திருக்கிறது என்கிறார்கள். இந்த திட்டத்தின் கீழ், வைத்தியர்கள் நோய் தகவல்களை கூடுதலான சிரத்தை எடுத்து பதிவு செய்கிறார்கள் என்றும், நோயாளிகள் மருந்து பாவனை மற்றும் பக்க விளைவுகள் சார்ந்த அறிவை அதிகம் பெறுவதால், சரியான முறையில், கூடுதல் ஒழுங்குடன் மருந்துகளை உட்கொள்கிறார்கள் என்றும் கண்டறிந்திருக்கிறார்கள்.

அத்தோடு, ஒத்த நோய்நிலை கொண்ட சேவை பெறுபவர் குழுக்களும் (patient networks) தமக்குள் அனுபவங்கள், மற்றும் சிகிச்சைகள் சார்ந்து தகவல்களை பரிமாறி கொள்வதால், நோய் ஆற்றுப்படுத்தலில் பல நன்மைகள் விளைந்திருப்பதாக சொல்லப்படுகிறது. இப்படி துரித கதியில் எம்மை சுற்றி மாற்றங்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில், ஞான சூனியமாக இல்லாமல், நாமும் நம் ஆரோக்கியம் சார்ந்த தகவல்களை சரிவர பெற்று, எம் ஆற்றுப்படுத்தலில் ஒரு முக்கிய பங்கை வகிக்கவேண்டி இருக்கிறது.

நோய்நிலைகள் (diagnosis) கல்லில் எழுத்துப்போல் ஒருவருக்கு எக்காலத் திற்கும் விதிக்கப்பட்டவை அல்ல. ஆனாலும் இந்த அறிவு எமக்கு அவசியம். சிகிச்சை அளிப்பவர்கள் கணிப்பு எவ்வாறு இருக்கிறது என்று தெரிந்து கொண்டால் தான், அந்த தகவலை சரியான முறையில் இன்னொருவரோடு பகிர்ந்து கொள்ளலாம். தன் நோய்நிலை பற்றி விளக்கம் பெறும் போது அது ஒரு ஆறுதலையும், விளக்கத்தையும் கொடுக்கும். விளக்கம் சரியாக இருந்தால் தான் அதற்கு ஒரு வழியையும் தேடலாம். தன் சிகிச்சையில் கூடுதல் பங்களிப்பு கொடுத்து குணமடையும் சாத்தியத்தை அதிகரிக்கலாம். புலம்பெயர் சூழலில் இது ஒரு கட்டாய தேவையாக இருக்கிறது.

## அதிகம் படிக்காமல் திறமையால் வென்ற நடிகர்கள்!!!




பள்ளிக்கூடம்போகமலே பரீட்சை எழுதாமலே பாஸ் பாஸ் சின்பதாஸ் பாடல் நினைவுக்கு வருகிறதா?

வாழ்க்கையில் முன்னேற என்ன தான் படிப்பு முக்கியமாக இருந்தாலும், திறமையும் அவசியம் வேண்டும். அப்படி அதிகம் படிக்ககாமல் தங்களின் திறமையால் முன்னேறியவர்கள் பலர். அதில் நமது சூப்பர் ஸ்டார், உலக நாயகன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழில் மட்டுமின்றி பாலிவுட்டிலும் நாம் எதிர்பார்த்திராத சில நடிகர்கள் அதிகம் படித்ததில்லை. இங்கு அப்படி அதிகம் படிக்காமல் திறமையால் பல ரசிகர்களை வென்ற நடிகர்கள் பட்டியலிடப்பட்டுள்ளனர். அவர்கள் யார் யாரென்று பார்ப்போமா!!!

ரஜினி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் அவ்வளவாக படிப்பில் கெட்டி இல்லாவிட்டாலும், தன் ஸ்டைலான நடிப்பால் பல ரசிகர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார்.

கமல்ஹாசன் உலக நாயகன் கமல்ஹாசன் அவர்களும் பட்டப்படிப்பு ஏதும் படிக்கவில்லை. சிறுவயதிலேயே நடிக்க வந்துவிட்டதால், இவர் நடிப்பில் கெட்டிக்காரராகி, பல ரசிகர்களை கவர்ந்துவிட்டார்.

அஜித் நடிகர் அஜித் அவர்கள் பத்தாம் வகுப்பு தான் படித்துள்ளார். பின் கஷ்டப்பட்டு தன் அட்டகாசமான நடிப்பால், திரையுலகில் கால் பதித்து, தற்போது முன்னணி நடிகர்களுள் ஒருவராக உள்ளார்.

தனுஷ் கோலிட்டில் இருந்து பாலிவுட் வரை தன் நடிப்பால் கலக்கிக் கொண்டிருப்பவர் தான் நடிகர் தனுஷ். இவரும் பட்டப்படிப்பு படித்ததில்லை. இந்தவரிசையில் பழம்பெரும் நடிகர்கள்தான் அதிகம் எனலாம்.









# தடம்புரளும் யாழ்ப்பாண நாகரீகம்!!!

சுபா

அங்கோ அவன் அரை நேரச்சாப்பாடு, இங்கோ இவர்கள் தொலைபேசியில் ஹலோ என்றவுடன் கிலோ கணக்கில் வருகிறது வெளிநாட்டுப் பணம். பின்பு என்ன குறைச்சல் நமது உறவுகளுக்கு. குடும்பத்தில் ஒருவர் வெளிநாட்டில் இருக்கிறார் எனின் இங்கு மற்றவர்கள் உழைப்பதை மறந்துவிடுகிறர்கள்.

ஒரு தாய் தன் மகனை பார்க்க சென்று வந்து கூறினாள். அங்கு அவன் ஒரு நேரம் வீட்டில் இருக்க நேரமில்லை, இரவு பகலாய் உழைக்கிறான். அவன் உடுக்கும் உடையைத்தான் நாம் இங்கு வீட்டிலே உடுத்துகின்றோம் என்று என்னடா அவர் உடுத்தும் உடையை இவர்கள் வீட்டிலே உடுத்துகிறார்களா என யோசித்தேன். நாம் வீட்டிலே போடும் உடைகள் மாதிரித்தான் அவன் அங்கு வெளியிலே உடுத்துகிறான் என்றார். அதுதான் உண்மை. அங்கு அவர்கள் இரவு பகல் பாராது வேலைகள் செய்கிறார்கள்.

எந்த வேலையானாலும் வேலை என்ற எண்ணத்துடன் ஏற்று கடுமையாக உழைக்கின்றார்கள். பாடுபட்டு அவர்கள் அனுப்பும் பணம் பற்றி இவர்கள் சிந்திப்பது இல்லை அண்ணா டொலராய் பவுன்ஸ்ஸாய் யூரோவாய் அனுப்புகிறார் நமக்கென்ன என்று சிந்திக்கிறார்கள்.

அது மட்டுமா? சில பெற்றோரே 'எடே தம்பி இங்கை பக்கத்து வீட்டு பையன் மோட்டார் சைக்கிள் வாங்கி ஓட்டுறான் இங்கை உன்ரைதம்பியும் நெடுக கேட்ட படி அடுத்த முறை காசு அனுப்பேக்க கூட அனுப்பிறியே? இது ஒரு அம்மா கேட்கும் கேள்வி. இங்கு இருப்பவனை ஒரு வேலைக்கு அனுப்பி சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் நீங்கள் வெளிநாட்டில் இருக்கும் போது தம்பிக்கு மோட்டார் சைக்கிள் இல்லை என்றால் மரியாதை இல்லை என்று சிந்திப்பவர்கள் தான் அதிகம். இதனால் வேலை பற்றியோ தாம் உழைக்க வேண்டும் என்ற சிந்தனையே அவர்களுக்கு எவ்வாறு ஏற்படும்.

தமது பிள்ளைகள் தம் காலத்தை வீணாக்குவதற்கு சில பெற்றோர்களே காரணமாகின்றனர். அவனுக்கு அண்ணை இருக்கிறான்தானே என்று சிந்திப்பவர்கள் அவனது எதிர்காலத்திற்க்கு ஒரு தொழில் வேண்டும் அதற்காக அவனுக்கு ஒரு சுயதொழிலையாவது உருவாக்கிக் கொடுப்போம் என்று சிந்திப்பதாய் இல்லை. வேலை இன்றி இருப்பவனிடம் பல பெறுமதியான கைத்தொலைப்பேசி கைவசம். வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தெருவிலை நின்று போவோர் வருவோரை படம் எடுக்கும் அந்த கைத்தொலைப்பேசியில். இப்படி இருந்தால் எம் நாடு எப்படி உருப்படும்.

அடுத்து அன்று ஒரு இணையத்தளத்திலப் பார்த்தேன் பக்கத்து வீட்டுப்பிள்ளை மோட்டார் சைக்கிள் வாங்கியதைப் பார்த்து இந்த வீட்டு அம்மா தன் மகனிடம் கேட்கிறா உன்ர தங்கச்சிக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொடு. பக்கத்து வீட்டுப்பிள்ளை பல்கலைக்கழகம் போகிறாள், மோட்டார் சைக்கிளில் இந்த வீட்டுப்பிள்ளை 8ம் வகுப்பே தாண்டவில்லை. இங்கு தன் பிள்ளைக்கு தானே மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொடுத்து ஊர் சுத்த அனுப்பும் இந்தத் தாய் தம் பிள்ளையையும் மற்றவர்கள் மாதிரி இருக்க வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். நல்ல நிலையிலே வாழ்வதற்கு வழிகாட்டுபவையைத் தெரிவு செய்து அதனை உதாரணமாக காட்ட முற்படவேண்டும்.

இன்று பாடசாலையில் கல்வி கற்பவர்களிடம் கைத்தொலைப்பேசி இருக்கிறது. 8 முதல் 80 வரை கைத்தொலைப்பேசியை கையில் வைத்து பாவிக்கின்றனர். தமது சொந்த பாவனையில் வைத்திருக்கிறார்கள். சிறுவர் கூட கைத்தொலைப்பேசி கையாளத் தெரிந்தவர்களாகவே இருக்கின்றார்கள். ஒரு வீட்டிலே கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று கைத்தொலைப்பேசி இருக்கும். அதனால் சேவைகள் இலகுவாக்கப்பட்டு வந்தன. அன்று பக்கத்து வீட்டு பரிமளம் அக்காவுக்கு இந்த வீட்டு அம்மா போன் எடுக்கிறா, என்ன விசயம் என்று பார்த்தால் பருப்பு அவியலை அதற்கு என்ன செய்யலாம் என்று கேட்பதற்கு கைத்தொலைப்பேசியில் செய்தி செல்கிறது. நம்ம நாட்டு தொழில்நுட்ப வளர்ச்சி இவ்வாறெல்லாம் முன்னேறியுள்ளது.

பாடசாலைக்கு சிலர் கைத்தொலைப்பேசி கொண்டு செல்கின்றார்கள் தனியார் கல்வி நிலையத்திற்கும் கொண்டு செல்கன்றார்கள். பிள்ளை போனுக்கு காசு முடிந்தது என்று கேட்டவுடன் பெற்றோர் காசு வழங்குகின்றார்கள். எவ்வாறு காசு முடிந்தது என்று கேட்டதாய் இல்லை. இது கைத்தொலைப்பேசியை வைத்து என்ன எல்லாம் பாடுபடுத்துமே யாரறிவார்?

தம்முடன் கல்வி கற்கும் பிள்ளைகளை படம் எடுப்பது, கைத்தொலைப்பேசி வழியில் இணையத்தளத்தில் இருந்து படங்கள் இறக்குவது ஆபாசப்படங்கள் பார்ப்பது இவ்வாறு சீரற்ற விடயங்களில் ஈடுபடுகிறார்கள். இதற்குக் காரணம் யார்?

இன்று பேஸ்புக் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. கூடுதலான வீடுகளில் கம்பியூட்டர், லப்டொப், போன் இவற்றில் பேஸ்புக்கை பார்க்கும் வசதி இருக்கிறது. அதனால் காலை முதல் மாலை வரை கூடுதலானோர் தவறாது செய்யும் காரியம் பேஸ்புக் பாவனையாகக் காணப்படுகின்றது. வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் அற்றோர் பல பேர் இருக்கின்றார்கள். அவர்கள் பொழுது இதிலேயே வீணடிக்கப்படுகின்றது.

தமக்கு தெரிந்த நண்பர்கள் தெரியாத நண்பர்கள் என்று பலரை இணைத்து அவர்களுடன் அலட்டுதல் (chatting) செய்வதற்கு காத்திருக்கும் ஒரு குழுவினர். இதன் விளைவுகள் பல. தெரியாத பலருடன் நட்புக் கொண்டு அதன் மேல் காதலாகி பின்பு அதன் இறுக்கத்தின் விளைவாக தந்தை தாய் பெயர் தெரியாத அனாதைக் குழந்தை குப்பைத் தொட்டியிலே. இது தான் இன்று காணப்படுகின்ற நாகரீக வளர்ச்சியா?

தொடர்ச்சி 14ம் பக்கம்....




Essen மாநகரில் புதிய உதயம்

Oviyan textiles

ஓவியன் ஆடைகள் உலகம்

Öffnungszeiten 11.00-19.00 Uhr

Tel:0201 330 99 464

அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான

அழகிய பஞ்சாபிகள், இமிற்றேசன் நகைகள் அனைத்தையும்

மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள், ஓவியன் ஆடைகள் உலகம்!

Handy 0177 73 98 346 / 0157 5721 7563

Ihn.Balasundaram
brobert@aol.nl

எசன் நகர பிரதான புகையிரத
நிலையித்தில் (Hbf) இருந்து
5 நிமிட நடைத்தூரம்

Baedecker Str.11
45128 Essen

# தடம்புரளும் யாழ்...

தொடர்ச்சி 14ம் பக்கம்

கோயில்கள் திருவிழாவின் போது செய்யும் விடயங்கள் எண்ணில் அடங்காதவை. கோயிலிலே வீடியோக்கள், போட்டோக்கள் என ஒரே அமளி. அடடா வீடியோ எடுப்பினமே அதற்கேற்றவாறு தானே நாம் உடையணிய வேண்டும் என்று உடையைத் தேடி எடுத்து அலங்காரம் செய்து வர கோயிலிலே சுவாமி வீதிவலம் வரும் காட்சியையாவது அவர்கள் பார்க்கக் கூடியதாக இருக்கும்.
இவ்வாறான விடயங்களால் பக்தியாக கோயிலுக்கு வருபவர்கள் கூட எங்கே எம்மைப் பார்த்து மற்றவர்கள் என்ன கதைப்பார்களோ என்று பகட்டான உடைகளைத் தேர்ந்தெடுத்து உடுத்தி அதில் ஏதாவது அழுக்குகள் பிரளாமல் பார்க்க நேரம் போதும் என்றாகிவிடும். இதில் எங்கே கடவுளைப் பார்க்க நேரம். நான் மட்டுமா? என்னை விட பார் அழகாக உடை உடுத்து வந்துள்ளார்கள் என்று அவர்களை மதிப்பீடு செய்யவே அவர்களுக்கு நேரம் போதும் என்றாகி விடும். கோயிலுக்கு வருபவர்கள் எல்லோரும் கும்பிடும் நோக்கத்துடனா வருகிறார்கள்.

தற்போது பத்திரிகையில் வரும் மரண அறிவித்தல்களை எடுத்துப்பார்த்தால் ஒரு பக்கம் அதற்காக ஒதுக்கிவிடுவார்கள். ஒரு சிலர் பத்துப்பிள்ளைகளும் வெளிநாடு அவர்கள் பெயரும் அதன் பக்கத்தில் அவர்களுக்குப் பட்டம் வழங்குவது போல் அடைப்புக்குறிக்குள் அவர்களது நாடு பெயர் இவற்றையெல்லாம் போட்டு போட ஒரு பக்கம். இதனைப் பார்ப்பவர்கள் இது ஒரு பக்கத்தில் வந்திருக்கு பக்குவப்படுத்தி வைப்போம் என்றா சிந்திக்கப் போகிறார்கள்? ஒரு நாளும் இல்லை. பணம் இருக்கு எமது வசதியைக் காட்டுவோம் என்று எதற்கு என்னத்தை செய்வது என தலைகால் புரியாது நடந்துகொள்கிறார்கள்.

வீதியிலே போகும் போது பார்த்தேன். பெரியளவில் ஒரு பனர் கட்டப்பட்டிருந்தது. ஏதோ விழாவிற்கான அழைப்பு என்று சிந்தித்து மெதுவாக வாகனத்தைச் செலுத்தி வாசித்தபோது தான் பார்த்தேன் அது ஒரு கண்ணீர் அஞ்சலி வெளிநாட்டுப் பணம் படுத்தும் பாடு தான் என்ன?

பத்திரிகையிலே பிறந்தநாள் வாழ்த்தும் வரும். தந்தைக்கு மகள் வாழ்த்து தெரிவிப்பார். மகளுக்கு தந்தை தெரிவிப்பார். இது எல்லாம் அவர்கள் வீட்டிலே வாழ்த்தினால் போதாதா? பத்திரிகையில் போட்டால்த் தான் வாழ்த்துப் போய்ச் சேரும் என்று ஏதாவது விதிமுறை இருக்கின்றதா? தன் பிள்ளைகள் தன் குடும்பத்தினரிடையே வாழ்த்த அவர்களுக்கு பத்திரிகை தூதாக செயற்படுகின்றது. ஒருவர் இறந்தால் அதனை துக்கவீடாக முன்னர் நடத்துவார்கள். நான் கடந்த வாரம் ஒரு மரணவீட்டிற்குச் சென்றிருந்தேன். இறந்தவரின் தலைப்பக்கத்தில் சிறிய கதிரையில் ஏதோ வைக்கப்பட்டிருந்தது. முன்னர் குத்துவிளக்கு ஏற்றித்தான் நான் கண்டிருக்கிறேன். இது என்ன ஏதோ தெரிகிறது என்று போய்ப் பார்த்தால் லப்டொப் கொம்பியூட்டர் வைக்கப்பட்டிருக்கு.

ஏன் இதை வைத்திருக்கிறார்கள் என்று பார்த்தால், பிள்ளைகள் வெளிநாட்டிலே இங்கு வர கஷ்ரம்தானே அது தான் தாயாரின் மரணவீட்டை நேரடியாக ஸ்கைப்பில் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். சரி என்ன நடக்கிறது என்று பார்த்தால், கிரியை செய்ய ஐயர் வந்திருக்கிறார், அவருக்கு முன்னாலேயும் லப்டொப் நடனமாடுகின்றது. ஐயருக்கும் லப்டொப்பைப் பார்த்து கிரியையைச் செய்வதற்கு தடுமாற்றம். பெற்றோருக்கான கடமையைச் செய்ய யாரும் இல்லை அதனை நேரடியாகப் பார்த்து துக்கத்தில் பங்கு கொள்கிறார்களாம். அட கோயிலில் மட்டும் தான் திருவிழாவை நேரடியாக ஒளிபரப்புச் செய்ய முடிமா?

இங்கு கூட மரண வீட்டை நேரடியாக ஒளிபரப்புச் செய்கிறார்கள். அது மட்டுமா கெட்போனில் அதில் பச்சை சீலை பக்கத்துவீட்டு பரமேஸ் அக்கா மகள் நீல சேட்டு சாமிநாதன் அந்த அக்கா இவர்கள் கதைப்பதைக் கேட்டு தன்னை அல்லவா கூப்பிடுகினம் என்று போனால் அவர்கள் வருபவர்கள் எல்லோரையும் நேரடியாக அறிமுகம் செய்கிறார்கள் வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு.

முன்னர் திருமண வீடு என்றால் எழுத்து அதாவது பதிவுத் திருமணம் முதலிலே நடந்து விடும் பின்பு திருமணம். ஆனால் இப்போது அப்படியில்லை. பதிவுத்திருமணம் திருமணத்தன்றே பின்னேரம் நடைபெறும். திருமணத்தின் போது பல ஏற்பாடுகள் பின்னேரம் கூறை மாற்றி பதிவுத் திருமணத்திற்கு வேறு உடை மாற்றி அதற்கேற்ற நிறத்திலே கேக் வெட்டினார்கள். என்னடா இவ்வளவு பெரிதாய் கேக் இருக்கிறது என்று பார்த்தால் அது கேக் அல்ல வெறும் றெஜிபோம் அதற்கு அவர்கள் செலுத்தும் பணம் 6 ஆயிரத்திற்கும் மேல் பெறுமதி.

அதனை பதிவுத்திருமணம் முடிந்த உடனே திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தம் வேறு. மறுநாள் மணமகன் வீட்டிலே வரவேற்பு நிகழ்ந்தது. அங்கேயும் ஒரு கேக் (றெஜிபோம்) காத்திருக்கும் சரி இத்துடன் முடிந்து விட்டதா என்று பார்த்தால் இல்லை. மறுநாள் மணமகள் வீட்டில் வரவேற்று நிகழ்வு அங்கேயும் அவர்கள் சேலைக்கு ஏற்ற நிறத்தில் அதில் வேறு வித கேக். ஒரு ஐந்து நிமிடம்தான் அதை வைத்து படம் எடுத்தார்கள். அதற்காக அவர்கள் செலவிடும் பணத்தை பற்றி யாரும் சிந்தித்தாய் இல்லை.

இன்று பிள்ளைகளுக்கு பெற்றோர் தாராளமாக பணத்தை வழங்குகிறார்கள். இவர்கள் இதை வைத்து என்ன செய்கிறார்கள் என கேட்க யாரும் இல்லை. தமக்குப் பணம் இருக் அதனைக் கொண்டு பார்க், பீச் என்று சுத்துகிறார்கள். பெற்றோரும் அவர்கள் எங்கு போகிறார்கள் வருகிறார்கள் என்று சிந்தித்தாய் இல்லை. இதனால் கல்வியை கைவிட்டு காதலில் ஈடுபடுகிறார்கள். தமக்காக வீட்டில் வாங்கி வைத்த நகைகளுடன் காதலனுடன் ஓடுகிறார்கள்.

அவற்றை வைத்து உண்ணுகிறார்கள். அவை முடிந்தவுடன் காதலனால் கைவிடப்பட்ட நிலையில் தற்கொலையை நாடுகிறார்கள் அல்லது தம் வயிற்றிலே பிள்ளைகளைச் சுமந்து கொண்டு தம் வாழ்க்கையை நிர்ணயிக்க முடியாது அல்லல்ப்படுகிறார்கள். வசதிகள் கூடும் போது கல்வியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது. நாம் படிப்பது இந்தப் பணத்திற்காகத்தானே எம்மிடம் தான் இந்தப் பணம் இருக்கின்றதே பின்பு ஏன் நாம் படிப்பான் என்ற யோசனை ஏற்படுகின்றது.

அதனால் கல்வியில் அக்கறை இல்லாமல் காணப்படுகிறார்கள். பணம் பத்தும் செய்யும் என்பார்கள் இப்போ இங்கு பணம் என்ன எல்லாம் செய்கிறது. அதனால் தான் முன்னர் கூறியிருக்கிறார்கள் போல 'ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு' என்று.




பேராசிரியர் அ. சண்முகதாஸ்





# யாழ்ப்பாணத்துக் கிணற்றுப் பண்பாடு

நீர் எங்கள் வாழ்வுக்கு இன்றியமையாதது. ஓர் அரசு தன்னுடைய குடிமக்களுக்குத் தூய்மையான குடிநீர் வழங்கும் பெரிய பொறுப்பினை உடையது. ஆறு, ஏரி, குளம், கிணறு ஆகியன குடிநீர் வழங்குவன. இலங்கையிலே சிங்கள மக்கள் வாழும் இடங்களிலே ஆறுகள் உண்டு. அவர்களுடைய ஆற்றுப் பயன்பாடு "ஆற்றுப் பண்பாடு" ஒன்றினை உருவாக்கியுள்ளது. ஆனால், யாழ்ப்பாணம் ஆறில்லா இடம். கிணறுகள் பல நீர் வழங்கும் நிலைகளாயுள்ளன. இதனால் இங்கே ஒரு கிணற்றுப் பண்பாடு உருவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பண்டைக் காலத்திலிருந்தே வரண்ட இடமாக இருந்துள்ளதாக செவி வழிக் கதைகளாலும் சில இலக்கியச் சான்றுகளாலும் அறிகிறோம். யாழ்ப்பாடி என்ற ஒருவன் யாழ் வாசித்து மணற்றிடர் எனப்படும் இப்பகுதியினைப் பரிசாகப் பெற்றான் என்று ஒரு கதை கூறுகின்றது. மலை எதுவும் இல்லாத இந்நிலத்திலே ஆறு ஊற்றெடுத்தோட வழியில்லை. நல்ல நீரினை தேக்கி வைத்தே யாழ்ப்பாண மக்கள் பயன்பெற வேண்டியவராயுள்ளனர்.

இயற்கை அன்னை மக்கள் வாழ்வுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து கொண்டேயிருக்கிறாள். உலகளாவிய வகையில் இந்த உண்மையினை நாம் உணரக்கூடியதாயுள்ளது. இவ்விடத்தில் யாழ்ப் பாணத்துப் பூப்பௌதிக அடிப் படையில் நிலத்தின் கீழ் உள்ள பாறைகள் பற்றி நாம் விளக்கமாக அறியும்பொழுது மணற்றிடருக்கு இயற்கை அன்னை குடிநீர் வழங்கச் செய்துள்ள ஏற்பாட்டினை உணர்ந்து மகிழலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ்ப் பகுதிகளில் சுண்ணக் கற்பாறைகள் காணப் படுகின்றன. இவை மயோசீன் காலப் பாறைகள் எனப் புவியியலாளர் கூறுகின்றனர். யாழ்ப்பாணச் சுண்ணக் கற்பாறைகள் நன்கு உருவாக்கம் பெற்ற அடையற் பாறைகளாக உள்ளன. இப்பாறைகளூடாகவே தரைக்கீழ் நீர் மேலே எழுகின்றது. இதன் காரணமாக யாழ்ப்பாணம் கிணறுகள் நிறைந்த நாடாக அமைந்துள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கடல்வழி பயணித்தவர்கள் இவ்வுண்மையை உணர்ந்துள்ளனர். அவர்களுள் ஒருவர் யாழ்ப்பாணக் கிணறுகள் பற்றித் தன்னுடைய நூலிலே குறிப்பிட்டுள்ளார்.

இன்று ஒவ்வொரு வீட்டிலும் கிணறு அமைக்கும் வழக்கம் உண்டு. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னர் ஊர்கள் தோறும் பொதுக்கிணறுகளே அமைக்கப்பட்டன. பொதுக்கிணறு ஆண் பெண், இளையோர் முதியோர் என்ற வேறுபாடின்றி எல்லோ ரும் வந்து நீர் பெறவும், குளிக்கவும், உடை தோய்க்கவும் பயன்பட்டது. பலர் வந்து ஒரு கிணற்றினைப் பயன்படுத்தும்போது அங்கு செய்திப் பரிமாற்றம் நடைபெற்றது. நகை யாடி மகிழ்ந்தனர். சில வேளைகளில் சண்டைகளும் கூட நடைபெற்றன.

தற்கொலை செய்யவும், கொலைசெய்து பிணத்தைத் தூக்கிப் போடவும் கிணறுகள் பயன்பட்டன. காதலர் சந்திக்கும் இடமாகவும் அமைந்தது. கிணற்று நீர் குளிர்காலத்திலே சூடாகவும், சூடான காலத்திலே குளிராகவும் இருப்பதால் இந்நீரை எந்நேரம் பயன்படுத்தக் கூடியதாயுள்ளது. எம்முடைய நீர்ப்பயன்பாடு பல சுவையான தன்மைகளை உடையது. சில கிரியைகளுக்கும் கொண்டாட்டங்களுக்கும் புதுநீர் கொள்வது வழக்கம். தைப் பொங்கல் அன்று காலையிலே பொங்குவதற்குப் புது நீர் கொண்டுவரும் வழக்கம் உண்டு. இத்தகைய புதுநீர் கிணற்றிலேயே பெறப்பட்டது. இது நீர் வழிபாட்டின் எச்சமாக அமைகின்றது. நீர் வழிபாடு தமிழர்களிடையே பண்டைக்காலத்திலிருந்து வந்தது. அவ்வழிபாடு மழை நீர், ஆற்று நீர், கடல் நீர் ஆகியவற்றின் தொடர்புடைய தாகவே அமைந்தது. கிணற்று நீர் வழிபாடு தொடர்புடையதாக இருந்தமைக்குச் சில சான்றுகள் காட்டலாம்.
கிணறு தோண்டித் தண்ணீர் ஊற்றெடுத்தவுடன் கிணறு வெட்டியவர்கள் அக்கிணற்றுக்கருகே பொங்கலிட்டு மடை பரப்புவர். இது இன்றும் நிகழ்ந்து வருகிறது.

யாழ்ப்பாணச் சுண்ணக்கற் பாறை காரணமாக சில இடங்களில் வற்றும் கிணறுகளும் சில இடங்களில் வற்றாக் கிணறுகளும் அமைந்துள்ளன. கிணறு வெட்டுபவர்கள் சிலவேளைகளில் மிக ஆழமாக வெட்ட வேண்டிவரும். எப்பொழுது ஊற்றுக்கண் திறந்து நீர்வரும் எனச் சிலவேளை பல நாட்கள் அவர்கள் வருத்தத்துடன் வெட்டுவர்.

ஆயக்கடவைப் பிள்ளையாரை ஊற்றுக் கண்ணைத் திறந்து வைக்கும்படி பிரம்மஸ்ரீ க. கணேசையர்: "ஆட்டாதே எங்கள் அரனார் திருமகனே, கோட்டாலே குத்திக் கூவத்தைக் காட்டிடுவாய்" என்று பாடுகிறார்.

கிணறு வெட்டுவதன் முன்னம் நிலையம் எடுக்கும் வழக்கம் உண்டு. நல்ல தண்ணீர் மேல் நிலையில் எங்கே தரைக் கீழ் இருக்கின்றதெனச் சில சிறிய பரிசோதனைகளூடாகக் குறித்துக் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். தம்மடைய அருட்சிறப்பாலே இத்தகைய நிலையங்களை இனங்கண்டு கூறும் வழக்கம் யாழ்ப்பாணத்திலே இருந்து வந்துள்ளது. அளவெட்டி கலாநிதி அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் இக்கலையிலே வல்லவர்.



தொடர்ச்சி 18ம் பக்கம்....











# தொழிலாளர் தினம்

இரண்டு நண்பர்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்துக் கொண்டால் என்ன பேசுவார்கள் ?
”டேய் மச்சி.. எப்படிடா இருக்கே ?” என்பது முதல் கேள்வி.
”என்னடா பண்றே” என்பது இரண்டாவது கேள்வி.
இந்த இரண்டு கேள்விகளைத் தாண்டித்தான் பெரும்பாலான உரையாடல்கள் அடுத்த கட்டத்துக்குச் செல்லும்.

”உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்
உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்” என்றார் பாரதியார்.

நமக்கு தொழில் என்பது வருமானத்தை ஈட்டும் ஒரு விஷயம் மட்டுமல்ல. அது நமது அங்கீகாரம். நமது வாழ்வின் ஒரு அடையாளம். வேலையில்லாமல் இருப்பது என்பது நமது பொருளாதாரத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டதல்ல, அது நமது சுயத்தையும் சார்ந்தது.

இது இன்று நேற்று தொடங்கியதல்ல. தானே ஒரு தொழிலாளியாய் மாறி உலகத்தை உருவாக்கினார் கடவுள். ஆதாமைப் படைத்து சர்வமும் நிரம்பியிருந்த ஏதேன் தோட்டத்தில் வைத்தவர், கூடவே ”இந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும் வேண்டும்” என ஒரு கட்டளையையும் கொடுத்தார். உழைப்பின் தேவை கடவுளிடமிருந்து ஒரு கட்டளையாகவே மனிதனுக்கு வந்தது. இயேசுவும் தனது இளமைக் காலத்தில் ஒரு தச்சுத் தொழிலாளியாக பணியாற்றினார்.

இந்து மதமும் உழைப்பின் மகிமையைப் பேசுகிறது. இறைவனே இங்கு விஸ்வகர்மா எனும் முதல் தொழிலாளியாக பரிமளிக்கிறார். ”உழைத்து உண்ணும் உணவே நீங்கள் சாப்பிடுகின்ற உணவில் மிகச் சிறந்ததாகும்” என்றார் நபிகள் நாயகம். இப்படி உழைப்பு என்பது ஆன்மீகம் சார்ந்த ஒரு பரிணாமத்தையும் பெற்று விடுகிறது.
உழைப்பு தான் உலகின் வளர்ச்சியை நிர்ணயிக்கிறது. “உழைக்காதவன் உண்ணலாகாது“ என்பதன் காரணம், உழைப்பு என்பது நமது கடமையாய் மாற வேண்டும் என்பது தான். நாம் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு பொருளுக்குப் பின்னாலும் தொழிலாளிகளில் வியர்வையும், கலையும், பெருமூச்சும், கண்ணீரும் கலந்திருக்கிறது.
ஒரு தொழிலாளி சிரிக்கும் போது இறைவன் சிரிக்கிறார். ஒரு தொழிலாளி

கண்ணீர் விடும்போது அவர் கண்ணீர் விடுகிறார். தொழிலாளிகளின் வியர்வையைச் சுரண்டி அதில் மெத்தை அமைத்துத் தூங்கும் ஏகாதிபத்ய சிந்தனைகளை எதிர்த்து நின்ற வரலாறு ஏராளம் உண்டு. அந்த எதிர்ப்புகளின் நினைவலைகள் தான் தொழிலாளர் தினமாக மிளிர்கிறது.

## விடுமுறைகள் அர்த்தம் தெரியாமலே கழிந்துபோகின்றன!

ஒரு நாளை மூன்றாகப் பிரியுங்கள். ஒரு எட்டில் உழையுங்கள். ஒரு எட்டில் ஆனந்தமாய் இருங்கள். ஒரு எட்டில் நிம்மதியாய் உறங்குங்கள். இது தான் “வேலை வாழ்க்கை சமநிலை“ பேணும் ஒரு நல்ல முறை. ஆனால் தொழிலாளர்களோ 12 முதல் 20 மணி நேரம் வரை கடுமையாக உழைத்து, களைத்து, போதிய வருமானமும் இல்லாமல் ஆனந்தத்தையும், உறக்கத்தையும் தொலைத்து வாழ்ந்தார்கள்.
1806ம் ஆண்டு இந்த நசுக்குதலுக்கு எதிரான முதல் குரல் அமெரிக்காவில் ஒலித்தது. ஒலித்த குரல்களில் குரல்வளைகள் நெரிக்கப்பட்டன. ஆனாலும் நீறு பூத்த நெருப்பு போல குரல்கள் வலுவடைந்தன. 1837ல் அமெரிக்காவில் ஒரு சட்டம் இயற்றினார்கள். இனிமேல் பத்து மணி நேரம் தான் வேலை. ஆனால் அது அரசுப் பணியாளர்களுக்கு மட்டும் என அந்த அறிவிப்பு பிரகடனம் செய்தது. மற்றவர்கள் உதாசீனம் செய்யப்பட்டார்கள். 1956ம் ஆண்டில் தான் ஒட்டுமொத்த தொழிலாளர்களுக்கும் விடியல் கிடைத்தது. அந்த தினம் மே 1 ! தொழிலாளர் தினம் !!



## ஐ.பி.எல் காதலர்கள்

வியர்வையும், ரத்தமும், கண்ணீரும் கலந்த வரலாறு தொழிலாளர் தினத்துக்கு உண்டு. ஆனால் இன்று பெரும்பாலும் இந்த தினம் மறக்கப்பட்ட ஒரு தினமாக மாறிவிட்டது. “ஏண்டா இது சம்மர் ஹாலிடேஸ் ல வருது. ஒரு லீவ் வேஸ்ட் ஆகுது“ என மாணவர்களும். “சம்.. லேபர்ஸ் டே மேன்... மூவி போலாமா ?” என இளைய தலைமுறையினரும் பேசிவிட்டுக் கடந்து போகும் ஒரு தினமாக இந்த நாள் மாறிவிட்டது.
”தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்” என மீண்டும் ஒரு குரல் ஒலிக்க வேண்டிய தேவை இன்று உண்டு.
முதலாளிகளின் கார்களுக்குக் கீழே கம்பளம் விரிக்கும் இன்றைய நிறுவனங்களும், ஊடகங்களும், அரசியல் தலைவர்களும் ஏழைகளின் நலனையோ தொழிலாளர்களின் நலனையோ கருத்தில் கொள்வதில்லை. ஆலைத் தொழிலாளி அழிந்தால் என்ன நான் ஆஸ்திரேலியாவிலிருந்து ஆடையை இறக்குமதி செய்வேன் எனும்
சிந்தனை தான் அவர்களுக்கு.

தொடர்ச்சி 17 ம் பக்கம்....










சேவியர்

கேமரா மூலமாகவோ, வெப்கேம், டேப்லெட், ஸ்மார்ட் போனின் முன்பக்க கேமரா போன்ற எதன் மூலமாகவோ, தன்னைத் தானே எடுத்துக் கொள்ளும் புகைப்படம்" என இதற்கு ஒரு விளக்கத்தையும் அகராதியில் எழுதி வைத்தார்கள்.
உலகப் புகழ்பெற்ற டைம் பத்திரிகை, "2012-ம் ஆண்டில் உலக அளவில் பிரபலமாய் இருந்த பத்து வார்த்தைகளில் ஒன்று "செல்பி" என்றது".

# உலகின் முதல் செல்பி

உலகின் முதல் செல்பி எடுத்தவர் எனும் பெருமை இப்போதைக்கு ராபர்ட் கர்னேலியஸிடம் தான் இருக்கிறது.

1839-ம் ஆண்டு அவர் உலகின் முதல் செல்பியை எடுத்தார்.

கேமராவை ஸ்டாண்டில் நிற்க வைத்துவிட்டு அதன் முன்பக்க லென்ஸ் மூடியைத் திறந்தார். பிறகு ஓடிப் போய் கேமராவின் முன்னால் அசையாமல் ஒரு நிமிடம் நின்றார். பிறகு மீண்டும் போய் கேமராவின் கதவை மூடினார். பின்னர் அந்த பிலிமை டெவலப் செய்து பார்த்தபோது கிடைத்தது தான் உலகின் முதல் செல்பி!

ஆனால் அந்தப் படத்துக்கு "செல்பி" எனும் பெயர் வைக்க அவருக்குத் தோன்றவில்லை. முதன் முதலில் "செல்பி" எனும் வார்த்தையைப் பயன்படுத்தியவர் எனும் பெருமை நாதன் ஹோப் என்பவருக்குக் கிடைத்தது. அதுவும் நூற்றாண்டுகள் கடந்த பின்பு.

2002-ம் ஆண்டு அவருக்கு ஒரு சின்ன விபத்து. விபத்தில் அடிபட்ட உதடுகளோடு கட்டிலில் படுத்திருந்த அவர் தனது அடிபட்ட உதட்டைப் படம்பிடித்தார். அதை இணையத்தில் போட்டார்.


"போகஸ் சரியா இல்லாததுக்கு மன்னிச்சுக்கோங்க, இது ஒரு செல்பி, அதான் காரணம்" என்று ஒரு வாசகமும் எழுதினார்.

ஆனால் சத்தியமாக அந்த வார்த்தை இந்த அளவுக்குப் பிரபலமாகும் என அவரே நினைத்திருக்க வாய்ப்பில்லை.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அந்த வார்த்தை பரபரவென பிரபலமாக ஆரம்பித்ததும் அதை ஆங்கில அகராதியிலும் சேர்த்தார்கள். "ஒருவர் டிஜிடல்



1839 ம் ஆண்டு ராபர்ட் கர்னேலியஸ் எடுத்த முதல் செல்பி



1990-ம் ஆண்டு ஒரு பெண் கண்ணாடியில் தெரியும் உருவத்தை புகைப்படம் எடுத்த காட்சி

2013-ம் ஆண்டு ஆக்ஸ்போர்ட் அகராதி "செல்பியே இந்த ஆண்டின் புகழ்பெற்ற வார்த்தை" என அறிவித்தது.
ஆஸ்திரேலிய நபர் ஒருவர் முதன் முதலில் இந்த வார்த்தையைப் பயன்படுத்தியதால், "இந்த வார்த்தையின் மூலம் ஆஸ்திரேலியா" என்று பதிவானது. ஆஸ்திரேலியாவுக்கு அதில் ஒரு பெருமை!
10 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எடுக்கும் புகைப்படங்களில் 30 சதவீதம் புகைப்படங்கள் செல்பி வகையறாவில் சேர்கின்றன என்கிறது ஒரு புள்ளி விவரம்.
செல்பியின் புகழ் பரவுவதைக் கேள்விப்பட்டதும் "செல்பி" என்றொரு "ஆப்" பயன்பாட்டுக்கு வந்தது. முன்பக்க கேமரா மூலமாக எடுக்கும் புகைப்படங்களை மட்டுமே பகிர முடியும் என்பது இதன் சிறப்பம்சம்.
ஒரு செல்பிக்கு கமெண்ட் கொடுக்க விரும்புபவர்கள், இன்னொரு செல்பியைத் தான் பதிலாகக் கொடுக்க முடியும். வேறு எதையும் எழுத முடியாது.

இந்த அப்ளிகேஷன் பதின் வயதினரிடையே தீயாய்ப் பரவியது!
செல்பி இப்படி இளசுகளின் இதயங்களில் பற்றி எரிந்து கொண்டிருந்த போது குரங்கு எடுத்த செல்பி ஒன்று கடந்த ஆண்டு மிகப்பெரிய பேசுபொருளாய் பரபரப்பூட்டியது.

தொடர்ச்சி 20ம் பக்கம்....

## தொழிலாளர் தினம்

16ம் பக்கத் தொடர்ச்சி....

விவசாயி பட்டினியின் ஆடையை உடுத்திக் கொண்டு, எலிகளைத் தின்று வாழ்க்கை நடத்துகையில், பணப் பெருச்சாளிகளின் பாக்கெட்களில் அரசாங்கம் இளைப்பாறுகிறது. கிரிக்கெட் வீரர்களின் ஏழாவது காதலிக்குக் கிடைக்கும் முக்கியத்துவத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட பட்டினியால் தற்கொலை செய்து கொள்ளும் விவசாயியின் உயிருக்குக் கிடைப்பதில்லை.
மானாட மயிலாட நிகழ்ச்சியில் லயிக்கும் தமிழனுக்கு தொழிலாளியின் உயிர் ஊசலாடுவதைக் காண மனம் வருவதில்லை. அதனால் தான் தொழிலாளர்களின் போராட்டங்களோ, அவர்களுடைய கடையடைப்பு போராட்டங்களோ, உண்ணாவிரதங்களோ எப்போதும் பிசுபிசுத்துப் போகின்றன. ஏற்காடு போன்ற தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினையை விட ஐ.பி.எல் ஆட்டங்களே மக்களுக்கு முக்கியமாகிப் போகிறது.

ஏதோ ஒருவயலில் உழைத்து கண்ணீர் பாசனம் செய்து நெல் விளைவிக்கும் விவசாயி நமது சகோதரன் எனும் எண்ணம் நமக்கு வரவேண்டும்.
காய்கறி விலை ரொம்ப ரொம்ப மலிவு என குதூகலிக்கும் போது, "ஐயோ ஆண்டு முழுவதும் இதை பயிரிட்ட உழைப்பாளியின் வீட்டில் ஏதேனும் மிஞ்சியிருக்குமா ? அவனுக்கு கொள்முதல் விலையால் ஏதேனும் பயன் கிடைத்திருக்குமா ?" எனும் பதட்டம் வரவேண்டும்.






15ம் பக்கத் தொடர்ச்சி ... **யாழ்ப்பாணத்துக் கிணற்றுப் பண்பாடு**

எல்லோரும் வந்து பொதுக் கிணறுகளைப் பயன்படுத்துவர் என்று முன்னர் குறிப்பிட்டேன். இவ்வழக்கம் எல்லாக் கிணறுகளிலும் எல்லாக் காலங்களிலும் நடை பெற்றதெனக் கூறடியாது.

பொதுக் கிணறுகளில் உயர்ந்த சாதியினர் மட்டுமே தண்ணீர் அள்ள முடியும். தாழ்ந்த சாதியினர் அள்ள முடியாது. உயர் சாதியினரே தண்ணீரை அள்ளி அவர்களுடைய குடங்களிலே ஊற்றலாம். கரவெட்டிப் பகுதியில் தாழ்ந்த சாதியினர் தமக்கென ஒரு கிணற்றினை அமைத்தபொழுது அக்கிணற்றுக்குள் நஞ்சு கொட்டப்பட்ட நிகழ்வும் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்து மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான கே. டானியல் கிணறு தொடர்பான இக்கொடுமைகளை யெல்லாம் தன்னுடைய "தண்ணீர்"' என்னும் நாவலிலே விரிவாகக் கூறுகிறார்.

கிணற்றடி தொடர்பாக யாழ்ப்பாணத்தவரிடையே சில நம்பிக்கைகள் உண்டு. இரவு நேரத்தில் பெண்கள் தனியாகக் கிணற்றடிக்குச் செல்லக்கூடாது என்று ஒரு நம்பிக்கையுண்டு. பொதுக்கிணறு என்ற காரணத்தால் இரவு நேரத்தில் யார் அங்கு வருகிறார்கள் எனக் கூற முடியாது. எனவே பெண்களை அங்கு இரவில் போகாமல் இருக்க வைப்பதற்கு அங்கு இரவில் பேய் உலாவுவதாக அச்சமடையச் செய்வர்.

யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் நல்ல தண்ணீர் இல்லாத கிணறுகளும் இருக்கின்றன. பெரும்பாலும் கோயில்களை அண்டியுள்ள கிணறுகள் நல்ல தண்ணீருடையனவாக அமைகின்றன. மருதமரம் இருக்கு மிடத்தில் நிலத்தின் கீழ் நல்ல தண்ணீர் இருக்குமென மக்கள் நம்புகின்றனர். கோயிலை அண்டியுள்ள கிணறு கோயிற் கிணறு என அழைக்கப்படும். யாழ்ப்பாணக் கிணறு பற்றி இன்னும் பல செய்திகள் இருக்கின்றன.

## யேர்மனியில் ரெனிஸ் (Tennis) விளையாட்டில் சாதனை படைக்கும் தமிழ்ச் சிறுமி!



செல்வி. டயானா மகேஸ்வரன்

ஜெர்மனி டோட்முண்ட் Dortmund TUS Brackel Tennis விளையாட்டுக் கழகத்தில் விளையாடும் திரு.திருமதி மகேஸ்வரன் ஜெயமதி தம்பதிகளின் புதல்வி செல்வி. டயானா மகேஸ்வரன் அவர்கள் 22-03-2015 அன்று நடந்த Tennis கழகங்களுக்கு இடையிலான நகரச் சம்பியன் சிப் (Stadt Meister) போட்டியில் Dortmund TUS Brackel கழகம் சம்பியன் 2015 வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டார். இவர் தனது 10வது பிறந்த தினத்தன்று இவ் வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

டாயானா இன்னும் பல வெற்றிக் கிண்ணங்கள் பெற்று இன்னும் பல சாதனைகள் புரிய

**வெற்றிமணியின் வாழ்த்துக்கள்!**







Nirubagini Magendiran LL.M.
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com





# உணவு உண்ட பின்னர் பசியா?

டாக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

உணவு உண்ட பின்னர் பசியா? உணவின் பின்னான குருதிச் சீனி மட்டம் குறைதல் - சாப்பிட்ட பின்னர் பசித்தல்உணவின் பின்னான குருதிச் சீனி மட்டம் குறைதல்.

"எனக்கு அடிக்கடி பசிக்கிறது" என்று யாராவது சொன்னால் 'அடங்காப் பசியன்', பீமன் பரம்பரையில் வந்தவன்', 'சாப்பாட்டுக் கிலி பிடிச்சவன்' என்றெல்லாம் நக்கல் அடிக்கவே தோன்றும்.

மாடு இரை மீட்பது போல எந்த நேரமும் எதையாவது வாயில் போட்டு அரைத்துக் கொண்டிருந்தால்தான் அவர்களுக்கு மனசும் வயிறும் அடங்கும்.

"சாப்பிட்டு இரண்டு மூன்று மணித்தியாலயம் போனதும் எப்ப பார்த்தாலும் மீண்டும் பசி எடுக்கிறது" என்று யாராவது சொன்னால் அதை பொய்க் கதை என நினைக்காதீர்கள். அதில் ஏதாவது உண்மை இருக்கலாம்.

பொதுவாக நாம் காலை மதியம் இரவு என்று மூன்று நேர உணவு எடுக்கிறோம். சிலர் இடைநேரச் சிற்றுண்டிகள் எடுப்பதுண்டு. சாப்பிட்டால் வயிறு நிறையும். நீண்ட நேரம் பசிக்காது. குறைவாகச் சாப்பிட்டிருந்தால் கொஞ்ச நேரத்தில் மீண்டும் பசிக்கலாம்.

ஆனால் அவர்களுக்கு அப்படியல்ல. சாப்பிட்ட பின்னர் ஒவ்வொரு நாளும் எந்த நேரமும் பசிக்கிறது. அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? மனம்தான் என வெறுமனே சொல்லிவிட முடியாது. வேறு காரணங்களும் இருக்கக் கூடும். அத்தகையவர்களது இரத்தத் சீனி அளவை அத்தகைய பசி நேரத்தில் கணித்துப் பார்த்தால் அவர்களில் சிலரது இரத்தச் சீனியின் அளவு குறைந்திருக்கக் காணப்படலாம். பொதுவாக உணவு உண்ட பின் குருதிச் சீனியின் அளவு அதிகரிக்கும். ஆனால் இவர்களுக்கு உணவின் பின் குருதிச் சீனியின் அளவு குறைந்திருந்தது. ஆச்சரியமாக இருக்கிறதா?

### குருதி சீனியின் அளவு குறைதல் (hypoglycemia)




பொதுவாக காலையில் வெறும் வயிற்றில் எடுக்கும் குருதிச் சீனியன் அளவு 80 லிருந்து 110 ற்குள் இருக்கும். சாப்பிட்ட பின்னர் இது 140 முதல் 180 வரை அதிகரிக்கலாம். அது 70 ற்குக் கீழ் குறைந்தால் குருதிச் சீனி குறைதல் (hypoglycemia) என்பார்கள். ஆனால் பொதுவாக குருதிச் சீனியின் அளவு தானாக வழமையை விடக் குறைவதில்லை. இதற்குக் காரணம் எமது உடலானது உடலின் கொழுப்புக் கலங்களிலும் ஈரலிலும் சேமித்து வைத்திருக்கும் கொழுப்புகளைக் கரைத்து குருதிச் சீனியின் அளவை சரியான அளவில் பேணும் வல்லமை கொண்டது என்பதாலாகும்.

ஆனால் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பிரிவினருக்கு சாப்பிடடு 2 முதல் மணித்தியாலயத்தின் பின்னர் அது 70 முதல் 100 ஆகக் குறைந்திருக்கும். இதனை (Reactive hypoglycemia) என மருத்துவத்தில் அழைப்பார்கள். உணவிற்கு எதிர்வினையாக குருதிச் சீனி குறைகிறது. இது நீரிழிவு அற்றவர்களுக்கு ஆகும்.

இதைத் தவிர ஆகாரம் எடுக்காத நேரத்தில் காலையில் சிலரது சீனியின் அளவு மேற் கூறிய அளவுகளுக்குக் குறையக் கூடும். அதை மருத்துவத்தில் (Fasting hypoglycemia) என்பார்கள். பன்கிரியாஸ் சுரப்பியில் கட்டிகள், ஈரல் நோய்கள் போன்றவை அத்தகைய நிலையை ஏற்படுத்தக் கூடும். சில சத்திர சிகிச்சைகளின் பின்னரும் சில மருந்துகளாலும் கூட இவ்வாறு வெறும் வயிற்று சீனியின் அளவு குறைவதுண்டு.

நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு சீனியின் அளவு குறைவது முற்றிலும் வேறு விடயமாகும். நீரிழிவற்கான மாத்திரைகளை அல்லது ஊசி போடும் போது உணவுகளை சரியான நேரத்தில் எடுக்காததாலும், விரதம் உபவாசம் இருப்பதாலும் குருதிச் சீனியின் அளவு குறைகிறது. அதைவிட மருத்துவ ஆலோசனையின்றி மருந்துகளை மாற்றுவதும், அவற்றின் அளவுளை மாற்றுவதும் அளவு மீறிப் போடுவதும் நீரிழிவு நோயாளரின் குருதிச் சீனி அளவு குறையக் காரணமாகின்றன.

### அறிகுறிகள் எவை?

குருதியில் சீனியின் அளவு குறையும் போது வெளிப்படும் அறிகுறிகள் எவை. வழமையாக சீனியின் அளவு குருதியில் குறையும் போது தோன்றும் அறிகுறிகளை ஒத்ததே இவையும். முக்கியமான அறிகுறி பசிதான். அதாவது இங்கு சாப்பிட்ட பின் ஏற்படும் பசியாகும். அத்துடன் உடல் பலவீனமாக இருப்பதாக உணர்வர். உடற் பதற்றம், வியர்வை, தலைப்பாரம், தூக்கத் தியக்கம், தலைச்சுற்று, தலையிடி, மனப்பதற்றம், மனக் குழப்பம், எரிச்சலுறுதல், பார்வை மங்கல், உள்ளங் கை கால்கள் குளிர்தல், ஓங்காளம், சத்தி போன்ற அறிகுறிகளில் சில ஏற்படலாம்.

ஆனால் மேற் கூறிய அறிகுறிகள் குருதியில் சீனி குறைவதால் மட்டுமின்றி வேறு காரணங்களாலும் ஏற்படலாம் என்பது உண்மையே. மனச்சஞ்சலம் கவலை உணவு ஒவ்வாமை உணவு நேரங்களில் மாற்றம் போன்றவையும் காரணமாகலாம்.

எனவே அறிகுறிகளை வைத்துக் கொண்டு இது உணவு எதிர்வினையால் ஏற்படும் குருதிச்சீனி குறைவடைதல் என்ற சுய முடிவிற்கு வரக் கூடாது. மருத்துவரைக் காண வேண்டும்.

ஒருவரது அறிகுறிகளை மருத்துவர் நன்கு பகுத்து ஆராய்வார். பின்னர் அத்தகைய அறிகுறிகள் ஏற்படும் வேளையில் குருதியில் சீனியின் அளவைக் கணிப்பார்கள். அது குறைவாக இருப்பது நிச்சயமானால் மீண்டும் ஆகாரம் எடுத்தவுடன் அத்தகைய அறிகுறிகள் மறைந்து சீனியின் அளவு அதிகரிக்கிறதா என அவதானிப்பார்கள். இவற்றின் பின்னர்தான் அது Reactive hypoglycemia என்பதை நிச்சயமாகக் கூறமுடியும்.

### மருத்துவமும் உணவு முறையும்

பெரும்பாலும் மருத்துவம் எதுவும் தேவைப்படாது. உணவு முறைகளிலும் அவற்றை உட்கொள்ளும் நேரங்களிலும் தேவைக்கு ஏற்ப மாற்றங்கள் செய்வது மட்டும் போதுமானது.


விரைவில் சமிபாடடையக் கூடிய இனிப்பு மற்றும் மாப்பண்ட உணவுகள் உட்கொள்வதைக் குறைக்க வேண்டும். அத்தகைய உணவுகள் விரைவாக உணவுக் கால்வாயினால் உறிஞ்சப்படுவதால் திடீரென குருதிச் சீனியின் அளவு அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்தததைக் கட்டுப்படுத்துவதற்காக மேலதிக இன்சுலின் சுரக்கும். இது திடீரென குருதிச் சீனியின் அளவைக் குறைத்து பசியையும் ஏனைய அறிகுறிகளையும் தோற்றுவிக்கும்.

தொடர்ச்சி 20ம் பக்கம்....

Akchaya Digital Photography& Decoration
Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration
உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.
Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474








# சுத்திக் காட்டுறார்



நம்மவர்கள் போட்டிக்கு வீடு கட்டுவது ஒன்றும் புதுமை அல்ல.

சுந்தரலிங்கம் தம்பதியினர், தமது நண்பர் முரளிக்கு தமது புது வீட்டைச் சுற்றிக் காண்பித்தார்.

முரளியின் மகன், சுந்தரலிங்கத்தின் மகளைக் காதலிக்கின்றான்.
அது எல்லோருக்கும் தெரியும்."ம்....

என்னுடைய மகன்ரை வீட்டை எனக்கே சுத்திக் காட்டினம்" தனக்குள் கறுவிக் கொண்டார் முரளி.

## செல்பி

17ம் பக்கத் தொடர்ச்சி

செல்பி இப்படி இளசுகளின் இதயங்களில் பற்றி எரிந்து கொண்டிருந்த போது குரங்கு எடுத்த செல்பி ஒன்று கடந்த ஆண்டு மிகப்பெரிய பேசுபொருளாய் பரபரப்பூட்டியது.

புகைப்படக்காரர் டேவிட் ஸ்லேட்டருக்குச் சொந்தமான கேமராவில் பதிவான அந்த படத்தை, இணைய தளங்கள் பதிவு செய்திருந்தன.
இது எனது காப்புரிமை, இதை இணையங்கள் பயன்படுத்தியது தவறு. இதனால் தனக்கு பத்தாயிரம் பவுண்ட் நஷ்டம் என வழக்குப் பதிவு செய்தார் ஸ்லேட்டர்.
நீதிமன்றமோ இந்த வழக்கை விசித்திரமாய்ப் பார்த்தது. கடைசியில் அலசி ஆராய்ந்து ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள்.

"விலங்குகள் எடுக்கும் புகைப்படத்துக்கு மனிதர்கள் சொந்தம் கொண்டாட முடியாது" என்பது தான் அந்த தீர்ப்பு.
அப்படி விலங்கு செல்பியும் உலகப் புகழ் பெற்றது சுவாரஸ்யமான தனிக் கதை.
எது எப்படியோ சமூக வலைத்தளங்களுக்குச் சரியான தீனி போட்டுக்கொண்டிருப்பவை இந்த செல்பிக்கள் தான்.

"இன்ஸ்டாக்ராம்" எனும் சமூக வலைத்தளம் புகைப்படங்களை மையமாகக் கொண்டு இயங்குகிறது. அதில் 5.3 கோடி புகைப்படங்கள் செல்பி வகையறாவில் குவிந்து கிடக்கின்றன. பேஸ்புக், டுவிட்டர் போன்ற தளங்களிலும் செல்பி படங்களும், குறிப்புகளும் எக்கச்சக்கம்.
86-வது ஆஸ்கர் விருது விழாவில் கலைஞர்களுடன் எலன் டிஜெனர்ஸ் எடுத்த செல்பி ஒன்று உலகிலேயே அதிக முறை "ரீ டுவிட்" செய்யப்பட்ட புகைப்படம் எனும் பெயரைப் பெற்றது. 3.3 மில்லியன் முறை அது "ரீ டுவிட்" செய்யப்பட்டது!

இளசுகளின் விளையாட்டுத்தனமான விஷயம் எனும் நிலையிலிருந்து செல்பி மற்ற நிலைகளுக்கும் வெகு விரைவில் பரவியிருப்பதையே இது காட்டுகிறது.
நெல்சன் மண்டேலாவின் நினைவிடத்தில் உலகத் தலைவர்களுடன் ஒபாமா எடுத்த புகைப்படம், தனது அலுவலக அதிகாரிகளுடன்


குரங்கு எடுத்த செல்பியுடன், புகைப்படக்காரர் டேவிட் ஸ்லேட்டர்

சுவிஸ் அரசு எடுத்த புகைப்படம் என செல்பியின் தளங்கள் பல இடங்களுக்கும் பரவிவிட்டன.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாய் சமீபத்தில் போப் ஆண்டவரும் செல்பிக்குள் சிக்கிக் கொண்டது வியப்புச் செய்தியாய்ப் பேசப்பட்டது!

பக்கத்து வீட்டுப் பையன் முதல், போப் ஆண்டவர் வரை பாரபட்சமில்லாமல் செல்பி முகங்களை கேமராக்கள் பதிவு செய்திருக்கின்றன. "47 சதவீதம் பெரியவர்கள் தங்களை செல்பி எடுத்திருக்கிறார்கள், 40 சதவீதம் இளசுகள் வாரம் தோறும் தவறாமல் செல்பி எடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்" என்கிறது புள்ளி விவரம் ஒன்று.

அதிலும் ஆண்களை விட செல்பி மோகம் பெண்களைத் தான் அதிகம் பிடித்திருக்கிறதாம்.

"லெட்ஸ் டேக் எ செல்பி புள்ள" என தீவிரமாய் இருப்பது பிலிப்பைன்ஸ் நகரம் தான். உலகிலேயே நம்பர் 1 "செல்பி சிட்டி" எனும் பெயர் அதற்குக் கிடைத்திருக்கிறது.

செல்பியின் பயன்பாடும், சுவாரஸ்யங்களும் உலகெங்கும் பரவியிருக்கும் வேளையில் செல்பிக்காக உயிரை விட்டவர்களும் இருக்கிறார்கள் என்பது பதறடிக்கும் செய்தியாகும்.
(தொடர்ந்து "கிளிக்"குவோம்...) சேவியர்,

19ம் பக்கத் தொடர்ச்சி

## உணவு உண்ட பின்னர் பசியா?

கேக் புடிங், குக்கீஸ், ஐஸ்கிறீம், மென்பானங்கள், சினியும் சீனி சேர்த்த உணவுகளும், ஜெலி, ஜாம், இனிப்புட்டப்பட்ட பழச் சாறுகள், தேன், சொக்கிளட், சீனி சேர்த்த தேநீர், கோப்பி போன்றவை அத்தகையவையாகும். இவற்றை உட்கொள்வதில் நாட்டமிருந்தால் நார்ப்பொருள் அதிகமுள்ள காய்கறிகள் பழவகைகளுடன் கலந்து குறைந்த அளவை மட்டும் உட்கொண்டால் பாதிப்பு குறைவாக இருக்கும்.

இனிப்புள்ள உணவுகளைக் குறைப்பது மட்டுமின்றி அவற்றை வெறு வயிற்றில் உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
பொதுவாக சமபல வலுவுள்ள உணவுகளை உண்ண வேண்டும். கொழுப்பற்ற இறைச்சிகளை தேர்ந்தெடுங்கள். பருப்பு பயறு கடலை சோயா போன்ற தாவரப் புரதங்களை அதிகளவு சேருங்கள். காய்கறி வகைகளையும் பழவகைகளையும் கூடியளவு சேர்த்துக் கொள்ளுங்கள்.
மதுபானம் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் மதுபானமும் குருதியில் சீனியின் அளவை குறைப்பதுண்டு. முக்கியமான உணவின்றி வெறும் வயிற்றில் அருந்தினால் விளைவு மோசமாக இருக்கும்.
மாப் பொருள் அதிகமுள்ள உணவுகளான சோறு பாண், நூடில்ஸ், ரொட்டி அப்பம் போன்றவற்றை அதிகளவில் ஒரே நேரத்தில் உண்ணும் போதும் அவ்வாறு சீனி அளவுகளில் மாற்றம் ஏற்படும்.

எனவே இப் பிரச்சனை உள்ளவர்கள் நாள் ஒன்றிற்கு இரண்டு அல்லது மூன்று முறை உணவு உண்பதைத் தவிர்த்து, 4 அல்லது 5 மணி நேர இடைவெளிகளில் சிறிய சிறிய உணவுகளாக எடுப்பது நல்லது.
கொழுப்பு உணவுகளும் வேகமாக ஜீரணமடைவதில்லை. ஆனால் அதிக கொழுப்பு ஆகாது. விதைகள், கொட்டைகள் போன்றவற்றை அளவோடு சேர்ப்பது உணவு வேகமாக சமிபாடடைவதைத் தவிர்க்கும்.
மாப் பொருள் உணவுகள் விரைவில் சீரணமடைந்து குருதிச் சீனி அளவை அதிகரிப்பது போல புரத உணவுகள் அதிகரிப்பதில்லை. எனவே பிரதான உணவுகளுடன் மீன் முட்டை, கொழுப்பு குறைந்த இறைச்சி, பயற்றின உணவுகளையும் கலந்து சாப்பிட வேண்டும்.
உணவின் பின் குருதிச் சீனி மட்டம் குறைபவர்கள் இது போன்ற உணவு முறைகளைக் கைக் கொள்வது நல்லது. ஆரோக்கியமான இந்த உணவு முறைகள் ஏனையவர்களுக்கும் நல்லதே.

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!





நம்மவர் தயாரிப்பில் இயக்கத்தில்
அவுஸ்திரேலியாவில் வெளிவரும் திரைப்படம்

# யார் அந்த தேவதை

இயக்கம்: திரு என் .எஸ்.தனபாலசுந்தரம்.



ஆஸ்திரேலியாவில் சந்திரா Productions தயாரிப்பில் விரைவில் வெளிவர இருக்கும் முழு நீள திரைப்படம் “ யார் அந்த தேவதை “

Sydney Film School இல் தனது பட்ட படிப்பை 2006 ஆம் ஆண்டு முடித்த

திரு என் .எஸ்.தனபாலசுந்தரம். இப்படத்துக்கான கதை,திரைக்கதை எழுத்து, இயக்கம் ஆகிய பொறுப்புகளை ஏற்றுள்ளார் .

இவர் 2006 ஆம் ஆண்டு “நினைவுகளே நினைவுகளே “ என்னுமோர் குறும்படத்தினை இயக்கி (தயாரிப்பு - சிகரம் தொலைக்காட்சி ) வெற்றி கண்டவர் .சிகரம் தொலைக்காட்சியில் இக்குறும்படம் ஒளிபரப்பப்பட்டபோது அநேகரின் பாராட்டை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது .
ஒளிப்பதிவு - இளங்கோ இசை - உதயன் (சென்னை) “யார் அந்த தேவதை“ ஒரு இளைஞனின் தடம் புரளும் வாழ்க்கையை சித்தரிக்கும் திரைப்படமாகும்.தப்பான பாதையில் போகும் இளைஞன் திருந்த முற்படுகிறான். அவனை சுற்றி உள்ளோரும் அதையே விரும்புகிறார்கள் .அவன் திருந்தி வாழ்ந்தானா ? இளம் சமுதாயத்திற்கு ஒரு மெசேஜ். காதல் , நடனம் , நகைசுவை , நான்கு பாடல்கள் என பல அம்சங்களுடன் ஆஸ்திரேலியத் திரைகளில் வெகு விரைவில் காண்பிக்கப்பட இருக்கிறது “யார் அந்த தேவதை“பாடல்கள் யாவும் இந்தியாவில் இசை அமைக்கபட்டது.
ஒரு பாடலை S .P .சைலஜா பாடியுள்ளார் .இந்திய திரை நட்சத்திரம் கலைமாமணி நிழல்கள் ரவியுடன் உள்ளூர் கலைஞர்கள் பலர் தோன்றும் திரைப்படம் ”யார் அந்த தேவதை ”உள்ளூர் கலைஞர்கள் :அஜய், நளினி,தேனுகா, ஷோபனா,நடராஜா கருணாகரன் , டாக்டர் என் .கௌரிபாலன் ,சான் குமாரலிங்கம், யசோதா சிங்கராயர்,A.J.ஜெயச்சந்திரா, அபிரா தேவராஜா,சோனா பிரின்ஸ் ,ஹரி பாலச்சந்தர் , தயா கந்தசாமி ,சிறிபாலன் S .P .வசந்தராஜா, சாரதா அமீர் , ஆ.ளு.செல்வராஜாசந்திரா. தனபாலசுந்தரம். கிரிஷா,தனபாலசுந்தரம், Greg Reilly ,Lauren Samantha Frieze , பிரேமினி ராஜலிங்கம் , சுசீலாதேவி நடராஜா இன்னும் பலர் . இத் திரைப்படம் வெற்றிபெற வெற்றிமணி வாழ்த்துகின்றது. இயக்குனர் திரு.தனபாலசுந்தரம் அவர்கள் தாயகத்தில் ஒட்டிசுட்டான் சம்மாளம் குளத்தைச் சேர்ந்தவர்.கடின உழைப்பால் கற்று உயர்ந்தவர்.





யார் அந்த தேவதை படப்பிடிப்பின் போது டைரக்டர் தனபாலசுந்தரம் நிழல்கள் ரவி , சோனா பிரின்ஸ் ஆகியோருக்கு காட்சியினை விவரிக்கிறார்



KSR BRIDAL

# KSR BRIDAL ARTIST

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம். மாலைகள் மற்றும் பூச்செண்டுகள் அனைத்தும் ஓர் இடத்தில்.

**Make up**......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
**Threading** Eye brow Face.....
**Facial**..........

**hair style**
**hair straightening**
**hair curls**

**Video & Foto**
E-mail : **kajas.makeup@hotmail.de**
facebook : **KSR Bridal Artist**
**KSR BRidal** **Tel:02323 39 88 470**

contact : **015236649870**





# லண்டனில் நடைபெற்ற London Tamil Market

## தமிழல் பாடி அசத்திய சீனத்தமிழன் Willian Chia



லண்டன் நகரில் கடந்த 11,12ம் திகதிகளில் நடைபெற்ற *London Tamil Market* . அன்று *Harrow Leisure Center (Byron)* மண்டபத்தில் பல வாணிபநிலையங்கள் அமைக்கப்பட்டு தங்கள் தங்கள் வியாபரங்களை மக்கள்முன் விளக்கியும் வியாபாரமும் செய்தனர். கடைகளின் ஒரு புறத்தில் தொடர்ச்சியான கலைநிகிழ்வுகள் இடம்பெற்றவண்ணம் இருந்தன.

நம்மவர் தமிழ்தொலைக்காட்சி நாடக நடிகர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அத்துடன் சீனத்தமிழன் என்று அழைக்கப்படும். Willian Chia இவரும் கலந்து கொண்டு பெண்குரலில் அழகிய தமிழில் பாடி அசத்தினார். அத்துடன் சிறுவர்களுக்கு முகத்தில் அழகிய ஓவியங்கள் வரைந்து அவர்களையும் மலரவைத்தார். இத்தனைக்கும் அவர் மலேசியாவில் வசிக்கும் ஒரு சீன இனத்தவர். வெற்றிமணி பத்திரிகையை ஆவலுடன் பார்த்து மகிழ்ந்தார். அழகிய தமிழில் வாழ்த்தும் கூறினார். அன்று நடைபெற்ற வாணிபவிழாவில் அன்று யோ்மனியில் வசித்த பலரைக்காண முடிந்தது.






அவர்களில் ஸ்ரீபதி மற்றும் ஓவியர் சேகர் ஆகியோர் வெற்றிமணி இன்றும் வருவதுகண்டு மகிழ்வுதெரிவித்தனர். ஒரு குறிப்பு வெற்றிமணி பாவித்த முதலாவது தமிழ் எழுத்தை அன்று தந்து உதவியவர் திரு ஸ்ரீபதி என்பதனை நன்றியுடன் வெற்றிமணி அன்றும் நினைவுகூர்ந்துகொண்டது.

இதுபோன்ற பல சிறப்பான வாணிபவிழாக்கள் கனடாவில் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. தற்போது லண்டனிலும் வெற்றிகரமாக நடைபெற்று உள்ளது. இவ்விழா பற்றிய விபரங்களைத்தந்து வெற்றிமணிக்கு அழைப்பு விடுத்த திரு.திருவாசகம் ( அமைப்பாளர்களில் ஒருவர்) அவர்களுக்கு வெற்றிமணியின் நன்றிகள்.

இது போன்ற வாணிபவிழாக்கள் யோ்மனியிலும் நடைபெறவேண்டும். ஒன்றுபட்ட முன்னெடுப்புக்களால் வாங்குவோரும் விற்போரும் பலன் பெறலாம். எந்த இடத்தில் நாம் இப்போது உள்ளோம் என்பதனை கணக்கிட வாணிபம் பெருகிட இந்த நிகழ்வுகள் கைகொடுக்கும்.





ஆலய வழிபாடு

# நாம் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்?

நாகேந்திரம் கருணாநிதி

" கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் "
" ஆலயம் தொழுவது சாலவும் நன்று "

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தஇ முருகப்பெருமானை நேரில் தரிசித்தஇ கலைவாணிக்கு நிகரானவர் எனப் போற்றப்படும் மூதாட்டி ஔவையார் மேற்கண்டவாறு கூறியுள்ளார். ஆலயம் என்பது ஆன்மா இறைவனில் லயிக்கின்ற இடம். ஆன்மாவின் ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் எனவும் கூறலாம்.கோயில் என்பதன் பொருள் (கோ அரசன்இ இல் வீடு) அரசனுடைய வீடு என்பதாகும். தெய்வங்களுக்கு அரசனாக விளங்கும் சிவபெருமானின் ஆலயமே திருக்கோயில். நாளடைவில் பிள்ளையார்இ முருகன்இ அம்பிகை என மற்றத் தெய்வங்களின் அமைவிடமும் கோயில் என அழைக்கப்படலாயிற்று.

**நாம் ஏன் கோயிலுக்குச் செல்லவேண்டும்? வீட்டில் கும்பிடமுடியாதா ?**

நாம் முற்பிறவிகளில்ச் செய்த வினையின் ஒருபகுதியை அனுபவிப்பதற்கே இறைவன் திருவருளால் இப்பிறவியை எடுத்துள்ளோம். இவ்வினையை இலகுவாகக் கடந்து செல்வதற்கு நாம் இறைவனை நாடவேண்டும். ஆற்றைக் கடக்க ஓடத்தைப் பாவிப்பது போலவும், தண்ணீர்க் குடத்தைத் தலையில்ச் சுமக்கும் போது தலைக்கும் குடத்திற்கும் இடையில் சும்மாடு (துணியால் வட்டமாகச் சுற்றப்பட்ட திருகணி) வைத்துப் பாரத்தைச் சுலபமாக்குவது போலவும் இறைவன் அருளினால் எமது வினைகளை நாம் இலகுவாகக் கடந்து செல்லலாம். அது மட்டுமல்ல இப்பிறவியில் மேலும் தீய வினைகளைச் செய்யாமல் நல் வினைகளைச் செய்வதற்கு எம்மை நாமே பக்குவப்படுத்துவதற்கு இறைஅருளை வேண்டுவதற்கும் நாம் இறைவனை நாடவேண்டும். சுருக்கமாக நாம் இறைவனை நாடுவது எமது தேவைகளை வரமாகக் கேட்டுப்பெறுவதற்கும், எமக்கு ஏற்படும் பயத்தை களைய இறைவனிடம் வேண்டுவதற்குமாகும்.
வீட்டில் பூஜை அறை அமைத்து நாம் செய்யும் பூஜை ஆத்மார்த்தப் பூஜை ஆகும் ஆலயத்தில் பொதுவாக (எங்களுக்காக) சிவாச்சாரியார் செய்யும் பூஜை பரார்த்த பூஜை (பர மற்றவர், அர்த்த பொருட்டு) ஆகும். மூங்கில்க் காட்டில் உள்ள மூங்கில் முழுவதிலும் தீயை உருவாக்கும் தன்மை இருப்பினும் உராயும் இடத்தில் மட்டும் தீ உருவாகுவதைப்போல இறைவன் எங்கும் நிறைந்திருப்பவராயினும் இறை அருள் வெளிப்படும் இடம் ஆலயம் ஆகும். ஆகம முறைப்படி அமையும் ஆலய அமைப்பும், ஆலயம் அமைக்கும் போது அங்கு பிரதிஸ்டை செய்யப்படும் விக்கிரகங்களும், அவற்றின் கீழ் வைக்கப்படும் இயந்திரமும், அப்பொழுது செய்யப்படும் கிரியைகளும் (கும்பாபிஷேகம்) எங்கும் பரந்துள்ள இறைசக்தியை அங்கு குவியச் செய்கின்றன. அதுமட்டுமல்ல ஆலயத்தில்த் தினமும் நடக்கும் மந்திர உச்சாடனத்தாலும், அபிசேக ஆராதனைகளாலும், அருச்சனை முதலிய கிரியைகளாலும், திருமுறைப் பாடல்களாலும், மகோற்சவம், விசேடகால உற்சவங்களாலும் அன்னதானம் போன்ற நற்காரியங்கள் நடப்பதாலும் இறைஅருள் தொடர்ந்து சுரக்கும் இடமாக ஆலயம் திகழ்கின்றது.

ஆலயங்கள் இறைவழிபாடு மட்டுமின்றி எமது மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் இடமாகவும் மிளிர்கின்றன. ஆலயத்திலுள்ள விக்கிரகங்கள் எப்பொழுதும் எமது தேவையைப் பூர்த்தி செய்யத் தயாராக இருப்பதைக் குறிக்க வரதகரத்துடனும், பயத்தை நீக்க அபயகரத்துடனும் தரிசனம் தருகின்றன. ஆலயத்தில் ஒலிக்கின்ற மந்திர ஒலிகளும்இ திருமுறைப்பாடல்களும்இ மணிஓசைஇ நாதஸ்வரம்இ மேளம் முதலிய மங்கல வாத்தியங்களின் ஒலிகளும்இ சாம்பிராணி வாசனை என்பனவும் எமக்குப் பக்தி உணர்வினை எழுப்புகின்றன. இச்சூழ்நிலை எமது ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருநிலைப்படுத்தி இறைவழிபாட்டிற்கு உகந்ததாக உள்ளது. முறையான ஆலய தரிசனம் இ தொழுகை தெளிவான ஞானத்தை நிச்சயம் ஊட்டும்.

**உருவ வழிபாடு ஏன் ? பல விக்கிரக வழிபாடு ஏன் ?**
வழிபாட்டில் இரண்டு விதம் உண்டு. ஒன்று அருவ வழிபாடு மற்றது உருவ வழிபாடு. உருவ வழிபாடே பெரும்பான்மையான எளிய மக்களுக்கு ஏற்ற முறை. ஏனெனில் உருவங்களைப் பார்த்தே பழகிப்போன நாம் உருவமில்லாமல் ஒன்றைச் சிந்தித்தல் சற்று கடினமானதாகும். முற்காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த நாம் தாய்இ தந்தைஇ அண்ணன்இ தம்பி, அக்கா, தங்கை எனப் பல உறவினர்களுடன் உறவாடி, எங்களுக்குப் பிடித்தவர்களிடம் தேவையானவற்றைப் பெற்று வாழப் பழகியுள்ளோம். இறைவனிடமும் இதே வழியைப் பின் பற்றிப் பிடித்த தெய்வங்களை வணங்கி எமக்குத் தேவையானவற்றைப் பெறுவது சுலபமான காரியமாகும்.

**ஆலயத்துக்குச் செல்வது எப்படி ?**

நாம் ஆலயத்திற்குச் செல்லும் போது அகத்தூய்மையுடனும், புறத்தூய்மையுடனும் செல்லவேண்டும். அகத்தூய்மைக்கு வாய்மையே வழி. இறையாற்றலின்பால் எமக்கு உள்ள நம்பிக்கையும், அறம் தவறின் தெய்வம் எமது வேண்டுதலை நிறைவேற்றாது என்ற அற உணர்வோடும் நாம் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும். புறத்தூய்மையானது வெளிச் சுத்தம் அதாவது குளித்துஇ தோய்த்து உலர்ந்த ஆடையை உடுத்தி வீட்டிலிருந்து இடையில் எங்கும் செல்லாமல் நேராக ஆலயத்திற்குச் செல்லவேண்டும். இறைவன் இருக்கும் அதி உன்னதமான இடமாகிய ஆலயத்தையும் நாம் சுத்தமாகப் பேணவேண்டும்.

**ஆலயத்தினுள் செய்யக்கூடாதவை எவை ?**

1.கோயிலில் மூலவருக்கு நேர் எதிராக நின்று கும்பிடக்கூடாது. கருவறையில் சுவாமியின் இருபுறமும் நின்றுதான் வணங்கவேண்டும் என சாஸ்திரம் கூறுகிறது. சுவாமிக்கு எதிரே நிற்பவர் எதிரி எனக் காஞ்சிப்பெரியவர் கூறியுள்ளார். அன்னையின் கடைக்கண் பார்வை பட்டால் செல்வம், கல்வி, ஒருநாளும் தளர்வறியா மனம், தெய்வ வடிவம், வஞ்சமில்லா நண்பர்கள், நல்லன எல்லாம் கிடைக்கும் என அபிராமிப்பட்டர் கூறியுள்ளார். (மூலவருக்கு முன்பு நிற்கும்போது மற்ற அடியார்கள் மூலவரைத்தரிசிக்கவிடாமல்த் தடுக்கும் பாவத்தை நாம் செய்கின்றோம்) தொடர்ச்சி 24ம் பக்கம்.



# காதோடு காதாக

கலைக்கதிர் கதிர் தரைசிங்கம்



செல்லர்: வர வர என்ரை மனிசி என்னை மதிக்கிறது குறைந்துகொண்டு போகுது. இந்த மாற்றத்திற்கு என்ன செய்யலாம்.
சோமர்: மாற்றம் ஒன்றுதான் என்றுமே மாறாதது. உந்த மாற்றத்திற்கு காரணம் நாடு பாதி நாடகம் பாதி. முதலில் செலவு கூடிப்போச்சு என்று TV காட்டை நிப்பாட்டும். அந்தக் காசுக்கு Deck டெக்கிலை ஒறிஜினல் பட DVD வாங்கித் தினமும் இரண்டு மூன்று என்று போட்டுக்காட்டும்.
செல்லர்:
இதாலை என்னை மதிக்கிற மாற்றம் எப்படி வரும்.
சோமர்: TV நாடகங்களிலை பெண்கள்தான் Hero ஆனால் திரைப்படங்களிலை அப்படி இல்லை. Hero ஆண்கள்தான். எதைப்பார்த்து இரசிக்கிறோமே அதன் சாயல்தான் நம்மில் வரும்.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

1

## அக்கிரா

**21.05.2015**

யேர்மனியில் கேரனையை (Herne) நகரை வதிவிடமாகக் கொண்ட **நிமலன் அரணியா** தம்பதிகளின், செல்வப்புதல்வி **அக்கிரா** தனது முதலாவது பிறந்தநாளை அப்பா அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, அத்தை, மச்சான்,மச்சாள், இவர்களுடன் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் சூழ 25.05.2015 அன்று சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை
**பல்கலையும் கற்று சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.**

வாழ்த்து : ரகு நிரஞ்ஜினி: K.S.R Bridal Artist :
02323 39 88 470/ 02323 38 65 30

**ஸ்ரீ நவதுர்க்காதேவி ஆலயம் வூப்பெற்றால்**
**16.05.2015 சனிக்கிழமை தேர்த் திருவிழா.**

Sri Navathurgadevi Tempel e.V Wuppertal
Hünefeldstraße 63b, 42285 Wuppertal
Tel: 0202 4796017, E-Mail: info@thurga-wuppertal.de Web: thurga-wuppertal.de





**ஆதிவாசி லீடர் கனக துர்க்கா ஜாரி**
**பண்டித் லட்சுமன் ராஜ்**
கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்
FACE READING
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலை - குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை - காதல் - விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் - மற்றும் பல... பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பீடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
பேசும் மொழிகள்: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10:00 முதல் 20:00 மணி வரை சந்திக்கலாம்
0231-33897290
0152-12016356 // 0152-13946833
Adlerstr. 30, 44137 Dortmund - Germany

**நாம் ஏன் கோவிலுக்கு... 23 ம் பக்கத் தொடர்ச்சி....**

2.கோயிலுக்குள் இறைநாமத்தைத் தவிர பிற வார்த்தைகள் பேசக்கூடாது. (வேண்டத்தகாத வார்த்தைகளை நாம் பேசும் போது மற்ற அடியவர்களின் அமைதியான பிரார்த்தனைக்கு நாம் இடையூறாக இருக்கின்றோம்)

3. கோயிலுக்குள் கவர்ச்சியான ஆடை அணிகலன்களை அணியக்கூடாது. (எமது கவரச்சி மற்ற அடியவர்களின் புலனடக்கத்தைப் பாதிக்கும்)

4. கோயிலுக்குள் பெண்கள் தலைவிரி கோலமாகச் செல்லக்கூடாது. (விரித்த கூந்தலை துக்கநிகழ்ச்சியாகவும்இ அபசகுனமாகவும் பார்ப்பது எமது மரபு. கோயிலுக்குள் இது மற்ற அடியவர்க்கு இடையூறாக இருப்பதுமட்டுமல்ல அங்கு ஏற்றப்பட்டிருக்கும் தீபங்களிலிருந்து கூந்தலில்த் தீ பிடிக்கும் அபாயமும் உள்ளது.)

5. ஆலயத்தில் வழங்கப்படும் பிரசாதத்தை வீணாக்காமல் அளவோடு எடுத்து நிலத்தில்ச் சிந்தாமல் உண்ண வேண்டும். நிலத்தில்ச் சிந்தும் பிரசாதத்தால் மற்ற அடியவர்களின் பாதங்கள் மட்டுமல்ல ஆலய துப்பரவும் பாதிக்கப்படுகிறது. பிரசாத்த்தை வீணாக்குவதால் மற்றடியார்களுக்கு பிரசாதம் இல்லாமல்ப்போகிறது.

6. இக்கட்டுரையில் வரும் விடையங்களுக்கான ஆதாரமாக பல நூல்களினதும் கூற்றுக்கள் உண்டு.

SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main






India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.











**யேர்மனியில் யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு வெற்றிமணி எடுத்த பவளவிழா!**

## தமிழ் ஏன் கற்கவேண்டும் என்பவர்கள், முதலில் தமிழின் சிறப்பை கற்றுணரவேண்டும்!

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களின் பவளவிழாவும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் எழுதிய யப்பானிய காதற் பாடல்கள் நூல் அறிமுக நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.03.2015) யேர்மனியில் சுவேற்றரா நகரில் சிறப்பாக இடம் பெற்றது.

பவளவிழாவை யேர்மனி இங்கிலாந்து நாடுகளில் வெளிவரும் வெற்றிமணி பத்திரிகை சிறப்பாக ஏற்பாடு செய்து வழங்கியது. விழா மாலை 3.00 மணிக்கு சுவற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலயத்தில் சிறப்பு பூஜையுடன் ஆரம்பமானது. அங்கு ஆலயகுரு சிவஸ்ரீ சிவ.ஜெயந்திநாதக்குருக்கள் மற்றும் கம்காமாட்சி அம்பாள் ஆலய குரு சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்குகள் வெற்றிமணி சிவத்தமிழ் பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் சிவத்தமிழ் உதவி ஆசிரியர் ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு இருந்து விழா மண்டபத்திற்கு பவளவிழா நாயகனும் அவர் துணைவியார் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் அழைத்துச் செல்லப்பட்டனர். மண்டபத்தில் கூடியிருந்த மக்கள் எழுந்து நின்று பவளவிழா நாயகனையும் அவர் நாயகி முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களையும் வரவேற்றனர்.

செல்வி சுரேகா செல்வராஜா அவர்கள் தேவாரத்துடன் விழா ஆரம்பமானது. குத்துவிழக்கினை பிரதம விருந்தினர்கள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் ஏற்றிட, அவர்களைத் தொடர்ந்து கவிதாஞானவாருதி கோசல்யா சொர்ணலிங்கம்,அகல்யா கல்கி, துஷானி. ஈஸ்வரன், வைஸ்ணவி ஜெகன்மோன் அபிராமி சக்திவேல் ஆகியோர் ஏற்றிவைத்தனர். வரவேற்புரையை வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் நிகழ்த்தினார். 1975 ஆண்டு அவரது மாணவராக யாழ்- பல்கலைக்கழகத்தில் இருந்ததை நினைவு கூர்ந்து நாற்பது வருட உறவு. இந்தப்பவளத்திற்கும் தனக்கும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ச்சி 26ம் பக்கம்



25 ம் பக்கத் தொடர்ச்சி....

**யேர்மனியில் யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர்....**

தமிழ் ஏன் கற்கவேண்டம் என்பவர்கள், முதலில் தமிழின் சிறப்பை கற்றுணரவேண்டும்!
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் வெற்றிமணியில் தொடர்ச்சியாக தமிழர்பண்பாடு சார்ந்த கட்டுரைகளை எழுதிவருபவர். யாழ் வெற்றிமணியின் கௌரவ ஆலோசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது என்றார்.
தொடர்ந்து ஆசியுரைகளை சுவற்றா கனகதுர்க்கா அம்பாள் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஜெயந்திநாதக்குருக்கள், கம்காமாட்சி அம்பாள் ஆலய குரு சிவஸ்ரீ பாஸ்கரக்குருக்குகள் ஆகியோர் நிகழ்தினர்.
வாழ்த்துரைகளை ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன் கலாநிதி வானதி தேசிங்கராஜா அகரம் சஞ்சிகை முதன்மை ஆசிரியர் த.இரவீந்திரன், கவிதாஞானவாருதி கோசல்யா சொர்ணலிங்கம், முல்லைமோகன் (GTV) ,தமிழ்கல்விச்சேவை திரு.ஸ்ரீஜீவகன், சோஸ்ற் கலாச்சார அமைப்பு இந்து.தெய்வேந்திரம். ஆகியோர் வழங்கினர்.
யப்பானிய காதற் பாடல்கள் நூல் திருமதி தமிழ்மணி நகுலா சிவநாதன் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் பதிலுரை வழங்கினார்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களுக்கு வெற்றிமணியும் லண்டன் T.B.B. இசைக்குடும்பமும் இணைந்து ஒளிப்படம் ஒன்றினை தயாரித்து ஒளி மாலையாக வழங்கினர். வெற்றிமணி ஆசிரியர் எழுதிய திருமலையும் தும்பளையும் இணைந்து திருக்குறள்போல் வாழும் தூயவனே வாழ்க என்றபாடல் சஞ்ஜே சிவா அவர்களால் இசையமைக்கப்பட்டு பாடப்பட்டது.
உணர்வுமிக்க பாடல் காட்சிகளும் தாயகத்தையும் பவளவிழாநாயகனின் சிறப்பையும் சித்தரித்து இருந்தது.
பேராசிரியர் தனது பதிலுரையில் தமிழ் ஏன் நாம் கற்கவேண்டும் எனபதற்கு அகன்ற ஆழமான பல சிறப்பக்களைக் கூறி. இந்தச்சிறப்புகளை சிறார்கள் அறியவேண்டும். அப்படி அறிந்துகொண்டால் மட்டுமே தமிழ் கற்றவேண்டும் என்ற ஆவல் வரும். அதனை உருவாக்குவது பெற்றோரதும் அசிரியர்களதும் ஊடகங்களதும் கடமையாகும் என்றார்.
விழாவில் முத்தான கலைநிகழ்வாக நடன ஆசிரியை ரெஜினி சத்தியகுமாரது மாணவனும் மகனுமாகிய நிமலன் சத்தியகுமாரது பரத நிகழ்வு இடம் பெற்றது.
விழாவில் வெற்றிமணி சிறந்த இளம் கலைஞர்களுக்கு வளர்கலைவிருது வழங்கி கௌரவித்தது. மேற்படி விருதினை பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.வளர்கலை விருது பெற்றவர்கள் விபரம்:

**பரதம்: நிமலன் சத்தியகுமார்**
**நிலழ்படம்: அபிராமி சக்திவேல்**
**ஓவியம்:வைஸ்ணவி ஜெகன்மோகன்**
Face of Germany (அழகுக்கலை) **நர்த்தனா ,கீர்த்தனா மனோரஞ்சன்**

(வளர்கலை விருது பங்குனி 8 பெண்கள் தினம் என்பதனை மனதில் நிறுத்தி கலைகளில் குறிப்பாகப் பெண்கள் பலர் தெரிவுசெய்யப்பட்டு இருந்தனர்.)
விழாமண்டபத்தில் திரு அன்ரன் யோசவ் அவர்களால் நீண்டகாலமாக சேகரித்த இலங்கைக்காசுகள் பற்றிய விபரங்கள் காசுகளுடன் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது. தமிழர்தொடர்பான ஆவணங்களை சேகரித்து வரும் திரு.அன்ரன் அவர்களிடம் பிரதமவிருந்தினர்கள் முன்னிலையில் வெற்றிமணி வெளியீடான சிவத்தமிழ் சஞ்சிகையின் 10 ஆண்டு தொகுப்பு ஆவாணம் கையளிக்கப்பட்டது.மேற்படி ஆவணம் யாழ் நூலகத்திற்கும் சென்ற ஆண்டு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
விழாவில் சிறப்புக் காட்சியா வெற்றிமணி T.B.B.இணைந்து தயாரித்த என்னவளும் சிதையே திரையிடப்பட்டது. படத்திற்கு இசையை சஞ்ஜே சிவா அளவாக அற்புதாமாக அமைத்திருந்தார். படத்தினை சம்பத்குமார் (தமிழ்நாடு) இயக்கியிருந்தார். பாடல்களை சேவியர் அவர்கள் எழுதியிருந்தார்கள். எல்லோர் மனதையும் கொள்ளை கொண்ட இத்திரைப்படம், நிச்சமாக தாயகத்தில் திரையிடப்படவேண்டும் அங்குள் குறிப்பாகப் பெண்களுக்கும் ஆண்களுக்கு உயர்வன ஒரு கருத்தினை இதன் மூலம் விதைக்க முடியும் என்று முனைவர் மனோன்மணி சண்முதாஸ் அவர்கள் குறப்பிட்டார்கள்.

என்னவளும் சீதையே படம் பற்றிய கருத்துக்களை பண்ணாகம் இணையத்தள ஆசிரியர் கிருஸ்ணமூர்த்தி எடுத்துரைத்தார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் உன்னதமான படைப்பு இசை படத்துடன் நகர்கின்றது. இசை அமைப்பாளர் சஞ்ஜே சிவாவிற்கு வாழ்த்துக்கள் என்றார்: வெற்றிமணியின் அறிவிப்பாளர் சகநாயகன் சக்திவேல் விழாவை சிறப்பாக தொகுத்து வழங்கினார். யேர்மனியில் வெற்றிமணி தன் இலக்கியப் பயணத்தில் பேராசிரியருக்கு எடுத்த பவளவிழா ஒரு உயர்வான பாதிவாகிவிட்டது பெருமகிழ்வுக்குரியதாகும்.



**வெற்றிமணி வளர்கலை விருது**






**திருக்கணித ஜோதிடம்**


ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

bcntravels@hotmail.de,consultingnetwork@hotmail.de
BCN·TRAVELS
Consulting Network
Travels·Business·Worldwide
Öffnungszeiten: Mo-Sa 10:00-19:00 Uhr
கோடைகால விடுமுறைக்குரிய விமானச்சிட்டைகள்
முற்பதிவு ஆரம்பமாகிவிட்டது
இலங்கை, இந்தியா, கனடா உட்பட அனைத்து நாடுகளுக்கும் சலுகை விலையில் விமானச்சிட்டைகள்...
Ria
துரித பணமாற்றுச் சேவை
நம்பிக்கையும் நாணயமும் சலுகையும் ஒரே இடத்தில்
BCN Travels // Consulting Network (TBW) UG // Inh. Rasan Sivalingam // Rheinische Str. 72, 44137 Dortmund
Tel.: 0231-10876361, 0231-58440763, 0231-98539416 // Fax: 0231-10876362 // Mobile: 0163-8714369




Ragu Dharmaratnam ACMA, CGMA
email: ragu.savetax@gmail.com



## 18 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான முதலீடு

### Investing for Children and new Pension freedom

முகப்பு

18வயதிற்கு உட்பட்ட தங்களது பிள்ளைகளுக்கு Junior ISA, Bond, Child Sipps போன்ற முறைகளில் முதலீடுகளை பெற்றோர்கள் மேற்கொள்ள முடியும். இதனை மேலும் விபரமாக கீழே அவதானிப்போம்.

**Junior ISA**

Junior ISA என்பது ஒரு நீண்டகால சேமிப்பு திட்டமாகும். இங்கிலாந்தில் வசிக்கும் 18 வயதிற்கு உட்பட்ட எவரும் அவர்களிடம் Child trust fund account என்பது இல்லாத பட்சத்தில் Junior ISA ஐ ஆரம்பித்து சேமிப்பு திட்டத்தை நடைமுறைப் படுத்தலாம். Junior ISA ல் உள்ள பணம் அந்த பிள்ளைக்கு உரித்தானது ஆனால் எவரும் இந்த பிள்ளைக்காக இந்த சேமிப்பு பணத்தை செலுத்த முடியும்.

### Junior ISAவின் மிக முக்கியமான நடைமுறைகள்:

- 2015/16 வரி ஆண்டில் £4080 வரை முதலீடு செய்யலாம்.
- இதன் மூலம் கிடைக்கும் வருமானம் / இலாபம் என்பவற்றிற்கு வரி செலுத்த தேவையில்லை.
- பிள்ளைக்கு 18 வயது வரை ISA வில் உள்ள பணத்தை மீறப் பெற்றுக் கொள்ள முடியாது.

உதாரணம: குமார் என்பவர் தனது மகள் 4 வயதாக இருக்கும் பொழுது Junior ISA ல் ஒரு வருடத்திற்கு £4000 முதலீடு செய்திருந்தார் பின் 18 வயதில் மொத்தமாக £56000 அத்துடன் வட்டியையும் சேர்த்து பிள்ளையின் University படிப்பிற்கு உபயோகிக்க முடியும். இந்த £56000 ற்கு எந்த வரியும் செலுத்த தேலையிலலை.

**Bond**

Children's bond முதலீடு என்பது வரிவிலக்கான (tax-free) ஒரு சிறந்த முதலீட்டு முறையாகும். ஆகக் கூடிய முதலீட்டு limit £3000 per issue ஐந்து வருடங்களுக்கு மட்டும். ஐந்து வருடத்தின் பின்னர் இந்த bond value ஐ திருப்பி மீளப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது இன்னும் ஒரு bond ல் மேலும் 5 வருடங்களுக்கு முதலீடு செய்ய முடியும்.

உதாரணம்: ரவி தனது பிள்ளை அரவிந்தாவின் பெயரில் £3000 பணத்தை "Issue 35 Children's Bonus Bond" என்ற முதலீட்டில் முதலீடு செய்கிறார். இந்த bond 2.50% AER வட்டியை ஐந்து வருடத்திற்கு என fixed ஆகக் கொடுக்கும். எனவே ஐந்து வருடத்தின் பின்னர் இந்த bond ன் மதிப்பு £3394 இதன் மூலம் ரவி £394 பணத்தை வரி செலுத்தாது தனது மகனின் பெயரில் சேகரித்துள்ளார்.

## CHILD SIPPS

Child SIPP எனறால் பெற்றோர்கள் தமது பிள்ளை பிறந்தவுடன் பிள்ளையின் பெயரில் pension முதலீட்டை ஆரம்பிப்பது ஆகும். இதனை. Self Invested Personal pension அரசாங்கத்தால் கிடைக்கும். அதாவது நீங்கள் ஒரு வருடத்திற்கு £2800 செலுத்தினால் உங்களுக்கு tax relief உடன் சேர்த்து £3500 கிடைக்கும்.

## New SIPP Pension freedom from 6/4/15

55% pension "death tax" இனி அமுலில் இல்லை.

April 6ம் திகதி முதல் எவரும் தங்களுடைய SIPP Pension முதலீட்டு பணத்தை inheritance tax செலுத்தாமல் பெற்றுக்கொள்ள முடியும். நீங்கள் 75வது வயதிற்கு முன்னர் மரணம் அடைந்தால் எந்த pension withdrawal ற்கும் வருமான வரி செலுத்தத் தேவையில்லை.

நீங்கள் இதுவரை மரணம் அடைந்த பின் எவர் உங்களுடைய SIPP pension ற்கு உரிமையாளர் என nominate பண்ணாமல் இருந்தால் "expression of wish form" என்ற பத்திரத்தை பூரணப்படுத்தி இதனை அமுல் படுத்த முடியும்.

15வதுஆண்டு நிறைவான சேவை!

Kaneen electronics

Internet-sat,Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில் பெற்று பயனடையுங்கள்

அனைத்து தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஒளிபரப்பவேண்டுமா!எம்மை நாடுங்கள்.

Schevenhoferweg-24
42111 Wuppertal
Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de






# தலையெழுத்து



**பேராசிரியர் அ.சண்முகதாஸ்**

ஏதாவது பேரிடர் ஏற்பட்டால் அவ்விடராலே தாக்குண்டவரின் தலையெழுத்து அப்படியாகிவிட்டது என்று நாம் கூறுவது வழக்கம். பிரமன் நம்மையெல்லாம் படைக்கும்போது நம்முடைய தலையிலே நம் விதியினை எழுதிவிடுகிறானாம். அதனை யாராலும் அழிக்கமுடியாது என நம்மவர்கள் நம்புவது உண்டு. ஆனால் அருணகிரிநாதர் என்னும் முருகபக்திக் கவிஞர் இந்தத் தலையெழுத்தையும் மாற்றியமைக்கலாம் என்று சவால் விடுகிறார்.

தலையெழுத்து அழிந்துபோவதைக் கூறு முன்னர் வேறு சில அழிவுகளை முதலிலே அருணகிரியார் கூறுகின்றார். சேல் எனப்படும் பயிரழிப்புப் பூச்சியினாலே திருச்செந்தூர் வயல்களெல்லாம் அழிந்தனவாம். காதல் மயக்கத்தினாலே பூங்கொடி போன்ற பெண்களுடைய மனங்கள் அழிந்தனவாம். பெரிய மயில்மீது உலாவரும் முருகப்பெருமானுடைய வேலாயுதம் பாய்ந்து கடலும் சூரனும் கிரௌஞ்ச மலையும் அழிந்துபோயின. அப்பெருமானுடைய கால் என் தலைமேலே பட்டு பிரமன் எழுதிய எழுத்து முற்றாக அழிந்துபோய்விட்டது. கந்தரலங்காரத்தில்

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடியார் மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையும் சூரனும் வெற்பும்அவன்
கால்பட் டழிந்தது இங்குஎன் தலைமேலயன் கையெழுத்தே.

என்று அருணகிரியார் பாடுகிறார்.

கல்வெட்டுகளை கல்வெட்டியலார் கண்டுபிடிப்பது போல தலையினுள்ளும் தலையெழுத் துக்கள் இருப்பதை என்றாவது விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்களோ தெரியவில்லை. அது வரையும் அருணகிரியார் கூறியதில் நம்பிக்கைகொள்வோம்.

## நிகழ்வின் நிழல்கள்



**யேர்மனியில் வெற்றிமணி ஆதரவில் 29.03.2015 நடைபெற்ற முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் "யப்பானிய காதற் பாடல்கள்" நூல் அறிமுகவிழாவில் இருந்து சில காட்சிகள்.**






சிறுகதை

சுருதி

# ஃபொலோ மி ! Follow me

ரி.வி.யில் “டிஸ்கவரி சனல்“ பார்த்துக் கொண்டு, இறைச்சி வெட்டும் கத்தியை தீட்டிக் கூர் பார்த்துக் கொண்டிருந்தார் “இஞ்சாருங்கோ“. 120cm LCD ரி.வி. அவரின் கால்மாட்டின் கீழ் இருந்த சின்ன “ஷெல்“ சிணுங்கியது.

”ஹலோ! ஹலோ!! இஞ்சாருங்கோப்பா. பாதையை தவற விட்டிட்டன்.”
”மஞ்சுவை ரியூசன் சென்ரலிலை விட்டிட்டீரா? அதை முதலிலை சொல்லும்.”
”ஓமப்பா. விட்டிட்டு வெளிக்கிடேக்கைதான் இந்த உபத்திரவம்.”
”மஞ்சுவை விட்டது நல்லதாப்போச்சு. சரி. உதிலை காரை விட்டிட்டு பக்கத்திலை இருக்கிற றோட்டு ஒண்டின்ர பேரைச் சொல்லும். நான் எப்பிடி வாறதெண்டு “மெல்வே“யைப் பாத்துச் சொல்லுறன்.”

”ஏதோ “சனிசைட்“ எண்டு எழுதிக் கிடக்கு.”
”போயும் போயும் சனியன்ர சைட்டுக்குள்ளையே நிக்கிறீர். அது “சனிசைட்“ இல்லையப்பா “சணிசைட்“. சரி சரி உம்முடைய மெல்வேயிலை 59 J2 ஐப் பாரும். அதிலை இருந்து “பேர்க் றோட்டுக்கு“ வாரும். அப்பிடியே நேரை பிடிச்சுக் கொண்டு வந்தால் “பிறின்சஸ் கை வே“ வரும். பிறகு உமக்குத் தெரியும்தானே!”
”எந்தப்பக்கமா வாறது? எல்லாமே செய்வினை சூனியம் செய்துவிட்டது மாதிரி றோட்டெல்லாம் கிளறிவிட்டுக் கிடக்கு. இடப்பக்கமா? வலப்பக்கமா?”
”பதினெட்டு வருஷமா மெல்வே பாக்கிறீர். இன்னும் உமக்கு பாக்கத் தெரியாமல் கிடக்கு.”

”சரி. ஏதாவது ஈஸியாக் கண்டுபிடிக்கிற மாதிரி இருந்தாச் சொல்லுங்கோ. இல்லை விடுங்கோ”
”உப்பிடியே காரை எடுத்து ஓடும். கிட்டடியிலை வாற பெற்றோல் ஸ்ரேசனிலை போய்க் கேளும்.“

இராசலட்சுமி காருக்குள் வந்து ஏறினாள். அவள் கிளிப்பிள்ளை மாதிரி. சொல்லிக் குடுத்ததைத்தான் செய்வாள். மகள் மஞ்சுவின் ரியூசன் சென்ருக்கு போக வர, மூண்று தரம் கார் ஓடிப் பழகி இருந்தாள். அந்த “றெயினிங்“குடன் போய் வரும் பாதையை கச்சிதமாகப் பிடித்துக் கொண்டாள்.

மகள் மூத்தவள் - பன்னிரண்டாம் வகுப்புப் படிக்கிறாள். உச்சப்படிப்பு நடக்கும் காலம். அடுத்தவன் மகன் - எட்டாம் வகுப்பு. அவனுக்குப் படிக்கிறதுக்கே நேரம் போதாது. இராசலட்சுமிதான் சாப்பாடு தீத்தி விடுவாள். அவன் படிச்சுக் கொண்டு இருக்கேக்கை ஒரு சைற்றாலை இராசலட்சுமி அவனுக்குச் சாப்பாடு ஊட்டி விடுவாள். அவன் ருசிச்சுச் சாப்பிடுறானோ, அரைச்சு செமிக்கச் சாப்பிடுகிறானோ ஆருக்குத் தெரியும். மற்றது கடைக்குட்டி பெண். நாலாம் வகுப்புப் படிக்கிறாள். அவளுக்கு படிப்பு அவ்வளவு கடுமை எண்டில்லை. அதாலை அவள் தானே அள்ளிச் சாப்பிடுவாள். ஏதாவது “சொப்பிங் சென்ருக்கு“ எண்டு சாமான்கள் வாங்கப் போனாலும் கடைசி இரண்டையும் எங்காவது ஒரு கரையிலை சொப்பிங் சென்ரரிலை இருத்தி விடுவாள் இ.லட்சுமி. அதுகள் இருந்து தங்கடைபாட்டிலை கணக்குச் செய்து கொண்டு இருக்குங்கள். இல்லாட்டி அதுகளின்ர நேரத்திலை அரை மணித்தியாலம் பாழ்.

இராசலட்சுமி பெற்றோல் ஸ்ரேசன் காணும் வரைக்கும் ஓடோடொன்று ஓடினாள். வடமராச்சியிலை ஓடி ஓடி எண்ணெய் வழிய வழியப் படிக்கேக்கைகூட இப்படிக் களைத்திருக்க மாட்டாள். பாதைகள் எல்லாம் இடியப்பச் சிக்கல்களாகி மறைந்தன. ஒரு பேப்பர் துண்டில் தனது வீட்டு விலாசத்தை எழுதிக் கொண்டு தனது “மெல்வே“யுடன் கடைக்குள் நுழைந்தாள்.
உள்ளே வெள்ளைக்காரப் பெடியன் ஒருவன் நின்றான். அடையாளம் வைச்சிருந்த 59ஆம் பக்கத்தைத் திறந்தாள். தனது விலாசத்தை அவனிடம் நீட்டி, தனக்குத் தெரிஞ்ச பாஷையில் கேட்டாள். அவன் மேலும் மூன்று பக்கங்களைத் திருப்பி 62ஆம் பக்கத்திற்குப் போனான். கையில் வைத்திருந்த சிவப்புப் பேனையால் ஒரு இடத்தில் வட்டம் போட்டு “யு ஆர் கியர்“ என்றான். இராசலட்சுமி திகைத்துப் போனாள். இவ்வளவு தூரம் ஓடிவிட்டேனா?

அவன் சொல்லிக் கொண்டே தனது சிவப்புப் பேனையால் உளுவான் மண்ணுக்குள்ளை படம் கீறுவது போல மெல்வே முழுக்கக் கீறினான். இ.லட்சுமியின் புது “மெல்வே“ பாழாகிப் போனது. அவனுடன் மேலும் பேச்சுக் குடுத்தால் “மெல்வே“ நாசம் எண்டதைக் கண்டு கொண்ட இ.லட்சுமி, அவன் சொல்லும் எல்லாத்துக்கும் “யா யா“ என்றாள்.

”இஞ்சாருங்கோ! அவன் சொல்லுற ஒரு இழவுமே விளங்குதில்லை.”
”உதுக்குத்தான் இங்கிலீசைப் படி படி எண்டு சொல்லுறனான். கலியாணம் செய்த புதுசிலை, கொழும்பிலை இருக்கேக்கை, “பொலோ மி“ படியும் எண்டு சொன்னன். கேட்டனீரே!”

”இன்னும் கத்தி தீட்டி முடியேல்லையே? எப்ப எடுத்தாலும் கறா கறா எண்ட சத்தம்தான்.”
இ.லட்சுமிக்கு “∴பொலோ மி“ என்ற சொல் வேதவாக்காகியது. ஒரு தீப்பொறியாகி மூளைக்குள் விழுந்தது. தனது “ஷெல் போனைத்“ தூக்கிக் கொண்டு திரும்பவும் பெற்றோல் ஸ்ரேசனுக்குள் ஓடினாள். ”கோல் ரக்ஷி” என்று தனது ரெலிபோனை அவனிடம் நீட்டினாள். அவனுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது. அவளின் பரிதாப நிலையும் புரிந்தது.

சற்று நேரத்தில் ஒரு வாடகைக்கார் அவள் நிற்கும் இடம் நோக்கி வந்தது. தனது முகவரியைக் கொடுத்து எவ்வளவு செலவாகும் என்று கேட்டாள் லட்சுமி. அவன் ”எவ்வளவு பேர்?” என்றான். லட்சுமி ”ஒருத்தருமில்லை. யு கோ! ஐ ∴பொலோ” என்றாள்.

அவன் “ரக்ஷி“யைச் செலுத்த, இராசலட்சுமி அதைப் பின் தொடர்ந்தாள். “பிறின்சஸ் கை வே“ வந்ததும் இராசலட்சுமிக்கு இடம் பிடிபட்டுக் கொண்டது. அவள் அவனிற்கு கையைக் காட்டிக் கொண்டே “ஓவர் டேக்“ செய்து அவனுக்கு முன்னால் காரை எடுத்தாள். “இவள் ஏதோ தன்னை ஏமாற்றப் பார்க்கின்றாள்“ என்ற தோரணையில் அவளின் பின்னாலே கலைத்துக் கொண்டு போனான் ரக்ஷிக்காரன்.

கடைசியில் வீட்டிற்குக் கிட்டவாகவுள்ள ஒரு ஒதுக்குப் புறத்தில் “ஹசாட் லைற்றை“ப் போட்டு காரை நிற்பாட்டினாள் லட்சுமி. 40 டொலரை அவனுக்குக் கொடுத்துவிட்டு வீட்டிற்குள் நுழைந்தாள். தீட்டிய கத்தியைப் பதம் பார்த்துக் கொண்டே ரி.வி. க்கு முன்னால் இருந்த “இஞ்சாருங்கோ“ எழும்பினார்.

”இவ்வளவு நேரமும் ரி.வி.க்கு முன்னாலேயே இருந்தனியள்?” கோபத்துடன் கர்ச்சித்தாள் இராசலட்சுமி.
”என்னண்டு வலு கெதியா வந்தனி?” ஆச்சரியத்துடன் கேட்டார் “இஞ்சாருங்கோ“.
”ஏன் நான் என்ன படு மொக்கு எண்டு நினைச்சியளாக்கும்!” அவன் அவளைக் கூர்ந்து பார்த்தார்.

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main




சிவராம்

# ஆண் பெண் நட்பு காதலாக மாறுவதற்கான காரணம்!

ஆண் தோழன், பெண் தோழி என்ற வித்தியாசங்கள் கடந்து, நட்பு என்ற வட்டத்தின் எல்லை கடக்கத் தூண்டும் பதின்பருவத் தீண்டல்கள். விரும்பியவர்களிடத்தில் மனம் சில விதி களை மீற விரும்பும். எதிர் பாலின நட்பில் மட்டும் மனம் ஆயிரம் ஜாலம் காட்டும்.நட்புக்கும் காதலுக்கும் எது எல்லைக் கோடு? எதைக் கடந்தால் காதல்? உறக்கம் தொலைக்க வைக்கும் உணர்வை, உறவை, உளவியலைப்பற்றி உளவியல் நிபுணர்கள் என்னசொல்கின்றார் களெனில்,“இவையிவைதான் நட்பின்கட்டுப்பாடுகள் அல்லது எல்லைக்கோடுகள்' என்று ஆண்-பெண்உறவைத் தெளிவாக வரையறுக்கமுடியாது.

பலருக்கு நட்பும் காதலும் பாலும் நீரும் போலக் கலந்திருப்பதால் குழப்பத்திலேயே திளைப்பார்கள். ஓரளவுக்கு நெருங்கிப் பழகிய பிறகு தெரியாத நபரைவிட,தெரிந்த நபரே நல்லது என்று பெண்கள் உணர்கிறார்கள்.

நண்பர்களிடையே காதல் பூப்பதற்கு அடிப்படை நான்கு காரணங்கள்.

முதல் காரணம்:-
நெருக்கம். மிக அருகருகே இருப்பதால், அடிக்கடி பார்ப்பதால், பேசுவதால் காதல் ஏற்படும்.

இரண்டாவது காரணம்:-
நிறம், நடை, உடை, பாவனை, பிடித்த விஷயங்கள், கோட்பாடு, கொள்கை,சினிமா, வேலை எனஇருவருக்குமே ஒரே மாதிரியான கருத்து ஒத்திசைவால் ஏற்படும் காதல். பரஸ்பர உதவி, அக்கறை காரணமாக ஏற்படுவது.

மூன்றாவது காரணம்:-

உதாரணத்துக்கு, பிறந்த நாள் வாழ்த்து சொல்வது, பரிசுப் பொருள் வழங்குவது, உடல்நலம் இல்லாத சமயம் கவனித்துக்கொள்வது போன்றவற்றால் காதல் அரும்பலாம். நான்காவதாக:- இரு பாலினத்தவரும் எதிர்பாலினத்தவர் மீது வைத்திருக்கும். உடல் ரீதியான கவர்ச்சி, அழகுணர்ச்சி ஆகிய காரணங்கள். பொதுவாக ஆண்கள், அழகான பெண்களைத்தான் காதலிப்பார்கள். நேர் எதிராகப் பெண்களோ, தன்மேல் அன்பாக, அக்கறையாக, மனம் குதூகலிக்கப் பேசுபவனாக, தனக்குப் பாதுகாப்பாக இவன் இருப்பான் என்று எந்த ஆணை நினைக்கிறார்களோ அவர்களைத்தான் காதலிப்பார்கள்.

பெண்ணின் அழகைப் பார்த்து ஆணுக்குக் காதல் அரும்ப, ஆணின் அரவணைக்கும் குணமே பெண்ணுக்குக் காதலைத் தூண்டும் சக்தியாக இருக்கிறது.

ஆண் இன்னொரு ஆணுடன் பழகும்போது நட்புக்காகப் பணம், வேலை ஏன் உயிரையே கொடுக்கலாம். பெண் அதிகபட்சமாகத் தன்னையே கொடுக்க முடிவெடுப்பாள். வசதியான பெண், நன்றாகப் படிக்கும் ஏழைப் பையனுக்கு உதவ வேண்டும்என்று பரிதாபத்தில் பழகினால்கூட,'உன் மேலஇவ்ளோ அன்பு வெச்சிருக்காளே.மச்சான், இது சத்தியமா காதல்தான்டா' என்று அவனது நண்பர்களின் தூண்டுதலை அவனே நம்பத் தொடங்குவான். இது பெண்ணுக்குத் தெரிந்தால் அவளுக்குப் பேரதிர்ச்சிதான் மிஞ்சும். ஆண்காதல் சொல்லி பெண் ஏற்கவில்லை எனில், சொறி...இனிமே ப்ரெண்ட்ஸாவே பழகலாம்' என்று சொல்லி மறுத்தாலும்,அது அவன் அடிமனதில் வண்டல் மண் போலத் தேங்கி இருக்கும்.

அடுத்தடுத்து தொடர்ச்சியாகத் தன் காதலை சமயம் கிடைக்கும்போது எல்லாம் வெளிப்படுத்திக்கொண்டே இருப்பான். இறுதி வரை ஆணின் எண்ணம்மாறாது. ஆண் பெண் நட்பு கம்பி மேல் நடப்பதற்குச் சமம். அந்த நட்பில் அதிகம் பேசப் பேச நெருக்கம் அதிகமாகும்.

நட்பு, காதலாகும் என்ற உண்மையை, அதில் இருக்கும்நல்லது கெட்டதுகளை உணர்ந்து,இறுதி வரை நட்பாகவே இருக்கலாம்.அல்லது அந்த நட்பு காதலாகஉருமாறும் சமயம்அது உங்களுக்கு உண்மையாக, நம்பிக்கையான வாழ்நாள் துணையாகஇருக்கும் என்று நீங்கள் நினைத்தால், மேற்கொண்டு தொடரலாம்!”ஆண் பெண் நட்பு காதல் ஆவதில்தவறே இல்லை. அது ஒரு அதிகஅக்கறை. அதிக அன்பு. அதிகபுரிந்துணர்வு. போன்றவற்றின்வெளிப்பாடு தான். அவ்வாறு நட்பாக இருந்து ஒருவர்தனது காதலை சொல்லும்போது நீங்கள் நிச்சயமாக சிந்திக்க வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எதையும் யோசிக்காமல் ஒருவர் மறுக்கும் போது அது மறைந்துவிடுவதில்லை. மாறாக மரிக்க வைத்துவிடும்.


ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திதி 30.04.2015

தோற்றம்
25.09-1942

மறைவு:
09.05.2006

திருமதி ஞானேஸ்வரி.சிவஞானசுந்தரம்

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் தினம் உன் நினைவு மட்டும் என்றும்
எம்முடனேயே அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல நீயில்லை! உன் நினைவால்
வாடி வதங்குகின்றோம் இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள் இப்போ
செழித்து பூத்து குலுங்குகின்றன நினைவெல்லாம் நீயே தாயே! என்றும் உன்னை
மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல்.சு.சிவஞானசுந்தரம் யேர்மனி டோட்மூண்ட் Handy: 0176 69 366 433





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர் சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304- 910 9445- 0177 20 16 941
Tel: 02304/ 16721
Robert koch Str.5- 58239 Schwerte



Milin Impex GmbH
Dortmund நகரில்
இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்
Web :www.milinimpex.de





Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen

Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# திரை உலகம்

## திருட்டுக்கதை என்பதும் தழுவல் என்பதும் இன்று படத்திற்கு இலவச விளம்பரமாச்சு

இன்று எந்த யம்பவான் இயக்கிய, அல்லது நடித்தபடமாக இருந்தாலும், படம் ஒரு முறை இது திருட்டுக்கதை என வழக்கைச்சந்திப்பதும், அல்லது இப்படம் இந்த ஆங்கிலப்படத்தின் காப்பி அதாவது தழுவல் என்பதும் சகஜமாகிவிட்டது.

இது திருட்டுக்கதை என்பது குறுக்குவழி விளம்பரமும்கூட. படத்தைப்பற்றி பேசவைக்க எதுவேண்டுமானாலும் புரளி கிழப்பிவிடலாம் என்றாகவிட்டது.



அன்று வெளிவந்த படங்கள் பாடல்கள் பல ஆங்கிலப்படத்தின் காப்பிதான், தழுவல்தான், என்று இப்போ காணமுடிகிறது. அதனை நிரூபிக்கவும் முடிகிறது. இது கூகிள்செய்த வேலை. அன்று ஆங்கிலம் வெளிநாடு என்றால் இன்று உள்வீடாச்சு!

ஒன்று இல்லாமல் மற்றொன்று உருவாகுமா? எதோ ஒரு தூண்டல் எங்கிருந்தோ பிறந்தாகவேண்டும். தழுவுவதும் சாதாரண வேலை அல்ல. அப்படி என்றால் எத்தனை படங்கள் வெற்றிபெற்று இருக்க வேண்டும்.

மணிரத்னம் இயக்கத்தில் துல்கர் சல்மான், நித்யாமேனன் நடித்து திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது ஓகே கண்மணி படம். இயக்குநர் மணிரத்னத்தின் மனைவியும், நடிகையுமான சுஹாசினி, 'மவுஸ் பிடிக்கத் தெரிந்தவர்கள் எல்லாம் விமர்சனம் எழுதுகிறார்கள்" எனத் தெரிவித்த கருத்தை, சற்று ஓரம் தள்ளி வைத்து விட்டு நமது ரசிக கண்மணிகள் இப்படம் குறித்த தங்களது விமர்சனங்களை இணையத்தில் பதிவு செய்து வருகிறார்கள். என்ன ஆச்சரியம்.. சுஹாசினியே எதிர்பாராத அளவுக்கு பலரும் சிறப்பாக எழுதி வருகின்றனர். ஆனாலும், ஊடுருவும் கண்களை வைத்துப் பார்ப்போர் வழக்கம் போல இதிலும் ஒரு குற்றம் கண்டுபிடித்துள்ளனர். அதாவது ஹாலிவுட்டில் வெளியான "பிரண்ட்ஸ் வித் பெனிபிட்ஸ்" படத்தின் சாயல் தெரிவதை பலரும் கண்டுபிடித்து எழுத



ஆரம்பித்துள்ளனர். பிரண்ட்ஸ் வித் பெனிபிட்ஸ்... இந்த இரண்டு படத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதை மறுக்க முடியாதுதான். ஓகே கண்மணியைப் போலவே திருமணத்தில் ஈடுபாடில்லாத ஆணும், பெண்ணும் காலப்போக்கில் எவ்வாறு காதலித்தார்கள், பின்னர் கணவன், மனைவி ஆக முடிவெடுத்தார்கள் என்பது தான் பிரண்ட் வித் பெனிபிட்ஸ்-ன் கதையும்.

காதலில்லை... அதுக்கும் மேல இரண்டு படங்களிலும் காதலிக்காமல், திருமணம் செய்து கொள்ளும் ஆசையில்லாமல் இருவரும் சேர்ந்து ஜாலியாக சுற்றுகிறார்கள். மன ரீதியான உணர்வுகளை ஒதுக்க வைத்து விட்டு, உடல் ரீதியான உறவுக்கு மட்டும் முக்கியத்துவம் தருகிறார்கள். பின்னர் ஒரு கட்டத்தில் ஒருவரை ஒருவர் நேசிப்பதை உள்ளூர உணர்ந்து கொள்கிறார்கள்.

அல்சைமர்... பிரண்ட்ஸ் வித் பெனிபிட்ஸ் படத்தில் நாயகியின் அப்பாவுக்கு அல்சைமர் நோய். அவரைப் பார்த்து நாயகி மீது காதல் கொள்கிறார் நாயகன். ஓகே கண்மணியில் இது உல்டாவாக, நாயகன் தங்கியிருக்கும் வீட்டு உரிமையாளரின் மனைவிக்கு அல்சைமர். தன் மனைவி மீது பிரகாஷ்ராஜ் காட்டும் அன்பைக் கண்டு காதல், மண வாழ்க்கை மீது நாயகன், நாயகி இருவருக்கும் பிடிப்பு ஏற்படுகிறது.

எதுவுமே தப்பில்லை... இரண்டு படங்களிலுமே திருமணம் செய்து கொள்ளாமல் உறவு கொள்வது தவறில்லை என்கிறார்கள் நாயகனும், நாயகியும்.
ஆனால்,

இறுதியில் உண்மையான அன்பில் இணைகிறார்கள். இந்த இரண்டு படங்களுக்கும் நிறைய ஒற்றுமை இருப்பதை சொல்லித்தான் தீர வேண்டியுள்ளது....காப்பியா.. இல்லை இன்ஸ்பிரேஷனா.. அதை மணிதான் சொல்ல வேண்டும்!

தனது ஓ காதல் கண்மணி பெரிய வெற்றியைப் பெற உதவிய மீடியா உலகுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார் மணிரத்னம். மணிரத்னம் இயக்கிய 'ஓ காதல் கண்மணி" திரைப்படம் வெளியாகி உலகம் முழுவதும் நல்ல வரவேற்புடன் ஓடிக் கொண்டுள்ளது. இப்படம் குறித்து ஆக்கப்பூர்வமாக விமர்சனம் எழுதிய அனைத்து ஊடகங்களுக்கும் நன்றி தெரிவித்து மணிரத்னம் கடிதம் எழுதியுள்ளார்.


Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101

Asiatischer Super markt

ஆசியா சமுத்திரம்




Ria

VALUTRANS

துரித பணமாற்றுச் சேவை
Money Transfer


பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேயான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.





Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:0178 60 68 780

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399


Rathy Jewellers Ltd
The Leading Jewellery store in London with the largest selections
அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!
28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063
எப்பொழுதும் நியாயவிலை புத்தம் புதுநகைகள்!
Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm
209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


Logan Accountants Ltd
மிகக்குறைந்த கட்டணம் மனம் நிறைந்த சேவை
Milton Keynes Business centre,
Suite 115 Foxhunter Drive
Linford wood
Milton Keynes
MK14 6GD
U.K
jeya@loganltd.co.uk


# முதியவர்களின் மறுபக்கம்!



## புவனம் தர்மரட்ணம்!

லண்டனில் பெரிய வீடுகள், கார்கள்,வைத்துதுக்கொண்டு தாங்கள் ஓடித் திரிகினம். அப்பா, அம்மாவை பிளாட்டுகளில் தள்ளி விட்டிருக்கினம். என தாயகத்தில் இருக்கும் நம்மவர்களின் கருத்து உள்ளது.

ஆனால் வெளி நாடுகளில் இருக்கும் சில முதியோரின் கருத்து இதற்கு மாறாக இருக்கின்றது. இது தான் எங்களுக்கு ஒத்துப் போகிறது என்பதே பலரது கருத்தாகவும் உள்ளது.

பிளாட்டுகளில் தனிய இருப்பதில் கஷ்டம் தெரிவதில்லை. 65 வயதிற்கு மேற் பட்ட சினேகிதர்கள், உறவினர்கள் இருக்கிறார்கள். எங்களது சுய வேலைகளை நாங்களே செய்து கொள்ள நல்லதொரு தருணம். படுக்கையில், சக்கர வண்டி என்றால் பிள்ளைகளும் விட மாட்டார்கள். நாங்களும் ஏன் போக வேண்டும்.

பிள்ளைகளுக்கு வேலைச் சுமை, வீட்டு வேலைகள், பிள்ளைகளின் படிப்பு, ரியூஷன் என ஏகப்பட்ட வகுப்புகள் காலில் சக்கரம் பூட்டியது போல் ஓடித் திரியும்வாழ்க்கை. இப்படித் தான் வெளி நாட்டுச் சீவியங்கள். இங்கு உள்ளவர்களுக்குத்தான் தெரியும். அவர்களும் வேலைக்குப் போய் விட்டால் நாலு சுவர்களுக்குள் இருந்து கொண்டு எவ்வளவு நேரம் தொலைக் காட்சி பார்ப்பது.

பிளாட்டுகளில் என்றால் தினம் ஒருத்தரையாவது சந்தித்துப் பேசுவோம். பின்னேரங்களில் பக்கத்து வீட்டில் இருந்து சில சமயம் வடை முறுக்கு கேக் என ஏதாவது சிற்றுண்டி வரும். சனி ஞாயிறு என்றால் சொல்லவே தேவையில்லை. நாங்களும் எங்கடை கை வரிசையைக் காட்டிப் போடுவோம்.

ஏதும் விஷேஷம் எனில் பின்னேரங்களில் ஆளுக்கொரு சிற்றுண்டி தயாரித்து வைத்து ஒன்று கூடி சாப்பிடும் போது ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்கிறத்திலேயும், ஆதரவு காட்டுறத்திலேயும் சரி நாங்கள் மெய் மறந்து பூரித்துப் போவோம்.

இங்கு இரயில், பஸ் இல் பிரயாணம் செய்வதற்கு வயதானவர்களுக்கு இலவச பஸ் பாஸ் உண்டு. நாங்கள் சேர்ந்து எங்ளுக்குத் தேவையானவற்றை வாங்குவதற்குப் போவோம். முதியோருக்கென சிறியதாக பஸ்களும் உண்டு. முன் கூட்டியே பதிவு செய்தால் வீட்டுக்கு வந்துபோக வேண்டிய இடத்துக்கு அழைத்துக் கொண்டு போய் திரும்ப அழைத்து வந்து விடுவார்கள்.

மூத்தோர் சங்கங்களும் உண்டு. பிளாட்டில் உள்ள நாங்களும் வேறு இடங்களிலும் இருந்து முதியோர்களும் வருவார்கள். உனக்கு சிறகுகள் உண்டு பறந்து வெளியில் வா என்பது போல் அவர்கள் விதம், விதமான பட்டுச் சேலைகளை உடுத்துக் கொண்டு வரும் அழகு இருக்கிறதே முதியோர் எனச் சொல்லா முடியாத அளவிற்கு கம்பீரத்தையும் மகிழ்ச்சியையும் அவர்கள் முகத்தில் காணலாம்.

அங்கு விஷேஷம் என்னவென்றால் டாக்டர்கள், நேர்ஸ், ஆலோசகர்கள் என பல துறைசார்ந்தவர்களும் வந்து முதியோருக்கான அறிவுரைகள், ஆலோ சனைகளை நகைச் சுவையாகவும் கூறி எங்கள் சந்தேகங்களை தெளிவு படுத்தும் போது புத்தியும் தெளிவாகிறது.



மேலும் உடற்பயிற்சி, விளையாட்டுப் போட்டிகள், பிறந்த நாள் கொண்டாட் டங்கள், விஷேஷபண்டிகைகள் என களை கட்டும். மதிய உணவின் போது அசை போட்ட படி தங்கள் பால்ய கால நினைவுகளை கிண்டலடித்துச் சேர்ந்து சாப்பிடும் போது இருக்கிற சந்தோஷம் மனச் சுமை அத்தனையும் பஞ்சாய் பறந்திடும் .கோச்சுகளும் ஒழுங்கு செய்து சுற்றுலா, ஆலயங்கள், பீச் என பல இடங்களையும் சுற்றிக் காட்டுவார்கள். கறுப்பு வெள்ளைப்படங்கள் பார்க்கும் போது

இன்னும் சொல்லப் போனால் கலை நிகழ்ச்சிகள், நாடகம், பட்டி மன்றம் என நாங்கள் பங்கு பற்றுவோம். தலைமை ஏற்க வி.ஐ.பீ யை அழைத்து கொண்டாடுவோம். நடுவரே வியந்து போகும் அளவிற்கு விவாதம் சூடு பிடித்து இடம் பெறுவதைப் பார்த்த நடுவரே தங்கள் பேச்சாளர்கள் தோற்றுப் போய் விடும் அளவிற்கு பிரமாதம் என சிறந்த பாராட்டுக்களும் கிடைக்கும். இங்கு நடை பெறும் நிகழ்ச்சிகளில் பரிசுகளும்கிடைக்கும்.

இந் நிகழ்ச்சிகள் தொலைக் காட்சியிலும் இடம் பெறும். இதை ஒளிப்பதிவு செய்து தங்கள் உறவினர்களுக்கு அனுப்பி பாராட்டுக்கள் கிடைக்கும் போது உற்சாகம் அடைகின்றனர்.

கவுன்சிலர்கள், மந்திரி என அழைப்பை ஏற்று வந்து சிறப்பித்து பரிசுகள் வழங்குகிறார்கள்என்றால் பாருங்களேன்.

வயது என்பது எண்ணிக்கை இல்லை. நாங்கள் ஓட்டப் போட்டிகளிலும்பங்கு கொண்டு ஓடும் போது பார்வையார்களே பார்த்து வியக்கும் விதத்தில் சேலையைத் தூக்கி சொருகி காற்றைக் கிழித்துக் கொண்டு ஓடுவதைப் பார்த்து கை தட்டி பி. டி. உஷா வை மிஞ்சி விடுவார்கள் என ஊக்கப் படுத்துவார்ள். இவை எங்களுக்கு எனேர்ஜி தரும் இரகசியங்கள்.